கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI 24.2.2002
ரூ. 6.00



அம்மாவுக்கு அட்வைஸ்!

குடும்பத்தின் ஆரோக்கியத்தை சிறப்பாகப் பாதுகாக்கும் முதல் டிஷ்வாஷ் பார்.



பாக்டோகார்டு அடங்கிய ஒரே ஆன்ட்டி பாக்டீரியல் டிஷ்வாஷ் பார் "எக்ஸோ"

கூடுதல் சுகாதாரம், கூடுதல் பளபளப்பு

நீங்கள் தற்போது கிடைக்கும் டிஷ்வாஷ் பார்கள் அல்லது பவுடர்கள் பயன்படுத்தும்போது:

- இவைகளில் பாக்டீரியாக்களை எதிர்க்கும் மூலப்பொருட்கள் எதும் இல்லை என்பதை அறிவீர்களா?
- உங்கள் கையில் சொரசொரப்பையும், வறட்சியையும் நீங்கள் உணரவில்லையா?
- இவைகளை தொடர்ந்து பயன்படுத்துவதால் உங்கள் கைகள் சொரசொரப்பாகவும், வறட்சியாகவும் ஆகிவிடுகின்றன என்பதை நீங்கள் உணரவில்லையா?
- உங்கள் நகத்தைச் சுற்றி வலியை நீங்கள் உணரவில்லையா?
- மண் போன்ற இவைகளில் உள்ள சிறுசிறு கற்கள் போன்ற துருணைகளால் உங்கள் பாத்திரங்களில் கீறல்கள் ஏற்பட்டு அவை நீடித்து உழைப்பதில்லை அல்லவா?
- நீங்கள் மேலும் அதிக சோப் பயன்படுத்த வேண்டி வருகிறது அல்லவா?

எக்ஸோ ஆன்ட்டி-பாக்டீரியல் டிஷ்வாஷ் பாரின் சிறப்பம்சங்கள்:

- எக்ஸோ எந்த விதமான கடினமான எண்ணெய் பிசுக்குகள் அல்லது அழுக்கான பகுதிகளையும் பாத்திரங்களில் சுத்தம் செய்வதுடன் கிருமிகளையும் அழிக்கிறது.
- எக்ஸோ பயன்படுத்தும்போது நீங்கள் அதிகமாக சிரமப்பட வேண்டியதில்லை. மேலும் பாத்திரங்களை மிக நன்றாக சுத்தப்படுத்துவதுடன் பளிச்சிட செய்கிறது.
- எக்ஸோ இனிய நறுமணம் கொண்டது.
- எக்ஸோ உங்கள் கைகளின் சருமத்தை பாதுகாக்கிறது, மென்மையாக விளங்கச் செய்கிறது.
- எக்ஸோ மிக சிக்கனமே பயன்படுத்த வேண்டும். ஒரே ஒரு எக்ஸோ டிஷ்வாஷ் பார் மூலம் நீங்கள் ஏராளமான பாத்திரங்களை சுத்தம் செய்யலாம். அவைகள் பளிச்சிடுவதுடன், கிருமிகள் அற்றதாகவும் இருக்கும். சாதாரணமான இதர தயாரிப்புகளை விட தரமானதாக மலிவானதாக விளங்கும். இது இதற்காகக் கொடுக்கப்படும் விலையைக் காட்டிலும் மதிப்பு மிக்கது.



எக்ஸோ
ஆன்ட்டிபாக்டீரியல்
டிஷ்வாஷ் பார்



இலவசம்
Exo Safai
ரூ. 6.00
மதிப்புள்ளது

A product of Jyothy Laboratories Ltd.

EXO/11/2001/Tam

கல்யாண சீரோடு ஒரு ஸ்டூல்!



'சின்னத்திரை' நடிகை ஷர்மிளாவுக்கும், மறைந்த திரைப்பட கதை வசனகர்த்தா ஏ.எல். நாராயணனின் மகன் ஏ.எல்.என். மோகனுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது.

ஷர்மிளாவை, கிண்டியிலுள்ள அவரது புகுந்த வீட்டில் வாழ்த்துகளோடு சந்தித்தபோது:

"அவர் சட்டம் படிச்சிருக்கார். நான் மருத்துவம் படிச்சிருக்கேன். ஆனா ரெண்டு பேருமே அவரவர் துறையை விட்டுட்டு சின்னத்திரையில் பிஸியா இருக்கோம்!" என்று ஆரம்பித்தார்.

"இரண்டு வருஷத்துக்கு முன்னாலே காதலிக்க ஆரம்பிச்சு பெரியவங்க சம்மதத்தோட இப்ப கல்யாணத்துலே முடிஞ்சுருக்கு!





அவர் ஆறு அடி உயரம். நானோ ஐந்து அடிதான். எங்க வீட்டுலே கூட 'கல்யாண சீர் செனத்தியோட உனக்கு ஒரு குட்டி ஸ்டூலும் கொடுத்து அனுப்பணும் போலிருக்கே'னு கிண்டல்

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



''அந்தக் கதாசிரியர் வறட்சி நிவாரண நிதி கேட்டு மனு போடுறாரா... ஏன்?''

''அவருக்குக் கற்பனை வறண்டு போச்சுன்னு எல்லோரும் சொல்றாங்களாம்!''

- தஞ்சை தாமு



'''ஆட்சியிலே தலை விரிச்சு ஆடுற லஞ்சப் பேயை அடிச்சு விரட்டணும்'னு எதிர்க்கட்சிக் காரங்க அடிக்கடி சொல்றதுனால தலைவர் ரொம்ப வெறுத்துப் போயிட்டாரு...''

''எப்படி சொல்றே...?''

'''லஞ்சப் பேயை அடிச்சு விரட்ட பூசாரிகள் தேவை!'ன்னு அவர் விளம்பரம் கொடுத்திருக் காரு!''

- பி.ஆர். பார்த்தசாரதி



''ஏண்டி! நான் நாய் மாதிரி கத்திக்கிட்டு இருக்கேன். அலமாரி மேல இருக்கற டப்பாவை எடுத்துக் குடுங்கன்னு சொல்றியே!''

''அதுலதானங்க பிஸ்கட் இருக்கு...!''

- சீனு

செஞ்சாங்க.

''அருந்ததி பார்ப்பதற்காக அம்மி மேலே நின்னதும் ரொம்ப சந்தோஷப்பட்டேன். தற்காலிகமாவாவது கணவரோட உயரத்துக்கு வந்துட்டமேன்னு!

''முகூர்த்த மேடைல ஜோடியா நிற்கும்போது இந்த உயரத் தொந்தரவால போட்டோகிராபர் எங்களை கம்போஸ் பண்ண ரொம்ப கஷ்டப்பட்டார். அதனாலே முகூர்த்தம் முடிஞ்சதும் நான் முதல்லே தேடினது என்னோட ஹை-ஹீல்ஸ் செருப்பைத்தான்!

''என் சொந்தக்காரங்க எல்லாருமே மும்பைக்காரர்கள். மும்பையில் கல்யாண ரிசப்ஷனுக்கு கச்சேரி எல்லாம் வைக்க மாட்டாங்க. டேப்புலே பாட்டை ஓட விட்டுட்டு, கல்யாணத்துக்கு வந்தவங்கள்லாம் டான்ஸ் ஆடுவாங்க! அதனாலே எங்க கல்யாண ரிசப்ஷன்லேயும் கச்சேரி ஒண்ணும் வைக்கலை. என் சொந்தக்காரங்கள்லாம் மேடையில் டான்ஸ் ஆட ஆரம்பிச்சுட்டாங்க. நான் இவர்கூட மேடைக்குப் பக்கத்துலே நின்னுக்கிட்டிருக்கேன். எனக்கா கால் துருதுருன்னு இருந்தது.

''என்னோட தவிப்பை இவர் பார்த்துட்டு 'உனக்கும் டான்ஸ் ஆட விருப்பம்னா போய் ஆடு'ன்னு சொன்னார். அவ்வளவுதான். அதுக்காகவே காத்திருந்தவ மாதிரி உடனே மேடையேறி மத்தவங்களோட சேர்ந்து நானும் டான்ஸ் ஆட ஆரம்பிச்சேன். கல்யாணப் பெண்ணே பட்டுப்புடைவை கட்டிக்கிட்டு டான்ஸ் ஆடுவதைப் பார்த்துட்டு இங்க இருந்தவங்க ரொம்ப ஆச்சரியமா பார்த்தாங்க!'' என்றார் ஷர்மிளா.

''கல்யாணத்துக்கப்புறம் நடிப்பைத் தொடருவதா வேண்டாமானு ஒரு குழப்பம் இருந்தது. ஆனால், இவர், 'கல்யாணத்துக்குப் பிறகும் நீ தொடர்ந்து நடிக்கலாம்'னு சொல்லி விட்டார். அதுக்கு அவர் சொன்ன காரணம் நீ எத்தனை கஷ்டப்பட்டு சின்னத்திரையிலே இந்த உயரத்துக்கு வந்திருக்கேன்னு எனக்குத் தெரியும். அந்த உழைப்பை, கல்யாணம்ங்கற ஒரு பந்தத்தால நான் கட்டுப்படுத்த விரும்பலே'னு சொன்னது எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது!'' என்கிறார் ஷர்மிளா.

- மடிப்பாக்கம் வெங்கட்

கோஹிந்தா! கோஹிந்தா!

திருப்பதி. அதிகாலை நேரம். நீராடி விட்டு, பெருமாள் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திசை நோக்கி, தலைக்கு மேலே கரங்களைக் கூப்பிக் கொண்டு, 'கோஹிந்தா... கோஹிந்தா' என்று குரல் கொடுக்கிறார் ஒரு பக்தர். அருகில் குளித்துக் கொண்டிருக்கும் வைணவப் பெரியவருக்கு, என்ன இந்த மனிதர்! கோவிந்தனின் அழகான திருநாமத்தை இப்படிச் சிதைக்கிறாரே' என்று வருத்தம் ஏற்படுகிறது.



அந்த மனிதரோ தன் கோஹிந்த கோஷத்தைத் தொடருகிறார். இந்தப் பெரியவருக்குக் கோபமே வந்து விடுகிறது. காரணம், அந்த கோவிந்த நாமத்தைச் சிலாகித்துப் பிரசங்கம் பண்ணுகிற பிரமுகராயிற்றே!

கோஹிந்த பக்தரோ, "நான் போன வருடம், இதே நாளில், இதே இடத்தில் நின்று கொண்டு வேண்டியவைகளை எல்லாம் அளித்து விட்டாயே கோஹிந்தா" என்று உணர்ச்சிப் பொங்க கூவுகிறார். 'இங்கே வந்து உன்னைத் தரிசிக்கிற பாக்கியத்தை எனக்கு அருள வேண்டும்" என்று மனமுருக வேண்டிக் கொண்டு, தமது கோஹிந்த கோஷத்தைத் தொடர்ந்தபடியே நடந்து செல்கிறார்.

ஆச்சரியப்பட்டுப் போகிறார் அந்தப் பிரமுகர். 'இறைவனோடு, இத்தனை நெருக்கமாக உணர்ந்து உரையாடுகிற இந்த பக்தர், இறைவனை எப்படி அழைத்தால் என்ன? இவரது குரல் கேட்டு, இவர் கேட்ட அனைத்தையும் வழங்கி, தமது பக்தனை ஆண்டவனே சந்தோஷப்படுத்தி விட்டார், அத்தகைய பக்தரின் உச்சரிப்பில் தவறு கண்டுபிடித்தது தவறல்லவா? நம் வீட்டுக் குழந்தைகளின் மழலை உச்சரிப்பில் தவறு இருந்தாலும் ரசிப்பதில்லையா? இதுவும் அதுபோலத்தான்!" என்று நினைத்துக் கொண்டார் அந்தப் பெரியவர்.

அவர் வேறு யாருமில்லை! முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்தான்!

முக்கூரின் அன்பர்கள் சிலர் ஒன்று சேர்ந்து ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தி, தங்களின் முதல் பணியாக, முக்கூர் பற்றி ஒரு சி.டி வெளியிட்டிருக்கிறார்கள். அதில் ஓர் அன்பர் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிதான் மேலே சொன்னது.

முக்கூர் பற்றிய ஏராளமான தகவல்கள், அவரது உபன்யாசங்களின் சில பகுதிகள், அவர் எழுதிய புத்தகங்கள் பற்றிய விவரங்கள், அவருக்குத் தரப்பட்ட பட்டங்கள், புகைப்படத் தொகுப்புகள் என்று மொத்தத்தில் முக்கூரின் அன்பர்களுக்கு இது ஓர் அரிய பொக்கிஷம்.

அவரைப் பற்றி பலரும் அறியாத சுவாரசியமான விஷயங்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன:

- முதன் முதலில் உபன்யாசம் செய்த போது, முக்கூருக்கு வயது ஐந்து.
- சிறு வயதில், தமது அப்பாவுடன் வாக்கிங் போகிற சமயத்திலே மொத்த கம்பராமாயணத்தையும் கற்றுக் கொண்டவர் முக்கூர்.
- தெலுங்கு, தமிழ், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மட்டுமின்றி ஆங்கிலத்தில்கூட பாடல்கள் எழுதியிருக்கிறார்.
- மதுராந்தகத்தில், ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த நாட்களில், அடிக்கடி தமது சொந்த ஊருக்கு ஓடிப் போய் விடுவாராம். காரணம், தாய்ப்பாசம்!
- பாரம்பரிய காபிக்கு தாஸன் முக்கூர், 'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்' மெட்டில் காபி மகாத்மியம் பற்றி ஒரு பாடல் இயற்றி, அடிக்கடிப் பாடி மகிழ்வார்.

பி.கு: இந்த சி.டி விற்பனைக்கு இல்லை. நன்கொடையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. நன்கொடைகளுக்கு 80G பிரிவின்கீழ் விதிவிலக்கு உண்டு.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

வருகிற 24ம் தேதிக்குப் பிறகு தமிழ் நாட்டின் நிதிப் பிரச்னை மட்டுமல்ல; அனைத்துப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும்.

- சபாநாயகர் கா. காளிமுத்து

தமிழக அரசியலில் ஜெயலலிதாவைப் போன்று ஏற்ற இறக்கங்களைக் கண்டவர்கள் வெகு சிலரே. 1982ல் அரசியலில் அடியெடுத்து வைத்த அவர், இந்த இருபது ஆண்டுகளில் சிகரத்துக்கும் சென்றிருக்கிறார். சிறுமைக்கும் ஆட்பட்டிருக்கிறார். ராஜீவ் காந்தி கொலையைத் தொடர்ந்து 1991ல் ஆட்சி பீடம் ஏறிய ஜெ. 1996ல் ஆட்சியையும் ஏன் அவரது எம்.எல்.ஏ பதவியைக்கூட தக்க வைத்துக்



கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். அதன் பின் தி.மு.க ஆட்சியில் அவர் மீது போடப்பட்ட வழக்குகள், சிறைத் தண்டனை, 2001 தேர்தலில் நாடே வியக்கும்படியாக அவரது கட்சிக்குக் கிடைத்த தனி மெஜாரிட்டி, முதல்வர் பதவி ஏற்றதில் சர்ச்சை, சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி விலகல், வழக்கு வெற்றி, என சக்கரம் சுழன்று இப்போது மீண்டும் முதல்வராகும் நிலையில் ஜெயலலிதா!

முதல்வர் பதவியைப் பன்னீர் தலையில் சுமந்த காலம் 158 நாட்கள். இத்தனை அனுபவங்களைத் தமது வசம் வைத்திருக்கும் ஜெ., ஒரு விஷயத்தில் மட்டும் மாறாதிருக்கிறார். எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தமது மனத்துக்குத் தோன்றிய முடிவுகளை அவர் எடுப்பதைத்தான் சொல்கிறோம். அந்த முடிவுகள் பல சமயங்களில் அவரைப் படுகுழியிலும் சில சமயங்களில் மலர்ப் பாதைகளிலும் கொண்டு விட்டிருக்கின்றன. தமது செயல்பாடுகளை யாருக்காகவும், எதற்காகவும் மாற்றிக் கொள்ளாத அரசியல்வாதி அவர். இந்த நிலையே அவருக்குப் பாமர மக்களிடையே பெருமையையும் தேடிக் கொடுத்திருக்கிறது... அவர் மீண்டும் தலைமையேற்கும் இந்த வேளையில் தமிழகம் மிகச் சிக்கலான கட்டத்தில் இருக்கிறது.

கடந்த நான்கு மாத காலமாக, நிர்வாகம் என்று ஒன்று நடந்ததாகத் தெரியவில்லை. ஒரு பக்கம் கஜானா காலி என்ற கோஷம்; மறுபக்கம் தடுமாறி நிற்கும் வளர்ச்சிப் பணிகள். இன்னமும் கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் அ.தி.மு.க ஆட்சி நடக்கவிருக்கிறது. அரசியல்ரீதியாக வேறு ஏதாவது அதிரடி மாற்றங்கள் நடக்காதபட்சத்தில் ஜெ.தான் முதல்வர். அவர் முன் உள்ள சவால்கள் என்ன? அவற்றை எப்படிச் சந்திக்கப் போகிறார்?

"நான் பழகிய வரை

அம்ம



• படம்: சௌரா

...வுக்கு அட்வைஸ்!

யில் சொல்கிறேன். அவருக்குள்ள பெரும் பலவீனம் - அதை பலவீனம் என்று கூடச் சொல்ல மாட்டேன் - மாறாக அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையில், வளர்க்கப்பட்ட முறையில் அவருக்குக் கிடைக்காத ஓர் அனுபவம், தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறத்து விவசாயிகளின் வாழ்க்கைச் சிரமங்கள் அவருக்குத் தெரியாது. சராசரி மக்களின் பொருளாதார சிக்கல் தெரியாது. தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பும் இல்லை. வளர்ந்த ஒரு கட்சியின் தலைவராக நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதைக் கட்டிக் காப்பதில் பிளவுகள் வந்த போதும், சமாளிப்பதில் தமது திறமையைக் காட்டியிருக்கிறார். இன்று கட்சியின் மூத்தவர்கள் அவருடன் இல்லை. சிலர் நீங்கலாக புதியவர்கள்தான் இருக்கிறார்கள். அவரது கட்சியிலுள்ளவர்கள், 'இதைச் செய்யாதீர்கள்; அதைச் செய்யுங்கள்' என்று எடுத்துச் சொல்லும் நிலையிலில்லை. எனவே சுயமாகச் சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டியதாகயிருக்கிறது. நெருக்கடியான கட்டத்தில் பொறுப்பேற்றிருக்கும் அவருக்கு ஆட்சியில் பெரும்பான்மை இருக்கிறது. கட்சிக்குள் அவர் மீது பக்தி இருக்கிறது'' என்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த பிரமுகரான தா. பாண்டியன்.

''கடந்த ஆண்டு நான்கு மாத காலம் முதல்வர் பொறுப்பிலிருக்கும்போது, விவசாயிகள், ஆசிரியர்கள் ஆகியோருக்குச் சில சலுகைகளை அளித்தார் ஜெ. குறிப்பாக, தேயிலை விவசாயிகளுக்கு மான்யம், மற்ற விவசாயிகளின் கடன் வட்டி ரூ. 310 கோடி தள்ளுபடி, ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கவுன்ஸிலிங் போன்றவற்றைச் சொல்லலாம். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம், ஏறும் விலைவாசி ஆகியவை குறித்து எந்த முனைப்பும் இல்லை. அனுபவஸ்தர்கள் இல்லாத அமைச்சரவை ஒரு குறைபாடே!

''மத்திய அரசு கடைபிடிக்கும் பொருளாதார கொள்கைகளின் தாக்கம்தான் தமிழ்நாட்டிலும் எதிரொலிக்கும். இறக்குமதி கொள்கையில் விவசாய பொருட்களுக்கு நல்ல விலை இல்லை. எனவே பொருளாதாரத்தை நாசப்படுத்தும் நச்சு ஊற்று, தலையிலிருந்தே கிளம்புகிறது. அதற்கு வைத்தியம் பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு கட்டணங்களை உயர்த்தி, வரிகளை ஏற்றி, உரிமைகளைப் பறித்து சமாளித்துவிடலாம் என்று ஜெ. கருதினால், அந்தப் பிழியையும் இவரே ஏற்க வேண்டி வரும்.

''இவர் முன் உள்ள மற்றொரு முக்கியமான சவால், இன்று சூப்பர் இலாகாவாக மாறியுள்ள லஞ்ச ஊழலை ஒழிப்பது. மாய மோதிரத்தைத் தேய்த்து அதனை ஒழிக்க முடியாது'' என்கிறார் பாண்டியன்.



• தா. பாண்டியன்



• பீட்டர் அல்போன்ஸ்



• சுதர்சன நாச்சியப்பன்



• திருமாவளவன்

ஆட்சிக்கு வந்த ஒன்றரை மாதத்துக்குள்ளே தி.மு.க பிரமுகர்களை 'உள்ளே' போட்டது, கலைஞரை அடாவடித்தனமாகக் கைது செய்தது ஆகியவற்றின் மூலம் பெரிய அரசியல் சிக்கலில் மாட்டிக்கொண்டார் ஜெ. சோனியா தயவின் மூலம் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் வந்தது. தொடர்ந்து தி.மு.க பேரணியில்

பத்திரிகையாளர்கள் மீது நடந்த தாக்குதல் ஆட்சிக்கு அவப் பெயரைத் தேடித் தந்தது. இந்த சம்பவங்களில் தொடர்புடைய போலீஸ் அதிகாரிகளைப் பாதுகாப்பதில் அவர் காட்டிய தீவரம் நடுநிலையாளர்களை எரிச்சலடைய வைத்தது.

"இது போன்ற அரசியல் அக்கப் போர், பழிவாங்கல்களில் இறங்காமல் தமிழகத்தின் வளர்ச்சி ஒன்றையே ஒரே இலட்சியமாக வைத்து ஜெயலலிதா செயல்பட வேண்டும். தி.மு.க ஆட்சியில் ஊழல் நடந்ததாக ஆதாரபூர்வமாக தெரிந்தால், ஒரு விசாரணைக் கமிஷன் கொண்டு, ஆய்ந்து முடிவுகள் எடுத்துச் செயல்படுவதுதான் சரியான அணுகுமுறை" என்கிறார் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன்.

"திராவிட பாரம்பரியம் என்று சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், தங்கள் கட்சிக்காரர்களுக்கு வளத்தையும், வாழ்வையும் அமைத்துக் கொடுத்ததைத்தான் நாம் பார்த்தோம். தமிழ்நாட்டில் பெரும் தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தது காங்கிரஸ்தான். ஆனால் அப்போது 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' என்றார்கள். உண்மையில் சொல்லப் போனால் அந்தக் கோஷம் இப்போதுதான் சரியாகப் பொருந்தும். கடந்த ஆறேழு வருடங்களாக திராவிடக் கட்சிகள் ஆதரிக்கும் கட்சிகள்தான் மத்தியில் ஆட்சியிலிருக்கின்றன. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, எத்தனை திட்டங்களை இவர்கள் கொண்டு வந்தார்கள்?

"ஜெயலலிதா உடனடியாகச் சீர்படுத்த வேண்டியது மின்துறை. இது தவிர, மத்திய அரசுடன் மோதாமல் - வற்புறுத்தி திட்டங்களையும் நிதியையும் பெற வேண்டும். அரசியல் ரீதியாக காவிரிப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியை மனத்தில் கொண்டு ஜெ. எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தி.மு.க.வும் துணை செய்ய வேண்டும்" என்கிறார் சுதர்சன் நாச்சியப்பன்.


தண்ணீர்ப் பஞ்சம் சென்னையை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தபோது நெய்வேலி, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவந்து பிரச்னையைக் கட்டுப்படுத்திய அரசு, மக்கள் பாராட்டைப் பெற்றது. சென்னையில் தண்ணீர் தாகத்தைத் தீர்க்க புதிய வீராணம் திட்டத்தை அறிவித்தார் ஜெ. ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் நோக்கம் நிறைவேறாது என்று சொல்கிறார்கள் நிபுணர்கள்.

"இப்படி சர்ச்சைக்குரிய திட்டங்களைக் கொண்டு வரும்போது அனைத்துக் கட்சிகளுடன் ஆலோசனை செய்த பின்னர் முடிவு எடுக்க வேண்டும். கடந்த தி.மு.க ஆட்சியில் சில முக்கியமான பிரச்னைகளில் கலைஞர், தோழமைக் கட்சித் தலைவரான மூப்பனாரைக் கலந்து ஆலோசித்ததை வழிகாட்டுதலாக அவர் கொள்ள வேண்டும்" என்கிறார் 'விடுதலை சிறுத்தை' தலைவர் திருமாவளவன்...

கஜானா காலி என்று புலம்பும் தமிழக அரசுக்கு வருமானம் தேட வழியும் காட்டுகிறார் அவர். "தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் லாபத்தில் பத்து சதத்தை மத்திய அரசிடம் தமிழக அரசு போராடி பெற வேண்டும். உதாரணமாக ஆண்டுக்கு 1500 கோடி ரூபாய் லாபம் ஈட்டுகிறது நெய்வேலி நிலக்கரி நிறுவனம். இதில் ஒரு சதம் கூட தமிழக அரசுக்குக் கிடைப்பதில்லை. இது போன்ற நிறுவனங்களின் லாபத்தில் பத்து சதத்தை தமிழக அரசு பெற்றால் கணிசமான வருமானம் இருக்கும்.

"மற்றொரு மிக முக்கியமான விஷயம், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் ஆதிக்கம் ஆட்சியில் மேலோங்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது போலல்லாமல் தமது ஆட்சி ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கான ஆட்சி என்பதை அவர் நிலை நாட்ட வேண்டும்" என்கிறார் திருமாவளவன்.

பட்ஜெட் பீட்ஸ்



சுதந்தர இந்தியாவின் முதல் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது 1947 நவம்பர் 26 அன்றுதான். தாக்கல் செய்தவர் அன்றைய நிதியமைச்சர் ஆர்.கே. ஷண்முக செட்டியார்



மிகக் குறைவான மதிப்பு கொண்ட கரன்ஸி இந்தோனேஷியாவில் அச்சிடப்படும் 'ஒரு சென்' நோட்டுதான். 1982லேயே இதன் மதிப்பு 648 அமெரிக்க பெண்ணிகளுக்குச் சமம்..



''கல்யாணத்துக்குப் பிறகு நான் நடிக்கமாட்டேன்னு சொன்னது தப்பாப் போச்சு மம்மி...''

''என்னாச்சும்மா...?''

''எப்ப கல்யாணம், எப்ப கல்யாணம்னு கேட்டு ரசிகர்கள், ஃபோன்ல துளைச்சு எடுத்திட்டாங்க!''

— சீர்காழி ரேவதி

சென்ற பட்ஜெட்டில் 20 லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை விளை நிலமாக்கும் நல்ல திட்டத்தையும் வெளியிட்டார் ஜெ. ஆனால் தொடர் நடவடிக்கை இல்லை. தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு முதுகலை வரை இலவச படிப்பு, பள்ளி மாணவிகளுக்கு சைக்கிள் என்ற திட்டங்கள். ஆனால் தமிழகத்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய அளவு எந்தத் திட்டமும் இல்லை.

''தொடர்ந்து ஆட்சிக்கு வரும் திராவிடக் கட்சிகள் சமூக நீதி, தமிழ் மொழி, சிலை வைப்பது (எடுப்பது!) என்று மேலோட்டமாக populist திட்டங்களைத்தான் செயல்படுத்துகின்றனவே தவிர ஆழமாக சிந்தித்து சமுதாய பிரச்னைகளைத் தீர்க்க முனைவதில்லை'' என்கிறார் த.மா.கா மாநிலங்களவை உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்.

''முன்பைவிட இப்போது முதல்வர்களுக்கு அதிக அதிகாரங்கள் உண்டு. உலக மயமாதல், தாராளமயமாதல், புதிய பொருளாதார கொள்கை என்று அடிபடும் இந்தக் காலத்தில் முதல்வர் என்பவர் அரசின் தலைவர் என்பதைவிட, ஒரு மாநிலத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்து செயல்படுவதுதான் மிகப் பொருத்தமாக இருக்கும்'' என்கிறார் அவர். சந்திரபாபு நாயுடு அப்படிப்பட்ட பார்வையைச் செலுத்தி மாநிலத்திற்கு மத்தியிலிருந்தும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெரும் நிதியையும், திட்டங்களையும் கொண்டு வந்திருப்பதைக் குறிப்பிடுகிறார் அவர்.

''இன்று மத்திய அரசை வழி நடத்துபவர் நாயுடுதான். ஆந்திர மாநில நலன்களை மனத்தில் கொண்டு வேண்டுகோள் வைத்தும், விடாப்பிடியாகவும் காரியங்கள் சாதித்துக் கொள்கிறார். இதைத் தமிழகத் தலைவர்கள் கடைபிடிக்க வேண்டும்'' என்கிறார் பீட்டர்.

இப்போது ஜெ. முன் உள்ள முக்கியப் பிரச்னை நிதி நிலைமையைச் சரி செய்வதுதான். அரசியல் லாபத்தையும், சுய லாபத்தையும் எதிர்பார்க்காமல் முழுமையான அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்படும் ஒரு முதல்வரால் மட்டுமே இதைச் சமாளிக்க முடியும். ஜெ.வுக்கு பிளஸ் பாயிண்ட் அவரைக் கேள்விக் கேட்கத் துணியாத தொண்டர்கள். அநேக தலைவர்களுக்கு இல்லாத தகுதி இது. அதிகாரிகள் மத்தியிலும் பயம் கலந்த மரியாதை. சரியான முறையில் வாய்ப்பைப் பயன்படுத்தினால் பிரச்னைகளை எதிர்கொள்ள முடியும். அதை அவர் செய்வாரா என்பதுதான் கேள்விக்குறி. அடுத்தபடியாக நிர்வாக ஊழல்களைக் களைய வேண்டும். ஆடம்பரத்தை அறவே தவிர்க்க வேண்டும். கட்சி அரசியலைப் பின்னுக்குத் தள்ளி எல்லோரையும் ஓரணியில் திரட்டி, பிரச்னைகளைச் சந்திக்கத் தயாராக வேண்டும். அரசு நடவடிக்கைகள் பழி வாங்கும் நடவடிக்கைகளோ என்ற சந்தேகம் மக்களுக்குத் தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தமது மாறுபட்ட செயல்பாடுகள் மூலம் தமிழகத்தின் சிறந்த முதல்வர் என்று பாராட்டப்படும் வாய்ப்பு அவருக்கு இருக்கிறது'' என்கிறார் பீட்டர் அல்போன்ஸ்.

சென்ற சட்டமன்றத் தேர்தலுக்கு முன், 'ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் பணப் புழக்கம் மீண்டும் வரும்' என்பது சராசரி மக்களிடையே இருந்த பேச்சு. ஆனால் இந்த ஒன்பது மாத கால அ.தி.மு.க ஆட்சியில் பணப் புழக்கம் அதிகரித்ததாக எந்தத் தகவலும் இல்லை. மாறாக, சாதாரண மக்களிடம் அதே பழைய புலம்பல்தான் இருக்கிறது. ஜெ. மீண்டும் பொறுப்பேற்கும்போது பழைய காட்சி ஒன்று மீண்டும் அரங்கேறும் என்பதை மட்டும் இப்போது உறுதியாகச் சொல்லலாம். அதுதான் கோட்டையில் கூடிய திருவிழாக் கூட்டம். அங்கு கூடுபவர்கள் மட்டுமல்லாமல், வோட்டு போட்ட லட்சக்கணக்கான நடுநிலையாளர்கள், அவரது ஆட்சியின் நற்பலனை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் என்பதை ஜெ. உணர வேண்டும்.

— ப்ரியன்

படங்கள்: ராஜன்

ரிமோட்


இதை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் வேளையில், மணிப்பூரில் சட்டமன்றத் தேர்தல்கள் முடிந்து, முடிவுகளும் வெளியாகியிருக்கும். பல விஷயங்களை அறிய ஆவலாக இருக்கிறது. முக்கியமாக, ஒரு குறிப்பிட்ட கிராமத்துக்கு வந்த அந்தக் கடிதம் - அதற்கு என்ன பலன் கிடைத்தது - என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.



'அண்ணாமலை' அவசரப்படலாமா?

'வோட்டுச் சாவடிக்குப் போனால் உன் உயிர் அவ்வளவுதான்! கபர்தார்!' என்று கையால் எழுதப்பட்ட அந்தக் கடிதம் ஒவ்வொரு வாக்காளருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. வெறும் கடிதம் மட்டுமல்ல. கூடவே ஒரு தோட்டாவும் வைக்கப்பட்டிருந்தது. ஸ்டார் நியூசில் அந்தக் கடிதத்தையும் தோட்டாவையும் காட்டினார்கள். ரத்தத்தைச் சில்லிடச் செய்யும் காட்சி! ஆனால், 'இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் பயப்பட மாட்டோம். வோட்டுப் போடத்தான் போகிறோம்!' என்றார் ஒரு கிராமவாசி.

ஐயா ஸ்டார் நியூஸ்காரரே, அந்த அஞ்சாநெஞ்சன் தற்போது எப்படி இருக்கிறார் என்பதை அறிந்து வந்து தெரிவியுங்களேன். ஏனென்றால்



வினோத்



rebellion to
tyrants is obedience to God.

'இந்தாப்பா, நல்லா தம் பிடிச்சு நிமிர்ந்து உட்காரு... யாரய்யா நீ, ஒத்தை விரலைக் காட்டறே? அதெல்லாம் முதல்லேயே முடிச்சிட்டு வந்திருக்கக் கூடாதா? சரி, சரி, போயிட்டு சீக்கிரமா வா... ஐய்யோ, அந்தம்மா ஏன் விழுந்திட்டாங்க ? தூக்கி உட்கார்த்துங்க. யோவ், நீ இந்தப் பக்கம் வா...'

- கிராமத்திலே ஒரு குரூப் போட்டோ எடுக்கப் போன புகைப்படக்காரரின் அவஸ்தைகளை மோனோ ஆக்டிங்காகச் சார்லி நடித்துக் கொண்டே போனார். ரொம்பத் தத்ரூபம். அவ்வப்போது, (இல்லாத) உதவியாளனை முழங்கையால் இடித்து, 'இவன் ஒருத்தன் குறுக்கே குறுக்கே!' என்று சிடுசிடுத்தது மேலும் இயல்பாக இருந்தது.

முன்னொரு காலத்தில் ஒல்லியாக இருந்த சார்லி இப்போது கொழுக் மொழுக்கென்று தெரிந்தார் யூகி தர்பாரில். Health and happiness in full bloom (கண் படாதிருக்கட்டும்.)

எஸ்.பி.பி மூச்சு விடாமல் பாடிய மாதிரி, தானும் மூச்சு விடாமல் ஒரு வசனம் பேசியதாகச் சொல்லி பேசியும் காட்டினாரே பார்க்கணும்! ங்கம்மாடி! (ஒரு அவசர நாடகத்துக்காக வாலி எழுதித் தந்ததாம்.) இத்தனை வருடங்களில் சேதுவை அசர வைத்து, பிரமிக்க வைத்து, குறுக்கே பேச விடாமல் சிலையாக்கி வைத்தது அந்த மைல் நீள வசனம். செயற்கையாகச் சிரிக்காமல் மனதாரச் சிரித்தார் யூகியார்.

பச்சை மூன்று வகை: பச்சை, கரும் பச்சை, குஷ்வந்த் பச்சை.

நாசுக்கோ, நாகரிகமோ, தயவு தாட்சண்ணியமோ பார்க்காமல் சகலரையும் தூக்கிச் சகட்டுமேனிக்கு எறிந்து பந்தாடியிருக்கிறார். சொந்த லீலை, சந்தித்தவர்களின் லீலை எதையும் மிச்சம் வைக்கவில்லை.


'யாரிடமும் எனக்குக் குரோதம் கிடையாது. உண்மையை ஒளிக்காமல் எழுதியிருக்கிறேன்' என்று முன்னுரையில் மார் தட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் ஸ்டார் பேட்டியில் வந்தவர் அதே குஷ்வந்த் சிங்கா? நம்ப முடியவில்லை. குரலில் என்ன ஒரு கனிவு! பதில்களில் என்ன ஒரு பணிவு! சாந்த சொரூபி, சாத்வீக சுந்தரம்! 'எல்லாரையும் பற்றி நல்லபடியாகத்தான் எழுதியிருக்கிறேன். ஏன் தப்பாக எடுத்துக் கொள்கிறார்களோ, புரியவில்லை' என்ற சமாதானங்கள்.

'மேனகா காந்தி தொடுத்த வழக்கிலிருந்து இப்போதுதான் மீண்டு வந்திருக்கிறோம். அதற்குள் இன்னொன்றில் மாட்டிக் கொள்வானேன்?' என்ற ஞானோதயமாக இருக்கலாம். ஆனால் சிங்கம் சுண்டெலியாகும்போது சுவாரஸ்யம் பலி. Be good and you will be lonesome என்றார் மார்க் ட்வெயின்.

ராதிகா, சிவகுமார், அஜய் ரத்னம், நீனா, ரியாஸ் முதலான முகங்கள் வலம் வருவதால், 'சித்தி' ஞாபகம்தான் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, 'அண்ணாமலை'யில் மனம் ஊன்ற மறுக்கிறது. ஒரு குடும்பத்துக்குச் சொந்தமாக இருந்த கோவில் இன்னொரு குடும்பத்துக்குப் போய்விடுவதால் வழக்கு, வல்லடி, சாபம், சபதம் என்று கதை வேறே ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது.

பார்க்கலாம். Make haste slowly என்பதே விவேகம்.
ஆண்டிபட்டியிலேயே இப்போதுதான் சூடு பிடித்திருக்கிறது என்கிறார்கள். 'அண்ணாமலை' அவசரப்பட்டால் முடியுமா?



2002 பிப்ரவரி 24
விஷு மாசி 12
மலர் : 60
இதழ் : 30

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ஆண்டிபட்டி அரசி!

"ஜாதி - மத உணர்வுகளைக் கடந்து, அனைத்துப் பிரிவினரையும் மனிதர்களாகவே காண்கிறேன்!" என்ற முழக்கத்துடன் தமது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார் ஜெயலலிதா!

ஆனால், ஆண்டிபட்டி தொகுதிக்கு வெளியே இருக்கும் தமிழர்களையும் அவர் மனிதர்களாகத்தான் காண்கிறாரா? என்று நாம் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது.

ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. ராஜினாமா செய்த கையோடு அத் தொகுதிக்கான ஸ்பெஷல் கவனிப்பைத் தொடங்கிவிட்டது தமிழக அரசு. ஆண்டிபட்டியை அரசிப்பட்டியாக்கிக் காட்டுவதாக சபதமே செய்தனர் அ.தி.மு.க.வினர். எம்.பி.க்கள் தொகுதி அபிவிருத்தி நிதியிலிருந்து கணிசமான தொகை ஆண்டிபட்டி தொகுதிப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

- இவையெல்லாம் இடைத் தேர்தல் அறிவிக்கப்படும் முன் நடந்தன என்பது உண்மைதான். ஆனால், ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. ராஜினாமா செய்த கணமே அத்



தொகுதிக்கான இடைத் தேர்தல் உறுதியாகிவிட்டது.


இவ்வாறிருக்க, ஆண்டிபட்டி பணிகளில் தவறேதுமில்லை என்று வாதிடுவது சட்டப்படி சரியாக இருந்தாலும் நியாயமோ நேர்மையோ அல்ல.

காரணம் ஏதுமின்றி, திட்டமிட்டு ஒருவரை முன்கூட்டியே ராஜினாமா செய்ய வைத்ததுடன் அத் தொகுதியைச் செல்லக் குழந்தையாக தத்தெடுத்துக்கொண்டு சலுகைகள் பொழியப்பட்டிருக்கின்றன. தேர்தல் விதிகளையும் நன்னடத்தை நெறிகளையும் மீறியும் பல பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதை மறுக்க முடியாது.

தமது அரசியல் பலத்தில் நம்பிக்கையும் தமது தகுதி குறித்த நல் மதிப்பும் உடையவராயின், அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயலலிதா எதற்காக இத்தனை சலுகைகளை ஆண்டிபட்டி மீது பொழிய வேண்டும்?

'உங்கள் எம்.எல்.ஏ.வாகத் தேர்வு செய்யப்பட்டு, தமிழக முதல்வராகப் பதவி ஏற்றால், தமிழ்நாட்டுக்கு இன்னின்ன நற்பணிகளைச் செய்வேன்; உங்கள் தொகுதியின் முன்னேற்றத்துக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவேன்..' என்று பிரசார மேடைகளில் பேசி வாக்கு கேட்கலாமே!...

ஆனால், ஜெயலலிதாவின் அணுகுமுறை வேறு! தமக்கு தி.மு.க. ஆட்சி அநீதி செய்து, தேர்தலிலேயே நிற்கவிடாமல் செய்துவிட்டதாகவும்; பெண்ணான தமக்கு இதுபோன்று மீண்டும் மீண்டும் அநீதிகள் இழைக்கப்பட்டதாகவும் உண்மைக்குப் புறம்பாகப் பேசி, அனுதாப அலையை எழுப்ப முயன்று வருகிறார்.



ஒரு தொகுதியின்மீது சலுகைகளைப் பொழிந்ததோடல்லாமல், இப்படி சோக கீதமும் பாடி வாக்கு சேகரிப்பது ஒரு சராசரி எம்.எல்.ஏ.வுக்கே அழகன்று. ஜெயலலிதாவோ தமிழக முதல்வராகப் போகிறவர். வாக்காளர்களின் அபரிமித நம்பிக்கையைப் பெற்று அவர் கட்சி ஏற்கெனவே ஆட்சியில் இருக்கிறது. கட்சித் தலைவி என்கிற முறையிலோ ஆட்சித் தலைமை ஏற்கப் போகிறவர் என்கிற முறையிலோ அவர் விடுக்கும் செய்தி என்ன..? அறிவிக்கும் செயல்திட்டம் என்ன..?

தமிழக அரசின் நிதி நிலைமை படு மோசமாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவே பணம் பற்றாக்குறை. இந்த நிதி நிலைமையைச் சீர் செய்ய என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்படும்? அடுத்த நான்கரையாண்டுகளில் தமிழகமும் அதன் மூலம் ஆண்டிபட்டியும் என்ன நன்மைகள் அடையும்?

இந்த யோசனைகளெல்லாம் ஜெயலலிதாவுக்கும் அவரது சகாக்களுக்கும் வராது போனது துரதிர்ஷ்டம்தான்.

இந்த இடைத் தேர்தலில் ஜெயலலிதாவுக்கு மக்களின் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் போவது உறுதி. அவர் வெற்றி பெற்று முதல்வராகப் பொறுப்பேற்கும் கட்டத்திலாவது ஒட்டுமொத்த தமிழகத்தின் நலனையும் கருத்தில் கொண்டு செயல்படட்டும். பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்காமல் ஆக்கபூர்வமான அரசு வழங்கட்டும். அ.தி.மு.க.வுக்கும் ஆண்டிபட்டிக்கும் மட்டுமே தாம் தலைவியல்ல; தமிழகம் முழுமைக்கும் முதல்வர் என்பதை உணர்ந்து பொறுப்பு வகிக்கட்டும். ○

மேஷம் : என்னதான் சொதப்பினா லும் கங்குலிக்கே மீண்டும் கேப்டன் பதவி கிடைக்கிற மாதிரி, என்னதான் தப்பு பண்ணினாலும் உங்களுக்கும் பெயர், புகழ் உண்டு. வசீகர சக்தி கூடும். உங்க முகத்தைப் பார்த்து நீங்களே பொறாமைப்படுவீங்க. அரசு பணியாளர் களுக்கு ஆதரவு பெருகும். வியாபாரி கள், விஞ்ஞானிகள், பத்திரிகையாளர் களுக்கெல்லாம் வெற்றி வாய்ப்புகள் குவியும். கொடுக்கல் வாங்கல் விவ காரங்கள்ல கண்ணுல விளக்கெண் ணையை ஊத்திக்கிட்டு இருக்கிறது நல்லது.

ரிஷபம் : இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆல் ரவுண்டர் பிளின்டாஃப் பந்து வீச் சுக்குத் திணறிய நம்மூர் பேட்ஸ்மேன் கள் மாதிரி உங்க எதிரிகள் ஓடிப் போயிடு வாங்க. குடும்பத்துல மகிழ்ச்சிக்குப் பஞ்சம் இருக்காது. பண நடமாட்டம் பல வழிகள்ல இருந்து வரும். வேலை யில்லாம இருக்கறவங்களுக்கு நல்ல செய்தி கதவைத்தட்டும். வேலையில இருக்கறவங்களுக்குப் பதவி உயர்வு இடமாற்றம் வரலாம். செலவு எகிறும். சிக்கனம் அவசியம். எல்லார்ட்டயும் இனிமையா பழகுவது நல்லது.

மிதுனம் : ஆஸ்திரேலியா, நியூசிலாந்து தென் ஆப்பிரிக்கா - மூன்று நாடுகள் போட்டியில காலிஸ் கலக்குன மாதிரி இந்த வாரம் நீங்க கலக்குவீங்க. உங்க புத்திசாலித்தனத்தை நினைச்சு நீங் களே புல்லரிச்சுப் போவீங்க, காவல், சட்டம், இராணுவம் போன்ற துறை களைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற் றம் உண்டு. சிவப்பு நிறப் பொருட்கள் ஆதாயம் தரும். போட்டி பந்தயங்கள்ல வெற்றி வாய்ப்பு தேடி வரும். எதிலேயும் எடுத்தோம், கவிழ்த்தோம்னு இருக் காம ரொம்ப கவனமா செயல்படணும்.

கடகம் : தோள் வலியால அவதிப் பட்ட ராகுல் டிராவிட் திரும்பவும் அணிக்கு வந்த மாதிரி பிரச்னைகள்ல இருந்து இந்த வாரம் நீங்களும் மீண்டு வந்திருவீங்க. திறமைக்கும் உழைப்புக்கு மான வருவாய் உங்களை வந்தடையும். வெளிநாட்டுப் பயணத்திட்டம் நிறை வேறப் போகுது. மறதியால சில சங் கடங்கள் ஏற்படலாம். அலைச்சல் கூடும். பேச்சில் நிதானம் அவசியம். பெண்கள் புது ஆடைகள், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தணும்.

சிம்மம் : ஒரு தினப் போட்டியில பதி னோராயிரத்துக்குப் மேல ரன்கள் எடுத்து யாரும் அசைக்க முடியாம இருக்கற சச்சின் மாதிரி, இந்த வாரம் அசைக்க முடியாம இருக்கீங்க. பாராட்டு, புகழ் கூடும். ஆராய்ச்சி, மருத்துவத் துறைகள்ல இருக்கறவங் களுக்கு நல்ல பெயர் கிடைக்கப் போகுது. வியாபாரிகளுக்கு முன்னேற்றம் இருக்கு. பயணத்தால நன்மை உண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். நண்பர்கள் உறவினர்களிடம் சுமுக மாகப் பழகி வருவது நல்லது.

கன்னி : மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் தோற்றதற்காக ஆஸி. கேப்டன் ஸ்டீவ் வாஹ் பதவியைப் பறிச்ச மாதிரி டென்ஷன்தான் இந்த வாரம். அதுக்காக சோர்ந்து போயிடா தீங்க. எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்குப் பல முறை யோசிச்சு செய் யுங்க. மனசுல ஏதேனும் ஒரு கவனம் இருந்துட்டே இருக்கும். குடும்பத்துல பிரச்னை வரும். அமைதி காத்தல் நல் லது. கலைத் துறையைச் சேர்ந்தவங் களுக்குச் சில சோதனைகள் சூழும். கணவன் மனைவிக்குள்ள கருத்து வேறுபாடு இருக்கும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

பிப்ரவரி 20 முதல் 26 வரை

துலாம் : "இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு அணி உணர்வு வேணும்"னு பாய்காட் சொன்னமாதிரி, குடும்பத்து மேலயும் கொஞ்சம் கவனம் செலுத்துங்க. சில சோதனைகள், பிரச்னைகள் வந்து இம்சை பண்ணலாம். பக்குவமா சமாளிங்க. குடும்பத்துல சலசலப்பு குறையும். திருமணம் ஆகாதவங்களுக்கு அதற்கான வாய்ப்பு தேடி வரும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வாய்க்கும். மறைமுகமான எதிர்ப்புகள் வரும். நல்லவர்கள் உதவ முன் வருவாங்க. பேச்சில் இனிமை அவசியம்.

விருச்சிகம் : ஆஸி. அணியின் புதிய கேப்டன் பதவிக்குக் காத்திருக்கிற கில்கிறைஸ்ட், ரிக்கி பாண்டிங் மாதிரி புதிய பொறுப்புகளுக்கு நீங்க காத்திருக்கப் போறீங்க. திடீர் பதவி உயர்வு, புதிய பொறுப்புகள் வரலாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் கூடும். குடும்பத்துல சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. சிலருக்குப் புதிய சொத்துக்கள் சேரும். வியாபாரிகள் அகல கால் வைக்க வேண்டாம். முன்னபின்ன தெரியாதவங்க கிட்ட ஏதும் வாய்விட்டுடாதீங்க.

தனுசு : மேற்கத்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் பாக். பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் பேட்ஸ்மேன்களைத் திணறடிச்ச மாதிரி, உங்க உறவினர்களை நீங்க சந்தோஷத்துல திணறடிக்கப் போறீங்க. மதிப்பு மரியாதையெல்லாம் மலை மாதிரி உயரப் போகுது. நல்ல காரியங்கள்ல ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி தாண்டவமாடும். வேலையில்லாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். வேலையில் இருக்கறவங்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். அரசியல்வாதிகள் வரவேற்பையும் பாராட்டையும் பெறுவாங்க. வெளிநாட்டுப் பயணம் அனுகூலம் தரும்.

நடிகர் பிரசாந்த் மேஷ ராசிக்காரர். 'விரைவில் கல்யாணம்'னு பலன் சொல்லியிருக்கா?



மகரம் : சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்குக்குப் பஞ்சாப் அரசு 'டிஎஸ்பி' பதவி கொடுத்த மாதிரி, உங்களுக்கும் பதவி உயர்வு கிடைக்கப் போகுது. சிலருக்கு 'அப்பா' ப்ரமோஷன் கிடைக்கும். சட்டம், காவல் இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க விழிப்போட செயல்படறது நல்லது. பார்ட்டி, ஃபங்ஷன்ல கலந்து கொள்ள சந்தர்ப்பம் வரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்தரும். சிறு சிறு தொல்லைகள் வர வாய்ப்பிருக்கு.

கும்பம் : 'சச்சினை சீக்கிரமா அவுட்டாக்கறதுதான் எங்கள் நோக்கம்'னு இந்தியா வந்திருக்கிற ஜிம்பாப்வே கேப்டன் கார்லிஸ்லே நம்பிக்கையோட சொன்ன மாதிரி, உங்க மனசுல தன்னம்பிக்கையும் தெளிவும் பிறக்கும். குடும்பத்துல திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். பெண்கள் நகைகள், ஆடைகள் வாங்க வாய்ப்பிருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. அலைச்சல் அதிகரிக்கும். தாய் நலன்ல கவனம் வையுங்க. குறுக்கு வழியில ஆதாயம் தேட நினைக்க வேண்டாம்.

மீனம் : ரஞ்சிக் கோப்பைப் போட்டியில அதிகமா விக்கெட் எடுத்த தமிழக வீரர் பாலாஜிக்கு போர்டு பிரசிடென்ட் லெவன் அணியில ஆட வாய்ப்புக் கிடைச்ச மாதிரி, உங்களுக்கும் உழைப்புக்குத் தகுந்த மரியாதை கிடைக்கும். ஓவியம், சிற்பம், பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் ஏறும். கூடவே உடல் நலத்துலயும் கவனம் வையுங்க. பேச்சில நிதானமும் கனிவும் அவசியம். ஏற்றுமதி இறக்குமதி தொழில் பண்றவங்களுக்கு லாபம் கொட்டும்.

கன்னத்தில் முத்தமிட்டால்...



இரண்டு மூன்று டூயட்கள், நான்கு ட்ஷூம் ட்ஷூம், ஆபாச அங்க வளைவுகளுடைய பாடல்காட்சி, இந்த தமிழ் சினிமா ஃபார்முலாவுக்குள் கட்டுப்படாமல் படமெடுக்க, மணிரத்னம் போன்றவர்களால்தான் முடிகிறது.

போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில் இலங்கை, மாங்குளத்தைச் சேர்ந்த நந்திதா தாஸ், குழந்தை பெறுவதற்காக ராமேஸ்வரம் அனுப்பப்படுகிறார். குழந்தை பிறந்த மறு நிமிடமே இலங்கைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம். ரெட்கிராஸில் இருக்கும் அந்தக் குழந்தையை எழுத்தாளர் கம் என்ஜினியர் மாதவன் தத்தெடுக்க திருமணம் அவசியமென்கிறார்கள். தம் வீட்டுக்கு அருகிலிருக்கும் சிம்ரனைத் திருமணம் செய்து குழந்தையைத் தத்தெடுக்க, அந்தக் குழந்தைக்கு ஒன்பது வயதாகும்போது அவளிடம் உண்மையைச் சொல்கிறார்கள்.



தன் சொந்தத் தாயைப் பார்க்க வேண்டுமென்று குழந்தை அடம்பிடிக்கிறது. இலங்கை செல்கிறார்கள். குழந்தையின் தாய் ஒரு போராளியாக இருக்க, அவள் குழந்தையை ஏற்றுக் கொண்டாளா இல்லையா? என்பதுதான் கவிதை... ஸாரி கதை.

படம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே 'பெவிகால்' போட்டு உட்கார வைத்து விடுகிறார்கள், இயக்குனரும் கேமராமேன் ரவி.கே. சந்திரனும். முதல் பத்து நிமிடம் இலங்கையைக் காண்பிக்கும் இடத்திலிருந்து ஆரம்பித்து விடுகிறது ரவி.கே. சந்திரனின் ஒளி ஓவியம். பாடல் காட்சிகளில் கேமராவின் மிரட்டல் இதமான இனிமை.

ஒன்பதாவது பிறந்த நாளன்று தத்துக் குழந்தையான கீர்த்தனாவிடம் (பார்த்திபனின் மகள். ஜாடை அப்பாவின் ஜெராக்ஸ்) மாதவன் உண்மையைச் சொல்ல, கொஞ்சம் கொஞ்சமாக அவள் முகம் மாறி, அழ ஆரம்பிக்க, நமக்கும் கண்ணீர் பொத்துக் கொள்கிறது. என்ன ஒரு நடிப்பு! படம் இவரைச் சுற்றித்தான் சுழல்கிறது.

வீட்டை விட்டு ஓடிப்போன குழந்தை பெரம்பூர் ரயில்வே ஸ்டேஷனில் இருப்பதை அறிந்து அங்கு செல்கிறார்கள். மாதவனின் அக்காள் கணவர், "போனதுமே குழந்தையைத் திட்டாதீங்க" என்று ஆரம்பித்து அட்வைஸ் செய்ய, 'மிஸ்டர் மனோஜ் உங்கள் குழந்தை வளர்ப்பு பற்றி நான் ஏதாவது சொல்றேனா?" என்று மாதவன் கேட்பது போன்ற வசனங்கள் பளிச்! மாதவன் நடிப்பு வெகு இயல்பு.

காதலி, கோபக்கார அம்மா, ஜாலி அம்மா என உருகியிருக்கிறார் சிம்ரன். இலங்கையில் நந்திதா தாஸைக் கண்டுபிடிக்க உதவும் சிங்கள டாக்டராக பிரகாஷ்ராஜ் வந்து போகிறார்.

முதல் பத்து, இறுதி பத்து நிமிடம் மட்டுமே வந்து போனாலும் மனம் முழுவதும் வியாபித்திருப்பது நந்திதா தாஸ் தான். படம் முடிந்து வெளியே வந்தாலும் நெஞ்சுக்குள் ரணம். (இவர் நடிப்பதாய் மூச் விடாதது ஏனோ.)

— ரவுண்ட்ஸ்பாய்

● அபவ் ஆவரெஜ்

பிற பத்திரிகைகளில் வெளியான சில கடிதங்கள், சற்றே சுருக்கமாக.

நான், என் கணவர் இருவருமே வேலைக்குச் செல்பவர்கள் என்பதால் சேர்ந்திருக்கும் நேரங்களே அரிதாகிவிட்டன. சென்ற வாரத்தில் ஒருநாள் நான் சீக்கிரமே தூங்கச் சென்றுவிட்டேன். அப்போது என் கணவர் ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். மறுநாள் என்னை அவர் மென்மையாக எழுப்பினார். என் காதுகளில் சில காதல் வார்த்தைகளை முணுமுணுத்தார். எனக்காகச் சிற்றுண்டி செய்து வைத்திருப்பதாக வேறு சொன்னார். என்னால் நம்பவே முடியவில்லை.

என் கணவர் நல்லவர் என்பதும் என் மீது அன்பு கொண்டவர் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் அவர் ஒரு ரொமான்டிக் ஆசாமி கிடையாது.

சோனியா எவ்வளவோ தேவலை!

எதையும் சமைத்ததும் கிடையாது. பின்





மாற்றான் தோட்டம்



''என்ன வியாதின்னு சொல்லாமலேயே டாக்டர் எனக்கு ஆபரேஷன் பண்ணப் போறாரே... ஏன் சிஸ்டர்?''

''அதெல்லாம் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்லே தெளிவா எழுதிடுவாங்க!''

- தஞ்சை தாமு

எப்படி? கேட்டபோது புன்னகைத்தார். பிறகு அது தன்னுடைய ஐடியா இல்லை யென்றும், தங்கள் இதழில் முன்தினம் படித்த ஒரு யோசனைதான் என்றும் ஒப்புக் கொண்டார். அதனாலென்ன, நான் சொர்க் கத்தில் இருப்பதாக உணர்ந்தேன். ஒரு சீரான மணவாழ்க்கை எனக்கு அமைந்தது எனக்குத் தெரியும். ஆனால் இது போன்ற சின்னச் சின்ன உயிர்ப்பான தருணங்கள் அந்த வாழ்க்கையைப் பெரிதும் சிறப்பானதாக ஆக்குகின்றன.

(ஃபெமினா - நீலிமா ராவல், அகமதாபாத்)

பண்டிட் ஜஸ்ராஜ், பீம்சென் ஜோஷி போன்றோர் அரசுக்கு வேண்டுகோள் விடுத் திருக்கிறார்கள். 'இரவு பத்து மணிக்கு மேல் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தக்கூடாது' என்ற தடையை நீக்க வேண்டுமாம். இந்தக் கோரிக்கை வியப்பளிக்கிறது. இது போன்ற விஷயங்களைத் தனிப்பட்ட நோக்கில் பார்க்கக்கூடாது. சமுதாயக் கண்ணோட் டம் வேண்டும். அதீத சப்தத்தினால் உண்டாகும் சூழ்நிலைக் கேட்டினால் பாதிக்கப்பட்டவள் எனும் கோணத்தில் நான் சொல்வது இதுதான். மேற்படி தடைக்கு இலேசான சலுகை கொடுத்தால் கூட அது பொதுமக்களின் உடல்நலத்தைப் பெருமளவில் பாதிக்கும்.

(டைம்ஸ் ஆஃப் இந்தியா - ஜெயஸ்ரீ ஜோஷி, மும்பை)

"**மு**ம்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம். அது மொழிப் பளுவை அதி கரிக்கும்" என அமைச்சர் தம்பிதுரை கூறிய கருத்து ஏமாற்றத்தை அளிக்கிறது.

பல மொழிகளைக் கற்று, பேசி பல விதமான மக்களுடன் பழகினால்தான் மனம் விசாலமடையும். மேலும் இந்தி என்பது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலும் சம்பந்தப்பட்டுள்ளது. பெரும்பாலான பெரிய தொழிலதிபர்கள் இந்திப் பகுதியைச் சேர்ந்தவர்கள். சமீபத்தில் நியூயார்க்கில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட் டுக்குச் சென்ற இந்திய குழுவில் கர்நாடகா வைச் சேர்ந்த மூன்று தொழிலதிபர்கள் இடம் பெற்றிருந்தனர். தமிழகத்திலிருந்து ஒருத்தர்கூட போகவில்லை."

(தினமலர் - சாந்தப்பகுமார், சென்னை)

ஒருமுறை பயன்படுத்தியதும் தூக்கி யெறியும் டிஸ்போசபிள் சிரின்ஜ்களில் உள்ள பத்தொன்பது 'பிராண்ட்'களுள் பதின்மூன்று, சுகாதாரக் குறைவானவை என்ற கண்டு பிடிப்பை அறிந்ததும் கண் மருத்துவர் என்ற முறையில் நான் அதிர்ந்து போனேன். வரவர நோயாளி குணமாவதென்பது மருத்துவரின் கையில் உள்ளது என்ற நிலை மாறி, டிஸ்போஸபிள் சிரின்ஜ் தயாரிப்பாளரின் கையில் உள்ளது என்றானது வேதனையான நிலை.

(இந்தியா டுடே - ஆங்கிலம், டாக்டர் ரன்பீர்சிங், பான், அமிர்தசரஸ்)

சோனியா காந்தியை ஒரு 'வெளி நாட்டுப் பெண்மணி' என்று பிரதமர் வாஜ் பாய் குறிப்பிட்டிருப்பது ரசனைக் குறை வானது. இந்தியக் குடியுரிமையைப் பெறு வதில் சோனியா தாமதம் காட்டியிருக்கலாம். ஆனால் இன்றைய தேதிக்கு அவர் இந்தியக் குடிமகள்தானே. தவிர, வாஜ்பாய்தானே வெளிநாட்டினருக்கு 'இரட்டைப் பிரஜை' என்ற யோசனையை முன் வைத்தார்! இந்தியாவில் பிறந்தபோதிலும் பல்வேறு வெளிநாடுகளின் பாஸ்போர்ட்டுகளையும் குடியுரிமையையும் பெற்றிருக்கும் பலரையும்விட இந்தியக் குடியுரிமையை மட்டுமே கொண்டிருக்கும் சோனியா பலமடங்கு பரவாயில்லை.

(தி ஹிண்டு - சுப்பையா வெங்கட்ராமன், திருவனந்தபுரம்)

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்**






தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம்

கீழச்சூரியமூலை

கிராமத்தில் எழுந்தருளியிருக்கிற

பவழக்கொடி அம்பிகை சமேத

ஸ்ரீ சூரிய கோடீஸ்வரர் கோயில்

திருப்பணி கைங்கர்யப் பத்திரிகை

கீழச்சூரியமூலை தல வரலாறு



கருணைக் கடலாகிய இறைவன் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்கும் தலங்கள் பலவற்றுள் கீழச்சூரிய மூலை திருத்தலமும் தலையாயது. இவ்வூரில் எழுந்தருளி யுள்ள அற்புத சக்தி படைத்த சூரிய கோடி பிரகாச சிவலிங்க மூர்த்தியின் மகிமை அளவிடற்கரியது. தீர்க்கமான நேத்திர சக்தியை அள்ளித் தருகின்ற, கண் பார்வைக் கோளாறுகளை நிவர்த்திக்கின்ற ஆற்றல் படைத்தவர் சூரிய கோடி பிரகாசர்.

கோடிக்கணக்கான நட்சத்திர சூரிய மூர்த்திகளும் சூரிய கோளங்களிலும் சூட்சும வடிவில் வந்து வழிபடுகின்ற பெருமைக்குரிய இத்தலத்தைப் பற்றி தேவாதி தேவர்களின் ஜோதிட கணிப்பில் சூரிய மூலைச்சக்கரம் எனக் குறித்துள்ளனர். பூலோகச் சூரிய ஒளி தரும் சூரியனின் உதய கிரகணங்கள் தோன்றும் பூமிப் பகுதியும் கீழச்சூரிய மூலையே.

இத்தலத்தில் கீர்த்தியோடு விளங்கும் மூர்த்தியாகிய கோடி சூரியப் பிரகாச லிங்கமூர்த்தியை தரிசிப்போர்க்கு தீர்க்கமான கண்பார்வை கிடைக்கும்.

கீழச்சூரியமூலை திருத்தலத்தில்தான் 19.2.1855 அன்று தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்கள் பிறந்தார்கள். தன் வாழ் நாளெல்லாம் தமிழுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராய் ஓலைச் சுவடிகளாயிருந்த சங்க கால நூல்களையும் காப்பியங்களையும் அச்சிலேற்றி நூலாக வெளியிட்டு தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தார்.

இத்துணை மகத்துவம் வாய்ந்த கீழச்சூரிய மூலை கிராமத்தில் எழுந்தருளியுள்ள பவழக் கொடி அம்பிகை சமேத ஸ்ரீ சூரிய கோடீஸ்வரர் ஆலயத் திருப்பணியானது பக்தர்களின் உதவியுடன் இனிதே நடந்து வருகின்றன.

மேற்கொண்டு சண்டிகேசுவரர் சன்னதி, முன் மகா மண்டபம், இராஜகோபுரம் மற்றும் மதிர் ஆகிய பணிகளே நடைபெற வேண்டியுள்ளது.

எஞ்சியுள்ள திருப்பணிகள் முடிவுற்று விரைவில் நடைபெறும் வண்ணம் தங்களாலியன்ற பொருளுதவி நல்கி இறையருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள்,
மிராசுதார்கள்,
ஆன்மீக நற்பணி மன்றம்,
மற்றும் கிராமவாசிகள்.

கீழச்சூரியமூலை
24.12.2001

தொடர்பு முகவரி:

வீடு:
G. கணேச அய்யர்,
1/39, கோட்டூர் அக்ரஹாரம்,
துகிலி - 609 804.
தஞ்சை மாவட்டம்.
போன்: 473573

தலைவர்,
G. கணேச அய்யர்,
பெருமாள் கோவில் தெரு,
கீழச்சூரியமூலை, திருலோக்கி.
துகிலி (வழி) 609 804.

வரிக்கு வரி சிரி...

கே.ராமச்சந்திரன்

அப்பாதுரை 'அம்போ' என அமர்ந்திருந்தார். கையில் நாளிதழ். அவர் முன் வைத்திருந்த காப்பியைக் கூட இன்னும் குடிக்கவில்லை.

"என்னங்க யோசனை?" திருமதி வனஜா அப்பாதுரை, கணவரைக் கலைத்து எழுப்பினாள்.

"என்னவா? இது பிப்ரவரி மாசம். எது எதுக்கு வரி போடறாங்களோ? எதையெல்லாம் ஏத்தப் போறாங்களோ? கஜானா காலியாம். உன்னை கஜானா மந்திரியா போட்டாதான் தெரியும். எப்படி சமாளிக்கறதுன்னு விழிப்பே. எங்க டிபார்ட்மென்ட்டே தலை சுத்திக் கிடக்குது."

தன் பைனான்ஸ் டிபார்ட்மென்ட் பெருமையை அவர் 'பீற்றிக்' கொண்டது, வனஜாவுக்குப் பிடிக்கவில்லை.

"இதென்ன பிரமாதம். எப்பவும் போல் புதுசு புதுசா வரி போட்டு, வரிக்கு வரின்னு செய்ய வேண்டியதுதானே?"

"என்ன அப்படி சுலபமாச் சொல்லிட்டே? ஏதாவது ஐடியா இருக்கா சொல்லு. ஐடியா ஸ்பான்ஸர்ட் பை வனஜான்னு போடறேன்" அப்பாதுரை கிண்டலடித்தார்.

வனஜா முறைத்து விட்டுச் சொன்னாள்.

"டெலிபோன் வரி போடலாம். இப்ப நம்பர் 4986298ன்னு இருந்தா. அதோட கூட்டுத் தொகை 46. நாலும் ஆறும் பத்து. தினம் பத்து ரூபா வரி. நம்பர் ஐந்துக்குக் கீழே இருந்தா மினிமம் ஐந்து ரூபாய். அதே போல ஸ்கூட்டர் நம்பர், கார் நம்பர், வீட்டு நம்பர் எல்லாத்துக்கும் நம்பர் வரின்னு போடலாம்!"

"அடிப்பாவி! அவனவன் பணம் கட்டி லக்கி நம்பர், கூட்டினா ஒன்பது வரணும்னு வண்டிக்கு நம்பர் வாங்கறான். அவன்தான் அதிகமா கட்ட வேண்டி வரும்."

"வந்தால் என்ன? வரட்டுமே! அதிகப் பணம் கட்டி அதிர்ஷ்ட நம்பர் வாங்க வசதி இருக்கு இல்லே? அப்போ இதுக்கு அதிகமா நம்பர் வரி கட்டட்டுமே!"

வனஜாவின் பதிலைக் கேட்டு வாயடைத்துப் போனார்.

"அப்புறம், இப்போ டயல் பண்றவன் தானே டெலிபோன் பில் கட்டறான். அதுமாதிரி அந்தப் பக்கம் பேசறவனும் ஏதாவது கட்டணும். 'ஹலோ எப்படி இருக்கீங்க? உங்க புடைவை அழகா இருக்கு. அந்தப் பாட்டு போடுங்க. உங்க லைனே கிடைக்கலீங்க'ன்னு டெலிபோன்ல வழியற டீவி நிகழ்ச்சிக்கு, கூடுதல் வரி போடணும்."

"எதுக்கு? அதுக்கு டெலிபோன் பில் தானே வரும்? அதுக்குத்தான் ஏற்கெனவே ரென்ட், கால் சார்ஜஸ், நீ சொன்ன நம்பர் வரி எல்லாம் வருதே?"

"இருக்கட்டுமே! இப்படிக்கேட்டு, விளம்பரம் பண்ணி அதிகமா லாபம் சம்பாதிக்கறாங்க இல்லே! அதுக்குத்தான்!"

அப்பாதுரை யோசித்து விட்டுக் கேட்டார்.

"யாருமே போன்லே கேக்காம போயிட்டா? வரி கிரி எதுவுமே இருக்காதே!" கேட்டுவிட்டுச் சிரித்தார்.

சிரித்தவரை வனஜா முறைத்துப் பார்த்தாள்.

"அதெப்படி? டீவியைப் பார்க்காம இருப்பாங்களா? மெகா சீரியல் பார்க்காதவங்க உண்டா? இத்தனை எபிசோடுகளுக்கு அப்புறம் அதாவது நூறு, இருநூறு எபிசோடுக்கு அப்புறம் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி எபிசோடு வரின்னு போடலாம். அழுற சீன் வந்தா சர்சார்ஜ் போடலாம்!"

"எதுக்கு சர்சார்ஜ்? அழுறதுதானே, சீரியலே!"

"எல்லோரும் அழுது அழுது... ஒரே ஒப்பாரி, தரித்திரம் பிடுங்குது.. நாட்டுலே நல்லதே நடக்கலை. இதுலே வாஸ்து சாஸ்திரம் வேறே இருக்கு. ஊர்லே இருக்கற



எல்லா பில்டிங்கும் வாஸ்துபடி கட்டியிருக்கான்னு செக்கப் பண்ணி, வாஸ்து நிவாரண வரின்னு ஒவ்வொரு கட்டடத்துக்கும் போடணும். இதை வீட்டு வரியோட சேர்க்கக் கூடாது."

"நம்ப வீடு எப்படி கட்டியிருக்கு?"

"பார்த்தா தெரியலை? இப்படி இடிஞ்சு போய் இருக்கீங்களே? வாஸ்துபடி இருந்தா இப்படி இருப்பீங்களா?"

"சரி... சரி... நான் ஒத்துக்கறேன். வாஸ்து வரியை யார் கட்டறது? வீட்டுக்காரரா? குடியிருக்கறவரா?"

"யார் கட்டினா என்ன? அது எப்படியும் குடித்தனக்காரர் தலையிலேதான் விழும். கஜானா மந்திரிக்கு என்ன வேலை? என்ன கவலை?"

அப்பாதுரைக்கு நிஜமாவே கவலை வந்துவிட்டது.

"என்ன அப்படி யோசனை? நீங்கதானே ஐடியா கொடுன்னு கேட்டீங்க? இப்போ உங்களுக்கு கிரிக்கெட் மேட்சு லீவு விட்டாங்க இல்லையா? அப்போ, அரசாங்கம் கிரிக்கெட்டை மதிக்கறதுனு தானே அர்த்தம்?"

"ஆமாம்! அதுக்கென்ன?"

"அந்த மேச்சுலே டிக்கட்லே சர்வீஸ் சார்ஜ் போடலாம். ஃப்ரீ பாஸ் தந்தா வரி மட்டும் கட்டணும்னு போடலாம்!"

இதெல்லாம் நடக்குமா? மக்கள் ரியாக்‌ஷன் எப்படி இருக்குமோ என்று அப்பாதுரைக்குக் கவலை பிடித்துக் கொண்டது.

"சொந்தவீடு, தொலைபேசினு இப்ப ஆறு விஷயங்களில் ஒண்ணு வைச்சிருந்தா வரி கட்டணும். வரி ரிடர்ன் தரணும்னு சொல்றாங்க. அந்த ஆறுலே ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் டூவீலர்களைச் சேர்த்துடலாம்."

"என்ன? என்ன? அவனவன் பஸ் கிடைக்காம, பஸ்சார்ஜ் ஏறிப் போய் ஸ்கூட்டரே சௌகரியம்னு கடன் உடனை வாங்கி ஓட்டறான். ஏற்கெனவே புதுசா நம்பர் வரி போட்டுட்டே! இப்ப ரிட்டன் தா. அதைச் சொல்லு இதைச் சொல்லுன்னு கேட்டா. எப்படி வனஜா?"

வனஜா மேலும் கீழும் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

"மூவாயிரம் ரூபாய் கொடுத்துட்டு டெலிபோன் வைச்சிருந்தா ரிட்டர்ன் தரணும். முப்பதாயிரம் கொடுத்து ஸ்கூட்டர் வாங்கி வைச்சிருந்தா தரக் கூடாதா?"



அவளோட லாஜிக் அப்பாதுரைக்குப் புரிந்தது. அவளை கஜானா மந்திரியாக்கியது தான்தானே என்ற எண்ணமும் வந்து பச்சாதாபம் மேலிட்டது.

"அப்புறம்?"

"யாராவது குண்டாயிருந்தாலோ ரொம்ப ஒல்லியா இருந்தாலோ அவங்களுக்கு சுகாதார வரி போடலாம்."

ஒன்றும் புரியாமல் விழித்தார் அப்பாதுரை.

"அதென்ன சுகாதார... அதாவது ஹெல்த் வரியா?"

"அட! சமர்த்துதான். கரெக்டா சொல்லிட்டீங்களே! குண்டாயிருந்தா, இரத்த அழுத்தம், நீரிழிவு, மாரடைப்பு எல்லாம் வரும். இவங்களுக்காக நிறைய மருந்து தயார் செய்யணும். ஆஸ்பத்திரி கட்டணும். டாக்டர்ஸ் போடணும். மருத்துவக் கருவிகள் வாங்கணும். இதுக்கெல்லாம் அரசாங்கம் தானே செலவு செய்யணும்? எல்லாரும் ஆரோக்கியமா இருந்தா, செலவு மிச்சம் தானே? கிரிக்கெட்லே ரன் அடிச்சா மட்டும் போதாது. எதிர் டீம் ரன் அடிக்காம பார்த்துக்கணும். அதே மாதிரிதான் செலவு அயிட்டத்தையும் குறைச்சுக்கணும்."

அப்பாதுரை அதைக் கேட்டு, யோசித்த வாறே அப்படியே கண்ணை மூடினார்.

"மிஸ்டர் அப்பாதுரை? என்ன ஸீட்ல உட்கார்ந்துக்கிட்டே தூங்கறீங்க? இல்லே ஏதாவது பலத்த யோசனையா?"

டெபுடி டைரக்டர் எழுப்பிவிட, சிரித்தார் அப்பாதுரை.

"தூக்கம் இல்லை சார்! கவலைதான். மத்தியானம் மீட்டிங்லே என்ன என்ன வரி புதுசா போடலாம்னு யோசனை பண்ணிக்கிட்டு இருந்தேன். எப்படி சார் தூங்க முடியும்?" தொடர்ந்து சொன்னார்.

"ஐடியா வந்துது சார். ஆனா..."

"என்ன ஆனா? ஏன் இழுக்கறீங்க?"

"வந்து... மந்திரி அதை ஒத்துப்பாரான்னு தெரியலை..."

"மிஸ்டர் அப்பாதுரை... நீங்க ஒரு சீனியர். உங்க ஐடியா நல்லாதான் இருக்கும். மினிஸ்டர் ஏத்துக்கறதும் ஏத்துக்காததும் அவர் இஷ்டம். எப்படியும் அவர் இஷ்டத்துக்கு ஒண்ணு சொல்லிட்டு, இரண்டு நாள் கழிச்சு எதிர்ப்பு தாங்காமல், வாபஸ் வாங்கிடுவார். கவலைப்படாதீங்க. வாங்க, சாப்பிடப் போகலாம்."

அப்பாதுரை தெம்பாக எழுந்து போனார், எதிர்க்கட்சிகள் இருக்கும் தைரியத்தில்! ●

CSC®

COMPUTER EDUCATION

BOON FOR MIDDLE CLASS



WORLD WOMEN'S DAY



WOMEN'S DAY OFFER TABLE ON 08.03.2002		
COURSES	**TOTAL Fee Rs.**	**Women's Day Offer Rs.**
HDCA (One Year)	18800	6300
DEC (e-Commerce)(6 months)	14500	4800
DAST (ORACLE 8,VB 6)(3 months)	5800	1950
MS-OFFICE (2 months)	3600	1200
UNIX, C & C++ (4 months)	5800	1950

Exclusively for Women

CONTACT NEAREST CSC CENTRE

ரோஜா மேனியா!

பாரசீகமா? கிரேக்கமா? இந்த இளஞ்சிவப்பு மலருக்கு 'ரோஸா' எனப் பெயர் சூட்டி, காதல்மலர் என்ற இலக்கியச் சிறப்பு தந்தது யாராக இருந்தாலும் வந்தனம், அபிவந்தனம்! அதை அப்படியே இந்தியாவுக்கு இறக்குமதி செய்து, 'குலாபி', என ஆசையோடு அழைத்து, மலர்களின் மகாராணியாக்கிய முகலாயர்களுக்கும் நன்றி பல!

அழகும் வாசனையும் கொண்ட இம்மலர், பஸ்மங்கள், செந்தூரங்கள் செய்யப் பயன்படுகிறது. 'அரோமா தெரபி' எனப்படும் மலர் சிகிச்சையில் ரோஜாதான் ராஜா!

ரோஜா சர்பத்: இளஞ்சிவப்பு நிறமுள்ள ஐம்பது பன்னீர் ரோஜாக்களை, புத்தம்புதுசாக வாங்கி, இதழ்களை உதிர்த்துக் கொள்ளவும். இரண்டு லிட்டர் நீரைக் காய்ச்சவும். நன்றாகக் கொதி வந்ததும், ரோஜா பூ இதழ்களை இட்டு, தணலைக் குறைக்கவும். தண்ணீர் சுண்டி, அரைலிட்டரானதும், இறக்கி வடிகட்டவும். ஆறியதும் தேவையான அளவு தேன் அல்லது சர்க்கரைப் பாகு சேர்த்துக் கலக்கவும். நறுமணமிக்க ரோஜா சர்பத் தயார். ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்திக் கொண்டால், தேவைப்படும் போது, மூன்று மடங்கு நீர் சேர்த்து 'சர்பத்' தயாரித்துக் குடிக்கலாம். வெயிலில் அலைந்துவிட்டு வந்து, பாட்டில் குளிர் பானங்களைத் தேடாமல், ரோஜா சர்பத் குடிக்கலாம். இதனால் நாவறட்சி நீங்கும். கண் எரிச்சல் தீரும். 'மலச்சிக்கல்' என்ற வார்த்தையே உங்கள் அகராதியில் இருக்காது. சளி, இருமல், சுவாசநோய் போன்ற பிரச்னைகளுக்குக் கூட முடிவு வந்துவிடும்.

இந்த ரோஜா சர்பத் சிறந்த டானிக்காகவும் பயன்படும். இருதய பலம் தரும். ரத்தம் விருத்தியாகும். சரும நோய் நீங்கும். ஆசன எரிச்சல் இருக்காது. வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தும்.

ரோஜா குல்கந்து: காம்பு நீக்கிய, புதிய ரோஜா மலர்களை அரைத்துக் கொள்ளவும். ஒரு தம்ளர் ரோஜா விழுது என்றால், இரண்டு தம்ளர் தேன், ஒரு தம்ளர் கல்கண்டு தூள், அரை டீஸ்பூன் குங்குமப்பூ கலந்து ஜாடியிலிட்டுக் கலக்கவும். மெல்லிய சல்லடை போன்ற துணியை ஜாடியின் மீது கட்டி, வெயிலில் வைக்கவும். தினமும் கிளறவும். பத்து நாள் வைத்தெடுக்க, அருமையான குல்கந்து தயார்!

ரோஜா குல்கந்து நோய் எதிர்ப்பு சக்தி தரும் அற்புத மருந்து என்பதால் குழந்தைகளுக்குத் தொடர்ந்து தர ஏற்றது. பித்தம், கபம் தெளியும். மலமிளக்கும். மேனிக்கு மெருகேற்றும். பசி எடுக்கும்.

ரோஜா தைலம்: ரோஜா பூக்களை அரைத்த விழுதுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் சம அளவு கலந்து, இரும்பு வாணலியிலிட்டு, சிறு தணலில் காய்ச்சுங்கள். நீர் சுண்டியதும், ரோஜா தைலம் கமகமவென தனியாகப் பிரியும். அதைத் தனியாகப் பிரித்து, ஒரு பாட்டிலில் எடுத்து பத்திரப் படுத்திக் கொண்டால், சமய சஞ்சீவியாக உதவும்.



தீப்புண், வெட்டுக்காயம், வெடித்த பரு, வாய்ப்புண், பனிவெடிப்பு, காதுவலி, என எட்டுப்பட்டி பிரச்னைகளுக்குப் பஞ்சாயத்து செய்து வைக்கும். குழந்தையைக் குளிப்பாட்ட பேபி லோஷனாகவும் பயன்படுத்தலாம்.

ரோஜா சூரணம்: ரோஜா பூக்கள் நூறுகிராம், வெண் சந்தனம் ஐம்பது கிராம், நெல்லி வற்றல் ஐம்பது கிராம், மூங்கில் உப்பு இருபது கிராம், தனியா நூறு கிராம், சர்க்கரை ஒரு கிலோ... இத்தனையும் இருந்தால் 'ஜாம்ஜாம்'என்று ரோஜா சூரணம் தயாரிக்கலாம்.

மூங்கில் உப்பைத் தனியாகப் பொடி செய்து கொள்ளவும். ரோஜா பூவை இடித்து, சாறு பிழியவும். நெல்லிவற்றல், சந்தனம், தனியா மூன்றையும் தூளாக்கி, சலித்துக் கொள்ளவும். சர்க்கரையைப் பாகு காய்ச்சி, எல்லா பொருட்களையும் இட்டு, தளரத் தளர இலேகியம் போல காய்ச்சிக் கொள்ளவும்.

ரோஜா சூரணம், லேடீஸ் ஸ்பெஷல் மருந்து! மாதவிடாய்க் கோளாறுகள் நீங்கும். கர்ப்பப்பைப் பிரச்னைகள் காணாமல் போகும். சூ த க வ லி



மூலிகை கேலரி - 7

ராஜம் முரளி



மறையும். வயிற்றுப் புண் ஆறும்.

ரோஸ்வாட்டர்: ஒரு லிட்டர் நீரை, அகலமான பாத்திரத்தில் இட்டு, கொதிக்க விடவும். அன்றலர்ந்த ரோஜாக்களை, நீர் கொள்ளுமளவுக்கு அடைத்து, கனத்த மூடியால் மூடி விடவும். இரண்டு மணி நேரம் கழித்து, பூக்களைக் கசக்கி பிழிந்தெடுத்துவிட்டு, வடிகட்டிக் கொள்ளவும். நிறமும், மணமும், குணமும் இறங்கிய ரோஸ் வாட்டர் தயார்! இதைப் பெரிய பாட்டிலில் அடைத்து ப்ரிஜ்ஜில் வைத்துக் கொள்ளவும். வெயிலில் போகும் முன்பும், போய் வந்த பின்பும் ரோஸ் வாட்டர் கொண்டு முகம் அலம்ப, சூரியக்கதிரின் கடுமை ஏறாது. கண்ணைச் சுற்றி சுருக்கம் மறையும். முகமும் ஃப்ரெஷ்ஷாக இருக்கும். ரோஸ் வாட்டரையே ஐஸ்கட்டிகளாக மாற்றிக் கொண்டால், மேக்கப்புக்கு முன்னும் பின்னும் ஒத்தடம் தர உதவும்.

ஃபேஸ் பேக்: ஒரு டேபிள் ஸ்பூன் ரோஜாத்தூள், அரை டீஸ்பூன் முல்தானிமட்டி, ஒரு டீஸ்பூன் வெள்ளரி விதைத் தூள், ஒரு டீஸ்பூன் கஸகஸா எல்லாவற்றையும் கலந்து, பன்னீரில் குழைத்து முகத்தில் பூசிவர, சருமத்தின் எழில் கூடும். மாசுமருவில்லாத அழகு கிடைக்கும்.

அவ்வளவு சிரத்தை எல்லாம் எடுக்க முடியாத பெண்கள், ரோஜா மலர்களை அடிக்கடி சூடுங்கள். மனச்சோர்வு நீங்கும். தலைவலி, மன அழுத்தம், படபடப்பு, களைப்பு போன்ற பல நோய்களுக்கு ரோஜா எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.

இனி ரோஜாவைக் கண்டால் நாசுக்கு பார்க்காமல் ஒரு பூவை அப்படியே சாப்பிடவும் செய்யுங்க! உங்களுக்கு ரோஜாமேனியா இருப்பதாக நினைத்துக் கொள்வார்கள்... அதனாலென்ன... வைட்டமின் 'சி' சத்து கிடைக்குதில்லே!

படங்கள் : ஸ்ரீஹரி



கழுவுற மீனில் நழுவுற மீன்!

✉ 'பார்த்தசாரதி சுவாமிஜி பார்க் ஷெராட்டன் ஓட்டலில் 'வேல்யூ சிஸ்டம்' என்ற கருத்தரங்கை ஜனவரி ஒன்பதாம் தேதி நடத்துகிறார்' என்று பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளீரே! எந்த ஜனவரியோ?

மயிலாடுதுறை - 1, ஜிஜி. சரவணன்

✉ பிரதமர் அயோத்தி பிரச்னையில் பழைய பாசப்பிணைப்பால் தடுமாறுவது நன்கு தெரிகிறது. இந்தத் தடுமாற்றம் தொடருமானால், இது நாடகமாடிக் கொண்டிருக்கும் பாகிஸ்தானுக்குப் பெரும் சாதகமாகவே அமையும். சாதாரண மக்கள் உறுதியாகவே இருக்கிறார்கள். மதத் தீவிரவாதிகளுக்கு பிரதமர் அடி பணிந்தால், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பி.ஜே.பி. நிச்சயம் பலத்த அடி வாங்கும்.

திருச்சி, இ.சு. இளம்பரிதி.

✉ மதவாத அமைப்புகள் மிரட்டுவதையும் பிரதமர் மிரளுவதையும் தலையங்கத்தில் தெளிவாக விளக்கி இருந்தீர்கள். பாகிஸ்தான் அதிபருக்கும் நமது பிரதமருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை, உள்நாட்டு மதத் தீவிரவாதிகளின் உருட்டல் மிரட்டல்களுக்கு ஆளாவதுதான். முஷாரஃப் இரட்டை வேடம் போட்டு உலகுக்கு அல்வா கொடுக்கிறார். வாஜ்பாய் இந்திய மக்கள் மெல்லுவதற்கு அவல் கொடுக்கிறார்.

தஞ்சாவூர், வளர்மதி ஆசைத்தம்பி.

✉ பிரகாஷ்ராஜ் பேட்டியின் தலைப்பு, சற்று தூக்கிவாரிப்போட வைத்தாலும், பேட்டியைப் படித்தபின் வாய்விட்டுச் சிரித்தேன்.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ தலையங்கம் அற்புதம். போர்க் களத்தில் மயங்கி நின்ற அர்ச்சுனனுக்குத் தெளிவையும், தைரியத்தையும் ஏற்படுத்திய பகவானின் கீதோபதேசம் போல் எல்லா நிலைமைகளையும் அருமையாக விளக்கியிருந்தது. இந்த கலியுக அர்ச்சுனனின் (வாஜ்பாய்) மயக்கம் தெளிந்து துணிவுடன் செயல்பட வேண்டுமே!?

புதூர், கே. சண்முகம்.

✉ கேபிள் கொள்ளையர்களுக்குச் சரியான 'ஷாக்' ட்ரீட்மெண்ட் கொடுத்துள்ளார் எஸ்.வி.சேகர்! அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

திருச்சி - 18, அம்மனூர் என். சாம்பமூர்த்தி.

✉ 'ரசிகர் திலகம்', 'பவானி இல்லம்', 'காயத்ரி அக்கா வந்திருந்தாள்'_ மூன்று சிறு கதைகளும் சிறப்பாக இருந்தன! குறிப்பாக 'ரசிகர் திலகம்' சிறுகதை உன்னதத்தின் உச்சம்!

மதுரை, பி.எல்.பரமசிவம்

✉ பிரகாஷ் ராஜ் பேட்டியில் 'அட்டாக்கை விட 'டிபென்ஸ்' அதிகம்! இருந்தாலும் டெண்டுல்கர் பேட்டிங் மாதிரி விறுவிறுப்பாக இருந்தது.

திருச்சி, இரா. திலீப்.

✉ கழுவுற மீனில் நழுவுற மீன் போல ஆண்டிப்பட்டி ரிசல்ட், 'பாஸிடிவ்லி நெகடிவ்!' என்ற தராசு பதிலழகில் சொக்கிப் போனேன்.

திருவண்ணாமலை, எல்.எம்.மங்கை.

✉ நடிகர் திலகத்தின் நடிப்பில் தமது கணவனையே கண்டதாக ராமாயி அம்மாள் கூறியது நெகிழ்ச்சி!

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

✉ உலகத்தில் நன்மக்கள் இன்னும் அழியவில்லை என்பதை 'பொன்மனம்' கொண்ட மரியஜோதி பறைசாற்றி விட்டார்.

மேலாயக்குடி, உமாதேன்கனி.

சபரிமலையில் பதினெட்டுப் படிகளிலும் பதினெட்டு நாமங்களுடன் மணிகண்டன் எழுந்தருளியிருக்கிறார்.

1. குளத்தூர் பாலன்
2. ஆரியங்காவு ஆனந்த ரூபன்
3. எரிமேலி ஏழைப் பங்காளன்
4. ஐந்து மலைத்தவன்
5. ஐங்கரச் சகோதரன்
6. கலியுக வரதன்
7. கருணாகரதேவன்
8. சத்ய பரிபாலகர்
9. சற்குண சீலன்
10. சபரிமலைவாசன்
11. வீரமணிகண்டன்
12. விண்ணவர்தேவன்
13. விஷ்ணுமோகினி பாலன்



14. சாந்தசொரூபன்
15. சற்குணநாதன்
16. நற்குணக்கொழுந்தன்
17. உள்ளத்தமர்வான்
18. அய்யப்பன்

- எஸ்.விஜயா சீனிவாசன், திருச்சி



பிப்ரவரி 20ம் தேதியை எண்களால் எழுதிப் பாருங்கள். விசித்திரமாக வரும்.

20022002

இப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான்வரும். (உ.ம். 10011001, 20022002, 30033003.) அதுவும் மூன்றே முறை.

- கிருஷ்ண ராஜகோபால், சென்னை



நம்ம ஊருல ஒரு ஞானி இருந்தார். அவரிடம் ஒருத்தன் வந்து கேட்டான். "ஐயா, எனக்குரி புத்திரபாக்கியமே இல்லே! ஏதாவது வழி சொல்லுங்க."

"பிடி உப்பா? ஊரே பார்!"

அதுக்கு அவர் சொன்னார். "ராமேஸ்வரத்துக்குப் போயிட்டுவா. குழந்தை பிறக்கும்!"

அவன், "என் சொந்த ஊரே ராமேஸ்வரம்தாங்க" என்றான்.

- தென்கச்சி கோ. சுவாமிநாதன்

- பா. குணா, சென்னை

இங்கிலாந்தில் வருடத்துக்கு 201 மில்லியன் டன் உருளைக்கிழங்கு சிப்ஸ் உண்ணப்படுகிறது. கிட்டத்தட்ட 6,00,000 டன் சிப்ஸ் கடைகளில் விற்கப்படுகிறது. அந்த அளவுக்கு இங்கிலாந்து மக்கள் சிப்ஸ் பிரியர்கள். இந்த சிப்ஸ் மெலிதாகச் சீவப்படுதில்லை. தடிமனாக விரல் போன்று நீள நீளமாக இருக்கும். ஃபிங்கர் சிப்ஸ் என்பர். வருடந்தோறும் இங்கிலாந்தில் சிப்ஸ் வாரம் கொண்டாடப்படுகிறது!

- கே. காளிமுத்து, இராமநாதபுரம்



கணபதி என்றிடக்
கலங்கும் வல்வினை
அல்லா என்றிட
அல்லல் தீர்ந்திடும்
இயேசுவே என்றிடக்
கருமமும்
தொலைந்திடுமே
இறைவா என்றிட
நலமே பெருகிடுமே!
இந்து, இஸ்லாம், கிறிஸ்

துவ மதங்களை ஒருங்கிணைக்கும் இவ்வாசகம் கும்பகோணம், வைஷ்ணவி இரத்தப் பரிசோதனை ஆய்வகத்தார் அனுப்பிய புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்தில் இடம் பெற்றுள்ளது.

- சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்



ஒரு பெண் தன் வாழ்நாளில் முகத்தை அழகுபடுத்திக் கொள்வதற்காக, கண்ணாடி முன்பு மொத்தம் நான்கு ஆண்டுகள், மூன்று மாதங்கள், இருபது நாட்கள் செலவழிப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

- க. பூகொடி, சித்தோடு

முசோலினி தமது அறைக்கு வெளியே ஓர் அறிவிப்பைத் தொங்கப் போட்டிருந்தார். ''உள்ளே வருகிறவர்கள் என்னைக் கௌரவிக்கிறார்கள். வராமல் இருக்கிறவர்கள் மகிழ்ச்சியைத் தருகிறார்கள்.''

- பாலு, சென்னை



ஜப்பானிய மக்கள் அரசுக்குச் சொந்தமான பொருளைப் பேணி பாதுகாத்து வைப்பதில் மிகுந்த அக்கறை உள்ளவர்கள்.

ஒரு சமயம் வெளியூர் ஆசாமி ஒருவர் ஜப்பான் நாட்டு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். எதிர் சீட்டு காலியாக இருக்கவும் மனிதர் காலை நீட்டி சீட்டில் வைத்துக் கண்ணயர்ந்தார். எதிரில் சற்று தள்ளி அமர்ந்திருந்த ஜப்பானியர் மெதுவாக நகர்ந்து அவருடைய இரு கால்களையும் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டார். திடுக்கிட்டு எழுந்த வெளியூர் ஆசாமி விழித்தார். ஜப்பானியர் சொன்னாராம். "மன்னிக்கவும்; பொது சொத்து அசுத்தமாகக் கூடாது. என் பாண்ட் அழுக்கானால் பரவாயில்லை."

– ஜீ.நீலா, மன்னார்குடி



நௌஷேர்கான் ஈரானை ஆண்டு வந்த பாதுஷா. இவர் ஒரு சமயம் வேட்டையாடுவதற்காக காட்டுக்குப் போனார். அவருடன் கூட போன சமையல்காரன்,

''மன்னா! சமையலுக்கு உப்பு இல்லை'' என்றான்.

பாதுஷா, ''பக்கத்து ஊருக்குப் போய் உப்பை விலை கொடுத்து வாங்கி வா. இல்லாவிட்டால் ஊர் முழுவதுமே பாழாகிவிடும்'' என்று சொன்னார்.

''மன்னா, ஒரு பிடி உப்பை காசு கொடுக்காமல் வாங்கி வந்தால், ஊர் முழுவதும் எப்படிப் பாழாகும்?'' என்று கேட்டான் சமையல்காரன்.

''தன் குடிமக்களிடம் அரசன் ஒரு பிடி உப்பை இனாமாக வாங்கினால் அவன் கீழுள்ள அதிகாரிகள் மறுநாள் அந்த ஊரையே விழுங்கிவிடுவார்கள்!'' என்று பதில் சொன்னார் பாதுஷா.

- ப. சந்திரஜோதி, திருச்சி



அப்போது கே.ஆர். வாசுதேவன் தினமணி கதிர் ஆசிரியராக இருந்தார். அன்புமயமானவர். கனிந்த ஆன்மிகவாதி, பாரதியின் கண்ணன் பாட்டில் மனம் பறிகொடுத்தவர். (புற்றுநோய் மருத்துவரும் எம்.பி.யுமான அ.தி.மு.க. பிரமுகர் டாக்டர் மைத்ரேயனின் தந்தை.)

ஒருநாள் என்னை அழைத்தார் கேயார்வி.

ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரின் சரித்திரத் தொடர்கதையைக் கதிரில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்.

"தொடர், கைக்கு வந்துவிட்டதா?" என்று கேட்டேன்.

"இல்லை. ஆனால் விரைவிலேயே நாலைந்து அத்தியாயங்களைக் கொண்டு வந்து தந்துவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்" என்றார்.

கேயார்வி ஒரு புதுமை செய்ய நினைத்தார். 'விரைவில் ஒரு சரித்திரத் தொடர் ஆரம்பமாகிறது. எழுதுபவர்...?' என்று கதிரில் அறிவிப்பு வெளியிடச் செய்தார். எழுதுபவர் பெயர் மறுவாரம் வரை சஸ்பென்ஸாக இருக்கட்டும் என்று கருதினார்.

ஆனால் ஓரிரு நாட்களிலேயே தினமணி அலுவலகத்தில் பல மாறுதல்கள். தினமணியின் சில முக்கியப் பொறுப்புகளைக் கவனிக்க கேயார்வி தேவை என்ற நிலைமை உருவாகியது. அவர் கதிர் வார இதழிலிருந்து உடனடியாக தினமணி நாளிதழுக்கு மாற்றப்பட்டார்.

சரித்திரத் தொடர் அறிவிப்பு, எழுத்தாளரின் பெயர் குறிப்பிடப்படாமல் ஒரே ஒரு வாரம்தான் கதிரில் இடம் பெற்றது. இனி அந்த அறிவிப்பை என்ன செய்வது?

'போடாமல் விட்டுவிடுவது' என்று முடிவு செய்யப்பட்டது. புது ஆசிரியராக யார் வரப் போகிறார் என்று தெரியாது. எனவே இப்போது எந்தத் தொடர் சார்ந்த நிர்பந்தத்திலும் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்பது கதிர் ஆசிரியர் குழுவினரின் ஒட்டுமொத்தக் கருத்தாக அமைந்தது. மேலும் குறிப்பிட்ட எழுத்தாளர், தொடரின் முதல் அத்தியாயத்தைக் கூட அதுவரை கொண்டு தரவுமில்லை.



• நா.பார்த்தசாரதி

சில வாரங்கள் சென்றன. கதிருக்கு ஆசிரியரானார் நா.பா.

நான் நா.பா.விடம் புதிய சரித்திரத் தொடர் அறிவிப்பு ஒரு வாரம் வெளியிடப் பட்டது பற்றிச் சொன்னேன். இன்னும் முதல் அத்தியாயம் கூட வந்து சேரவில்லை என்பதையும் சொன்னேன். "அந்த எழுத்தாளர் பெயரைப் போடவில்லையல்லவா? எனவே அறிவிப்பை மறந்துவிடுங்கள். எனக்கு அவரது எழுத்துப் போக்கில் நம்பிக்கை கிடையாது என்றுதான் உங்களுக்குத் தெரியுமே!" என்று சொல்லிவிட்டார் நா.பா.

அந்த எழுத்தாளரைப் பேருந்தில் அடிக்கடி நான் சந்திப்பதுண்டு. சந்திக்க நேர்கிறபோதெல்லாம் "தம்பி, என்ன ஆயிற்று என் தொடர்?" என்று அதட்டலாகத் தொடர்ந்து விசாரித்து வந்தார்.

"நீங்களே வந்து நா.பா.விடம் கேட்கலாம்" என்று பவ்யமாக என் ஆலோசனையைத் தெரிவித்தேன்.

"சரி. நாளை வருகிறேன்" என்றார் ஒருநாள்.

சொன்னபடி வந்தார்.

நா.பா. தாமே பேச்சை ஆரம்பித்தார்.

"எனக்கு உங்கள் தொடரை வெளியிடும் உத்தேசமில்லை. உங்கள் எழுத்துப் பாணி எனக்குப் பிடிக்காதது என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? நல்லது. வீட்டில் எல்லோரும் நலம்தானே? கிருஷ்ணன், இவருக்கு ஒரு கப் காப்பி கொண்டுவரச் சொல்லுங்கள்" என்று கத்திரித்துவிட்டார்.

அவர் திகைத்துப் போய் எதுவும் பேசத் தோன்றாமல்

திருப்பூர் கிருஷ்ணன்

கடகடவென்று காப்பியைச் சாப்பிட்டுவிட்டு, சற்று நேரம் பொது விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டுப் போனார்.

ஓரிரு தினங்கள் கடந்திருக்கும். நா.பா.வுக்குத் தபாலில் ஒரு மரப்பெட்டி வந்தது. மேற்படியாரிடமிருந்து தான். என் முன்னிலையில் அந்தப் பெட்டியைப் பிரித்தார் நா.பா.

பெட்டியில் அனுப்பப்பட்டிருந்த பொக்கிஷங்களைப் பற்றி என்ன சொல்வது! இரண்டு கைப்பிடி அளவு சாம்பலும் கொஞ்சம் தலைமுடியும்தான் அதில் இருந்தன. கூடவே முழு வெள்ளைத் தாளில் இரண்டு பக்க அளவு அந்த எழுத்தாளரின் வயிற்றெரிச்சலும் இருந்தது. இரண்டு பக்கம் முழுவதும் மனிதர் விதவிதமான கெட்ட வார்த்தைகளால் நா.பா.வைத் திட்டித் தீர்த்திருந்தார். 'நா.பா. தம் எழுத்தை ஏற்காவிட்டால் அதுபற்றித் தமக்கு அக்கறையில்லை' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அத்தனையையும் குப்பைத் தொட்டியில் போட்ட நா.பா. என் கண்களைக் கூர்மையாகப் பார்த்தவாறு சொன்னார். "இது போன்ற விஷயங்களுக்கெல்லாம் நாம் மிரண்டு விடக்கூடாது. என்னென்ன கெட்ட வார்த்தைகள் எழுதியிருக்கிறார் பாருங்கள். அவர் தரம் அதுதான். நாம் மனச்சாட்சிப்படி ஓர் எழுத்தாளரின் எழுத்தை மதிப்பிட வேண்டுமே தவிர, இத்தகைய பயமுறுத்தல்களுக்கும் வற்புறுத்தல்களுக்கும் மசிந்து அல்ல."



• கே.ஆர்.வி

ஒரு வரலாற்றுத் தொடரின் வரலாறு!

நா.பா. சாகித்ய அகாதமியின் நீதிபதிகளில் ஒருவராக இருந்த காலம். அந்த ரகசியமும் அந்த எழுத்தாளருக்கு விரைவில் தெரிய வந்தது. ஒரு வாரப் பத்திரிகையில் தமக்கு இன்னும் சாகித்ய அகாதமி பரிசு கொடுக்கப்படவில்லையே என்று புலம்பி, நா.பா.வையும் உச்சத்துக்குப் புகழ்ந்திருந்தார் அவர். அந்தக் கட்டுரையில் அவர் எழுதியிருந்த கடைசி வரி: 'பார்த்தசாரதி, உனது பாதமே கதி!'

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. இரண்டு பக்க நாராசக் கடிதம் எழுதிய கையும் இப்போது வானளாவப் புகழ்ந்திருக்கிற கையும் ஒரே கைதானா?

வியப்போடு அந்த கட்டுரையை நா.பா. விடம் காட்டினேன்.

'தம் சொந்த ஆதாயங்களைத் தவிர வேறு எந்த நியாயத்தையும் அறியாதவர்கள் இவர்கள். முதுகெலும்பை கோட்ஸ்டாண்டில் மாட்டி வைத்துவிட்டு, சுயமரியாதையைக் காற்றில் பறக்க விட்டவர்கள். இவருக்கு சாகித்ய அகாதமி பரிசு கொடுத்தால் பரிசு உருப்பட்டாற்போல் தான்!' என்று நகைத்தார் நா.பா.

என்ன ஆச்சரியம்! நா.பா. காலமாகிச் சில ஆண்டுகள் சென்ற பிறகு, அந்தப் பரிசு அதே எழுத்தாளருக்குக் கிடைத்துவிட்டது. மங்களமான ஓர் இலக்கியப் பத்திரிகை அது குறித்து ஏகத்துக்குக் கண்டனங்களைத் தீட்டியிருந்தது. அந்தப் பரிசுச் செய்தியைக் கேட்டு வருந்தவும், அந்தக் கண்டனங்களைப் பார்த்து நிறைவடையவும் நா.பா.தான் அப்போது இல்லை.

என்ன செய்வது! அவர் ஏற்கெனவே இதய அதிர்ச்சி என்ற வேறு ஓர் அதிர்ச்சியால் காலமாகிவிட்டிருந்தார்.



• தாமரை செந்தூர்பாண்டி



தேவயானியின் குடிசைக் கனவு!

'தாம்பத்யம் புனிதமானது. அதை ஆடு, மாடுகள் போல நடைபாதையில் நடத்துவது மிருகத்தனம்' என்ற கொள்கையோடு வாழ்ந்து வரும் குருவம்மா, ஒரு பிளாட்ஃபார தேவதை. தனக்குத் திருமணம் என்று ஒன்று நடந்து, குடித்தனம் தொடங்கினால் குறைந்த பட்சம் ஒரு வாடகை குடிசையிலாவது வாழ வேண்டும் என்ற இலட்சியப் பிடிப்புடன் இருந்தவளுக்குத் திடீர்த் திருமணம். ரிக்ஷா ஓட்டும் துளசியை மணக்கிறாள். 'குடிசை போடும்வரை பரஸ்பரம் தொடுதல் இல்லை' என்று கண்டிப்புக் காட்டியவள், மணமான இரண்டாம் மாதமே கர்ப்பமாகிறாள். அவளுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே எதிர்பாரா அதிர்ச்சி. கணவன் காரணமல்ல என்று அவளது மனசாட்சிக்குத் தெரியும். பிறகெப்படி கர்ப்பம்! கலங்கிப் போனவள் விஷமருந்த, அவளைக் காப்பாற்ற கணவன் போராட, குருவம்மா பிழைத்தாளா? அவளது கர்ப்பத்துக்கு எது அல்லது யார் காரணம்? அவளது குடிசைக் கனவு மெய்ப்பட்டதா?

- இது ஏதோ விருது வாங்கிய அல்லது வாங்கப் போகும் குறும்படத்தின் கதையல்ல. லிவிங்ஸ்டன், தேவயானி, மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன், செந்தில், வடிவுக்கரசி என்று முன்னணி நடிகர் பட்டாளம் நடிக்கும் 'குருவம்மா', முழு நீள கமர்ஷியல் படம். கதைப் பஞ்சத்தில் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில் இது போன்றதொரு புதிய கதையுடன் களத்தில் இறங்குவது யார் என்று துருவினால், நாவலாசிரியர் தாமரை செந்தூர் பாண்டியாம்! மறுபடியும் இலக்கியவாதிகள் சினிமா பக்கம் தலை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். சரி, தாக்குப் பிடிப்பார்களா?

"தமிழ் சினிமாவை ஒரு வழி பண்ணாமல் இங்கேயிருந்து போகிற மாதிரியில்லை" என்று சொல்லும் தாமரை செந்தூர் பாண்டி, ஏற்கெனவே இயக்கியிருக்கும் தொண்ணூறு நிமிட குறும்படமான 'ஏலேலங்கிளியே' மும்பை உலகப் பட விழாவுக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

- ஜெ

• வசுதா



பூர்ணாவுக்கு இப்போது ஆறு வயது. பெயருக்கேற்ற கொள்ளை அழகு. சென்னை மாநகரின் பிரபல ஆங்கிலப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டாள். ஆனால் இரண்டாவது மாதத்திலிருந்தே அடுக்கடுக்கான புகார்கள்.

"உங்கள் மகளைக் கூப்பிட்டால், திரும்பிக் கூட பார்க்கமாட்டேன் என்கிறாள். கேள்விக்குப் பதில் வருவதில்லை. படிப்பிலே ஆர்வம் காட்டுவதில்லை. இவளை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்ய? தயவு செய்து அவளது டி.சி.யை வாங்கிக் கொண்டு போய்விடுங்கள்" என்று தலைமையாசிரியர் திட்டவட்டமாகச் சொன்னதில் பூர்ணாவின் பெற்றோர் துடித்துத்தான் போனார்கள்.

துப்புக் கணக்கு!



• பள்ளியில்...

எல்லா குழந்தைகளையும் போல தோற்றத்தில் நார்மலாக இருந்த பூர்ணா சின்ன வயதிலிருந்தே இப்படித்தான். அவள் வாய் திறந்து 'அம்மா, அப்பா, பசிக்குது, தூங்கணும்' என்று சின்ன வார்த்தைகளைப் பேசவே மூன்று வயதானது. பூர்ணாவின் பாட்டியோ, "நீ கூட மூன்று வயதில்தான் பேச ஆரம்பித்தாய். குழந்தையைத் திட்டாதே" என்று பூர்ணாவின் தாயாரையும் சமாதானப்படுத்திவிட்டார். பள்ளியில் பூர்ணாவுக்கு இப்போது கிடைத்திருக்கும் பட்டம், சோம்பேறி மண்டு..! ஆனால் பூர்ணாவுக்குள் ஆட்டிஸம் என்றொரு தனிமை உலகம் இயங்கிக் கொண்டிருப்பதையும் அதற்குள் அவள் சிக்கிக் கொண்டிருப்பதையும் யார் அறிவார்?



• விடியல் தேடி...

மூன்றாம் வகுப்பு படிக்கும் கணேஷின் தந்தை ஓர் என்ஜினியர். தமது மகனை ஒரு விஞ்ஞானி ஆக்க வேண்டும் என்பது தான் அவரது கனவு. ஆனால் பாடத்தை வாசிக்க முடியாமல் திணறுகிறான். எழுத



• விளையாடிக் கொண்டே...

முடியாமல் தடுமாறுகிறான். தப்புத் தப்பாய்க் கணக்குப் போடுகிறான். இத்தனைக்கும் கணேஷ் மனவளர்ச்சி குன்றியவன் இல்லை. காது கேளாதவனோ வேறு உடல் ஊனமுற்றவனோ இல்லை. இயற்கை போட்ட தப்புக் கணக்கினால் கற்றல் குறைபாடுடன் பிறந்த குழந்தை!

சிறப்புப் பள்ளிக்கு அவனை அழைத்துப் போன பெற்றோருக்கு அதிர்ச்சி. காரணம் அங்கே மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் தான் இருந்தார்கள்.

"கணேஷைப் போலவும், பூர்ணாவைப் போலவும் எட்டு நிமிஷத்துக்கு ஒரு குழந்தை இந்தியாவில் பிறந்து கொண்டிருக்கிறது. ஆட்டிஸம் (autism), கற்றல் குறைபாடு (learning disablity), கவனக் குறைவு (attention deficit disorder), மன வளர்ச்சி குன்றிய நிலை (mental retardation) உட்பட, உடல் ஊனமல்லாத இதுபோன்ற ஏழு மில்லியன் குழந்தைகள் இந்தியாவில் இருக்கிறார்கள். பார்ப்பதற்கு எல்லா குழந்தைகளையும் போல தோற்றமளிக்கும் இந்த அழகான குழந்தைகளின் நிலை எத்தனை அவலமானதாக இருக்கிறது! இவர்களுக்குச் சிறப்புக் கல்வி முறை (special education) ஒன்றுதான் விடியலைத் தரக் கூடியது. ஆனால் இந்த ஏழு மில்லியன் குழந்தைகளில் ஒரு சதவிகிதம் பேருக்குத்தான் சிறப்புக் கல்விமுறை கிடைக்கிறது. அதுவும் சென்னை போன்ற மாநகரங்களில் மட்டும்தான் இந்தச் சிறப்புக் கல்வி கிடைக்கிறது.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற வெறியோடுதான் அமெரிக்காவின் கின் பல்கலைக்கழகத்தில் எனது பேராசிரியர் பதவியை உதறிவிட்டு சென்னை வந்தேன்'' என்கிறார் டாக்டர் வசுதா நடராஜன்.

''உளவியல் படித்து முடித்துவிட்டு மும்பையில் மனநல மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். 'எனது குழந்தை படிப்பதில்லை, அழுவதில்லை, சிரிப்பதில்லை, உணர்ச்சியற்ற ஜடமாக இருக்கிறான்' என்ற குறைகளோடு நிறைய பெற்றோர்கள் தங்கள் சிறார்களை அழைத்து வருவார்கள். உள்ளத்தின் ஓர் ஓரத்தில் இந்தக் குழந்தைகளின் நிலையும், நினைவும் திரும்பத்திரும்ப வந்து கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் சவுதி அரேபியாவில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்ததும் மனநிறைவு அளிக்கவில்லை. அந்தப் பணியிலிருந்தும் வெளியேறி, உடல் ஊனமில்லாத குழந்தைகளுக்கான சிறப்பு மல்டிமாடல் கல்வி மற்றும் மில்லர் முறை ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்து இந்தியா திரும்பிவிட்டேன். குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, இனி சிறப்புக் கல்வியை கிராமம் வரை எடுத்துப் போவது தான் வாழ்க்கை இலட்சியம்'' என்று சொல்லும் வசுதா, சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில், அகடெமி ஃபார் டீச்சர்ஸ் எக்ஸலன்ஸ் மற்றும் கெலிடோஸ்கோப் லேர்னிங் சென்டர் ஆகிய இரு சிறப்புக் கல்வி மையங்களைத் தொடங்கியிருக்கிறார்.

இந்த குழந்தைகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களின் தேவை எதுவெனப் புரியாமல், இவர்களை 'சோம்பேறி' என பெற்றோரும், ஆசிரியர்களும் முத்திரை குத்துவது தான் பிரச்னையே. இவர்களுக்கு உள்ள குறைபாட்டை இளமையிலேயே கண்டறிந்து, மெல்ல மெல்ல பயிற்சியை ஆரம்பித்தால், பின்னோக்கிச் செல்லும் இவர்களின் வாழ்க்கையை முன்னோக்கி கொண்டு வந்துவிட முடியும். இவர்கள் பின்தங்க நேர்ந்தால் நடத்தை பிரச்னை ஏற்பட்டு, முரடர்களாகவும், கோபக்காரர்களாக ஆகிவிடும் அவலம் நேர்ந்து விடுகிறது. வீட்டில் பெற்றோர்களுடன் சண்டை, உடன் பிறந்தோருடன் சண்டை என தொடங்கி, அமெரிக்கா

போன்ற நாடுகளில் கொலை வரை போய் விடுகிறார்கள். இதனால்தான் இது போன்ற தொரு குழந்தையின் கல்விச் செலவுக்காக ஓராண்டுக்கு ஐம்பதாயிரம் டாலர்களை அமெரிக்க அரசு செலவு செய்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை சிறப்புக் கல்வி தரமற்றதாக, நவீனப்படுத்தப்படாத பழைய முறையாக, நமது சூழலுக்கு ஏற்ற ஆராய்ச்சி செய்யப்படாத கல்வியாக இருக்கிறது. இதை மாற்ற, வீடியோ, கணிப்பொறி போன்ற உபகரணங்களைக் கொண்டு காட்சி பூர்வ கல்வி, கையால் தொட்டு உணர்ந்து அறியும் முறை, மினியேச்சர் மாடல் மூலம் அறிவூட்டல், கலந்துரையாடல், இசை என்று நவீன சிறப்புக் கல்வியைச் சொல்லித் தருகிறோம்.

"முக்கியமாக, சிறப்பு கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இதுபோன்ற பள்ளிகளில் இருப்பதில்லை. எந்த குழந்தைக்கு என்ன மாதிரியான பயிற்சியும் கல்வியும் தேவை என்று ஆராய்ந்து கல்வி தரும் ஆசிரியர்கள் தான் சிறப்புக் கல்விக்குத் தேவை. அவர்களை உருவாக்குவது முதல் நோக்கம். முதலில் ஓராண்டு டிப்ளமா பயிற்சி அளித்து பயிற்சி காலத்திலேயே சிறப்புப் பள்ளிகளில் பயிற்சியும் ஒரு சேர அளித்து இதை அனுபவக் கல்வியாக உருவாக்க இருக்கிறோம். சிறப்புக் கல்வி ஆசிரியர்களின் தேவை அதிகமாக இருப்பதால், பயிற்சி முடித்ததும் பள்ளிகளில் வேலை வாங்கித் தருவதோடு, கிராமப் மற்றும் சிறு நகரங்கள், சிறப்புப் பள்ளி தொடங்க அனைத்து ஆலோசனைகள், உதவிகளையும் வழங்க இருக்கிறோம்.

"இது தவிர நாங்கள் தொடங்கியிருக்கும் கெலிடாஸ்கோப் மாடல் பள்ளியில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு குட்டித் தோட்டம், களிமண் கொண்டு கலைப் பொருட்கள் செய்யும் பயிற்சி உட்பட, சிறப்பு உபகரணங்கள் மூலம் பில்லர் முறை பயிற்சியை ஆசியாவிலேயே முதன் முறையாக அனுமதிபெற்றுச் சொல்லித் தருகிறோம். பார்வைக்கு எந்தக் குறையும் தென்படாத இந்தக் குழந்தைகளுக்கு, குறையொன்றும் இல்லை என்ற நிலையை உருவாக்குவது ஒன்றுதான் எங்கள் நோக்கம்" என்று சொல்லும் வசுதா நடராஜன், சிறப்புக் கல்வியில் முனைவர் பட்டமும் பெற்றுத் திரும்பியிருக்கிறார்.

சந்திப்பு : **ஜெயந்த்**
படம் : **ராஜன்**



அருள்வாக்கு

மனுஷாள் மாதிரி இருந்து அவர்களோடு கலந்து பழகி அவர்களுக்கு வழிகாட்டி உத்ஸாஹப்படுத்த வேண்டுமென்று அவன் (பரமாத்மா) அவதாரமாக வருகிறபோது வேஷம் நன்றாகப் பொருந்துவதற்காகவே கொஞ்சங்கூடத் தயங்காமல், பயப்படாமல் மனஸின் நானாவிதமான உணர்ச்சிகளையும் 'அலவ்' பண்ணுகிறான். அதனால் ஒரு அவதார புருஷனுக்கும் கோபம் வரும், பயம் வரும், அழுகை வரும், ச்ருங்காரம் வரும். ஒரு ஞானி சரீரம் எப்படி வேண்டுமானால் ஆடி விட்டுப் போகட்டுமே என்று இருக்கிற மாதிரியே அவதார புருஷன் மனஸும்தான் எப்படி வேண்டுமானால் ஆடி விட்டுப் போகட்டுமே என்று விட்டுவிடுவதால்தான் இப்படியெல்லாம் நடப்பது! அப்போதைக்கு மேல் மனஸிலேதான் அவதாரத்துக்கு இந்த உணர்ச்சிகளால் பாதிப்பு இருக்கிற மாதிரியே இருக்குமே தவிர, நம் மாதிரி அந்த உணர்ச்சிகளே அவனை அடித்துக் கொண்டு போய் விடுவதென்பது ஒருபோதுமில்லை. எத்தனை ஆசை, கோபம், அழுகை இருந்தாலும் அது அவனுடைய பரமாத்ம நிலையை பாதிக்க முடியாது; லோகத்தில் அவன் முடிவாகப் பண்ண வேண்டிய தர்ம ஸம்ஸ்தாபனத்தைப் பண்ணி முடிப்பதற்கும் குந்தகம் ஏற்படுத்த முடியாது. கொஞ்சம் ஃபெயிலாகிறதுபோல அவன் சாய்ந்தாலும் அப்புறம் நிமிர்ந்து நின்று பாஸ் பண்ணிவிடுவான். சாய்ந்தும் நிமிர்ந்தும் ஆடுவது அவனுக்கு விளையாட்டு!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

● நெல்லை தேவமைந்தன், மதுரை - 14. ❐

? விழிப்புணர்வுள்ள அரசியல் தமிழகத்தில் உருவாகுமா...?

! இப்போதே நல்ல விழிப்புணர்வுதானே! என்னாகுமோ ஏதாகுமோ என்ற பயத்தில் 'திருதிரு' என விழித்துக் கொண்டுதானே இருக்கிறோம்!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? மக்கள் தமிழ் தேசம் கட்சியின் நிறுவனர் கண்ணப்பன் அ.தி.மு.க.வில் இணைகிறாராமே?

! உதிரிக் கட்சிகளால் உபத்திரவம்தான். மற்ற உதிரிகளும் பின்பற்றலாம்.

● சே.வள்ளி, தென்கடப்பந்தாங்கல்.

' புகழ் போதைக்கு அடிமையாகாதவர் யார்..?

ஒரு ரவுண்ட் தேடிப் பார்த்தேன் வள்ளி. தராசைத் தவிர யாருமில்லை!

● வசந்தா காந்த், கருப்பம்புலம்.

? திருநாவுக்கரசு - வாழப்பாடி - ஒப்பிடுக...?

! திருநாவுக்கரசு - கலப்புத் திருமணம்

வாழப்பாடி - உறவுக்குள் திருமணம்!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 20.

? இந்திய வீரர்களுக்கு அணி உணர்வு இல்லை என்று பாய்காட் குற்றாம் சாட்டியுள்ளாரே..?

! இதைச் சொல்ல பாய்காட் எதற்கு? கிரிக்கெட் உணர்வுள்ள எட்டாம் வகுப்பு மாணவன் சொல்வானே!

● எஸ்.ரேணுகா, நீடாமங்கலம்

? மாற்றான்தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற வாசகத்தைப் பின்பற்றுபவர் யாரோ?...

! ஊஹூம்! அது ஒரு காலம்... இன்று மாற்றான் தோட்டத்திலும் மல்லிகை பூக்கும் என்பதையே ஒப்புக் கொள்ள முடியாதவர்கள், மணத்தை எங்கே உணரப் போகிறார்கள்!

● பி.உமா, சென்னை - 92. ✱

? கர்னாடக இசைக்கென்று தனியாக டீ.வி. சானல் நிறுவுவதற்கு ஏன் யாருமே முன் வரவில்லை..?

! தனி சேனல் எதற்கு? இப்போதுள்ள சேனல்களிலேயே, பாரம்பரியமான நமது புனிதக் கலைகளுக்கு உரிய கௌரவம் அளித்தாலே போதும். மக்கள் ஆதரவும் பெருகும்.



தமிழகத்தில் விழிப்புணர்வு அரசியல் உருவாகுமா?



• வழிகாட்டல்!




• உள்ளே...



• ... வெளியே!



• அலை ஓய...



• 'அதிர்ச்சி' அறிக்கை!



• முடிந்த காட்சி!

நீங்கள் கேட்டவை - தராசு

விளம்பர ஆதரவு கிடைக்காது என்று கூற முடியாது. இப்போதுள்ள சபாக்கள் யாவும் ஸ்பான்ஸர்களை நம்பித்தான் இயங்குகின்றன.

● **எம்.ஜெயமுருகன், ரிஷிவந்தியம்.**

? வீரப்பன் சிக்குவது எப்போது..?

! பின்லேடன் பிடிபடும்போது!

● **நேமத்து ஞானம், சென்னை - 62.**

? ஆண்டிபட்டியில் அம்மையார் வெற்றி பெற்றால் அவரது அடுத்தகட்ட உடனடி நடவடிக்கை என்னவாக இருக்கும்..? ('முதல்வராகப் பதவி ஏற்பது' என்று சொல்லித் தட்டிக் கழிக்கக் கூடாது...)

! கைது படலத்தை எதிர்பார்க்கிறீர்களா?

● **எஸ். இராமலிங்கம், ஆத்தூர்.**

? அழகிப் போட்டி நடைபெறுவதால் யார் பெரிதும் நன்மை அடைகிறார்கள்?

! அழகிகளும், அழகிப்போட்டி நடத்துவோரும். அது பெரிய பிசினஸ், ஸார்!

● **பொன்விழி, அன்னூர்.**

? இன்றைய நடிகைகளில் புன்னகை அரசி யார்..?

! நடிகை ரோஜாவைச் சொல்லலாம். ஆனால் அவருடைய சொந்த வாழ்க்கை - பாவம், படு சோகம்!

● **பி.சாய்குரு, மதுரை - 16**

? 'தேர்தல் முடிவு ஜெயலலிதாவுக்கு அதிர்ச்சி தரும்' என்று வைகோ கூறியுள்ளது பற்றி..?

! உண்மைதான். தொகுதிக்கும் வாக்காளருக்கும் இவ்வளவு செய்த பிறகும் தமக்கு எதிராகவும் வோட்டு விழுகிறதே என்ற அதிர்ச்சி!

● **கே.மூர்த்தி, நாமக்கல்.**

? காதல் உண்மையிலேயே மகத்தான உணர்ச்சியா..?

! அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் 'ஆர்ச்சீஸ்' போன்ற காதல் வாழ்த்து அட்டைகள் கோடிக் கணக்கில் விற்குமா..? காதலர் தினத்தையொட்டி பெங்களூரிலிருந்து மட்டும் ஒரு கோடி ரோஜா மலர்கள் ஏற்றுமதி ஆகுமா..?

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.**

? ஆண்டிபட்டியில் ஜெ. ஜெயித்து மீண்டும் முதல்வரானால் தற்போதைய முதல்வர் பன்னீர்செல்வம் என்ன செய்வார்?

! பொம்மலாட்டம் முடிந்ததும் பொம்மை என்ன ஆகும்..? பெட்டியில் தூங்கும்!

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
பி.உமா, 6F, முதல் தெரு,
கிருஹலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ்,
பாலாஜி நகர், விருகம்பாக்கம்,
சென்னை - 92

□ ரூ.100 பரிசு பெறுபவர்:
நெல்லை தேவமைந்தன்,
143, ஆறாவது தெரு தொடர்ச்சி,
கிருஷ்ணாபுரம் காலனி,
மதுரை - 625 014.



அப்பாடி, பிழைத்தது மும்பை!

உள்ளாட்சித் தேர்தல்கள் முடிந்து, முடிவுகளும் வர ஆரம்பித்துவிட்டன. சிவசேனை - பி.ஜே.பி. கூடாரங்களில் வீசும் மகிழ்ச்சி அலை, மகனா? (உதவ் தாக்கரே) மருமகனா? (ராஜ் தாக்கரே) பட்டிமன்றத்துக்கு 'மகனே' என்று திட்டவட்டமாகத் தீர்ப்பு வழங்கிவிட்டது. வழக்கம்போல் இம்முறையும் வாக்காளர்களிடையே உற்சாகமின்மை, (42%தான். வோட்டுப் பதிவு), கள்ள வோட்டு, போட்டிக் கட்சி தொண்டர்களிடையே கைகலப்பு, சில இடங்களில் முத்திரை குத்த எதுவும் வழங்கப்படாமல் கைநாட்டைப் போடச் சொல்ல, ஒரு வேட்பாளரின் சின்னமே ஓட்டுத் தாளிலிருந்து காணாமல் மோதல், பல பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து மாயமாய் மறைதல் போன்ற வழக்கமான குளறுபடிகள் இருந்தனதாம். ஆனால் இரண்டு விஷயங்கள்தான் இத்தனைக்கும் சிகரம் அமைத்தன. முதலாவது, இறந்துவிட்டதாக வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்ட ஒருவர், உயிரோடு எழுந்து வந்து, அடையாள அட்டையையும் காட்டி, வோட்டுப் போட்டுவிட்டுச் சென்றது. அடுத்தது, பால் தாக்கரேவின் பெயரே வாக்காளர் பட்டியலிலிருந்து காணாமல் போயிருந்தது! நல்லவேளை, அவருக்கு ஆறு வருட வோட்டுரிமை பறிக்கப்பட்டு, சென்ற தேர்தலின்போது அவர் பெயர் இடம் பெறாமல் இருந்ததுதான் இந்தக் குழப்பத்துக்குக் காரணம் என்பது, உடனடியாக தெளிவு செய்யப்பட்டதோ... மும்பை பிழைத்ததோ!

பிழைத்துப் போகட்டும் என்றுதான், அடிமைப்பட்டிருந்த பெண் வர்க்கத்தை அரியணையில் ஏற்றப் பார்க்கிறார்கள். ஆனால், அரசாங்கமே வரமளித்தாலும், கணவன்மார்கள் வரமளிக்கமாட்டார்கள் போலிருக்கிறதே? அந்தேரியிலிருந்து, பிற்பட்டோருக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்துக்கு லக்ஷ்மி கசார் என்பவர் விண்ணப்பித்திருந்தார். ஆனால், அவருடைய சாதி சான்றிதழுக்குப் பதிலாக, அவர் கணவன் தன்னுடையதைக் காண்பித்து 'இது போதாதா? அவள் என் மனைவிதானே?'' என்று விவாதித்திருக்கிறார். பாவம்... லக்ஷ்மியின் விண்ணப்பம் கோவிந்தாவாகிவிட்டது! இது மட்டுமா? தேர்தலில் வென்றிருக்கும் எந்தப் பெண் வேட்பாளரின் வீட்டுக்குப் பத்தரிகையாளர்கள் தொலைபேசினாலும், அதை எடுப்பது கணவன்மார்கள்தான், "ம்... சொல்லுங்க" என்று ஆரம்பிப்பார்கள். ''அவுங்க மிஸ்டர்தான். என்கிட்டேயே கேளுங்க" என்பார்கள். அப்படியும் விடாமல், மனைவியிடம்தான் பேட்டி எடுக்க வேண்டுமென்றால், ஃபோனை ஸ்பீக்கர் த்வனிக்கு மாற்றிவிட்டு, மனைவியிடம் ரிஸீவரைக் கொடுப்பார்கள். கேட்கப்படும் கேள்வி அறை

முழுதும் ஒலிபரப்பாக, கணவன்மார்கள் எட்டத்திலிருந்தே என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதை சொல்லித்தர, கிளிப் பிள்ளைகளாக அதை ஒப்பிப்பார்கள் மனைவி யர்! சாமர்த்தியமாயில்லை?

சாமர்த்தியமாகத்தான் சில விழாக்களை நடத்திச் செல்ல வேண்டியிருக்கிறது. அண்மை யில் தமிழ்ச் சங்கத்தின் அறங்காவலர் வெங்கடேஸ்வரனின் மணி விழா நிகழ்ச்சி, ஐசிஐசிஐ. சேர்மன்



வாகுல் தலைமையில் சிறப்பாக நடந்ததா? முதல் அரை மணி நேரத்துக்கு 'பாஞ்சாலி சபதம்' நாட்டிய நாடகம், அப்புறம் மாலையிட்டு, வாழ்த்தி வணங்க வந்திருந்த க்யூவும், திருப்பதி க்யூவாய் நீண்டிருந்தது. சிறப்பு விருந்தினரைத் தவிர கிட்டத்தட்ட இருபது பேச்சாளர்கள். ஒவ்வொருவரும் ஒரு பத்துப் பதினைந்து நிமி டங்கள் எடுத்துக் கொண்டிருந்தால்... வெங்க டேஸ்வரனின் வைரவிழாவே வந்திருக்கும். நல்ல வேளை... நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய பத்மா ராமமூர்த்தி, ஒரு பேச்சாளருக்கு இரண்டே நிமிடம் என்பதை அழகாக, அழுத்தமாக வலியுறுத்தினார். இரண்டு நிமிடத்தைத் தாண்டினால் அவர் களுக்கு ஒரு சிவப்பு ரோஜாவை வழங்கத் தயாராய் ஒரு பூங்கொத்துடன் நின்றிருந் தாரோ, விழாவை குறித்த நேரத்தில் கச்சிதமாக முடித்தாரோ? பூ ஒன்று புயலானது!

புயலைக் கிளப்பாமல் பூவைத் தர மும்பைக்காரர்கள் இம்முறை புதிய யுக்தியைக் கையாண்டிருக்கிறார்கள். ஆமாம். 'வாலண் டைன் டே' என்று கொண்டாடுவானேன்? சிவசேனையிடம் வம்பை விலைக்கு வாங்குவானேன்? பேசாமல் ஒரு வாரம் முழுவதும் அன்பு நெஞ்சங்களுக்காக 'ப்ரேம் தின்' என்று பெயரிட்டுக் கொண் டாடினாலென்ன? இந்தியப் பண்பாடு மாயிற்று. பரிசுப் பொருள்களைக் கொடுக்க, வாங்க, வழி வகுத்த மாதிரியுமாயிற்று. உங்களுக்கெல்லாம் காதலர் தினம்தான். எங்களுக்கோ.. 'காதல் வா...ா.ா.ரம்!'

வாரம் ஒரு ப்ரெஸ் மீட்டுக்குப் போகும் பத்திரிகையாளர்களுக்குத் தான் தெரியும். அது எவ்வளவு பெரிய தண்டனை என்று. அதுவும் காவல் துறை சம்பந்தப்பட்டதென்றால் கேட்கவே வேண்டாம். நீண்ட பெரிய லெக்சர்களுக்குத் தயாராக வேண்டும். ஆனால், ரயில்வே போலீஸ் கமிஷனர் ராகேஷ் மரியாவின் ப்ரெஸ்மீட் வினோதமும் விசித்திரமுமாயு மிருந்தது. கைதிகளைப் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் உலவவிட்டு, அவர்கள் எப்படிக் குற்றம் புரிந்தார்கள் என்பதை, 'லைவ்'வாக நடித்துக் காட்டச் சொன்னார்! பார்வையாளர்களுக்கு, கள்ளநோட்டு அடிப்பது எப்படி, மொபைல் ஃபோனைத் திருடுவது எப்படி, செயினை அடிப்பது எப் படி, பர்ஸைக் கவர்வது எப்படி என்பதி லெல்லாம் நல்ல பாடம்! பத்திரிகை யாளர்கள் பாடம் படித்ததோடு நின்றால் சரி. நுணுக்கங்களை விரிவாக வெளி யிட்டு மற்றவர்களைப் படுத்தாமல் இருக்க வேண்டும்.

- ஜெயஸ்ரீ ராஜ்



சிவகாமியின் சபதம்

ஒன்பதாம் அத்தியாயம்

ரதியின் புன்னகை

மாமல்லரின் ஓலையில் ஒரு பகுதியைச் சிவகாமி நினைத்து நினைத்து ஆனந்தித்துக்கொண்டே வீடு நோக்கி நடந்தாள். அப்படி அவளை மெய்மறக்கச் செய்தது ஓலையின் கடைசிப் பகுதியேயாகும். சக்கரவர்த்தியின் குமாரனாயிராமல் ஆயனரிடம் சிற்பக் கலை கற்கும் சீடனாயிருக்க விரும்புவதாக மாமல்லர் தெரிவித்திருந்தாரல்லவா! ஆகா! இந்த விஸ்தாரமான பரத கண்டத்தில் மூன்றில் ஒரு பாகத்தைத் தனி அரசு புரியும் சக்கரவர்த்தியின் குமாரர். தமக்குரிய அந்த மகத்தான சாம்ராஜ்யத்தை வேண்டாமென்று வெறுத்துத் தள்ளச் சித்தமாயிருக்கிறார்! எதற்காக? அரண்மனை மான்யம் பெற்று ஜீவனம் செய்யும் ஆயனச் சிற்பியின் மகளுக்காக! அந்தப் பெண்ணிடம் தாம் கொண்ட காதல் நிறைவேறுவதற்கு இந்தச் சாம்ராஜ்யம் தடையாயிருக்கிறதென்பதற்காக! இம்மாதிரி அதிசயத்தைக் கதையிலோ காவியத்திலோ கேட்டதுண்டா?

''ரதி! உன் தோழி சிவகாமியைப் போல் பாக்கியசாலியான பெண் இந்த ஈரேழு பதினாலு லோகத்திலும் இல்லையடி!'' என்று கூறிச் சிவகாமி தன்னைத் தொடர்ந்து வந்த மானின் முகத்தை இரு கரங்களாலும் பிடித்து நிமிர்த்தினாள். ரதியோ தன் அழகிய கண்களை அகல .விரித்து அவளை ஆவலுடன் நோக்கிற்று.

''இதோ பார், ரதி! நீயும் அதிர்ஷ்டசாலிதான்! எட்டு மாதத்துக்கு முன்பு

அமரர் கல்கி

ஆஹா! அந்த ஆனந்த நடனத்திலே எத்தனை விதவிதமான நடைகள்? மத்த கஜத்தின் மகோன்னதமான நடை, பஞ்ச கல்யாணிக் குதிரையின் சிருங்கார நடை, துள்ளி விளையாடும் மான் குட்டியின் நெஞ்சையள்ளும் நடை, வனம் வாழ்மயிலின் மனமோகன நடை, அன்னப் பட்சியின் அற்புத அழகு வாய்ந்த நடை! இவ்வளவு நடைகளையும் சிவகாமியின் ஆட்டத்திலே காணக்கூடியதாயிருந்தது.





உன்னிடம் மாமல்லரைப் பற்றி நான் குறைவாக கூறியதை மறந்துவிடு. 'இன்று இவர் கமலி வீட்டுக்கு நான் போகக் கூடாது என்கிறார். நாளைக்கு ரதியை உன்னுடன் அரண்மனைக்கு அழைத்து வரக்கூடாது என்பார். இப்படிப்பட்ட பெரிய மனிதர்களின் உறவு நமக்கு வராதடி, அம்மா!' என்று சொன்னேனல்லவா? அதே பல்லவ குமாரர்தான் இன்றைக்கு 'இராஜ்யம் என்னத்திற்கு, சிவகாமி! எனக்கு நீயே போதும்!' என்கிறார். அவர் சொல்வது நியாயந்தானே ரதி! எனக்கு அவரும், அவருக்கு நானும் இருந்தால் போதாதா? இராஜ்யம் என்னத்திற்கு, சண்டை, கொலை, சாவு எல்லாம் என்னத்திற்கு?''

இவ்விதம் கூறி ரதியின் இரண்டு தூக்கிய காதுகளுக்கும் நடுவில் சிவகாமி முத்தமிட்டுவிட்டு, மறுபடியும் சொல்லுவாள்.

''ரதி, உன்பாடு யோகந்தான்! மாமல்லரும் நானும் மனித சஞ்சாரமே இல்லாத நடுக்காட்டில் பர்ணசாலை கட்டிக்கொண்டு ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறோம். அப்போது இந்தச் சுகப் பிரம்மரிஷியை அடித்துத் துரத்திவிட்டு உன்னை மட்டுந்தான் எங்களுடன் வைத்துக் கொள்ளப் போகிறேன். 'உனக்கு வேலை நிரம்ப இருக்கும், ரதி! எனக்கும் மாமல்லருக்கும் இடையில் நீ அடிக்கடி தூது போக வேண்டியதாயிருக்கும்!''

ரதி கண்களினாலேயே ஒரு புன்னகை புரிந்துவிட்டு, 'போதும் இந்த அசட்டுத்தனம்!' என்பது போல் தலையை ஆட்டிவிட்டு, சிவகாமியின் கையிலிருந்து திமிறிக்கொண்டு புல் மேயச் சென்றது.

''அம்மா! சிவகாமி!'' என்ற குரலைக் கேட்டதும் சிவகாமி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்த்த இடத்தில் செடி கொடிகளை விலக்கிக் கொண்டு ஆயனர் நிற்பதைக் கண்டாள். தான் ரதியுடன் பேசிக் கொண்டிருந்தது அவர் காதிலே விழுந்ததோ என்ற எண்ணத்தினால் அவளுடைய முகத்தில் நாணமும் அச்சமும் கலந்து தோன்றின.

ஆனால், மலர்ந்த முகத்துடன் ஆயனர் கூறிய வார்த்தைகள் அவளுடைய பயத்தைப் போக்கின.

''குழந்தாய்! எனக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. நடுக்காட்டிலே யாரோடு பேசிக் கொண்டிருக்கிறாய் என்று பார்த்தேன். ரதியுடன் பேசிக் கொண்டிருக்கிறாயா? பாவம்! நீ என்ன செய்வாய்? உன்னோடு பேசுவதற்குக் கூட இவ்விடத்தில் யாரும் இல்லை. பொழுது போவதே உனக்குக் கஷ்டமாய்த்தானிருக்கும். காஞ்சியிலாவது உன் தோழி கமலி இருக்கிறாள்...''

இப்படிப் பேசிக்கொண்டே நெருங்கி வந்த ஆயனரைச் சிவகாமி கட்டித் தழுவிக்கொண்டு, ''அப்பா உங்களுக்குத் தெரியுமா? கமலி... கமலி...'' என்று மென்று விழுங்கினாள்.

ஆயனர் பதறலுடன், ''ஐயோ கமலிக்கு என்ன, அம்மா? ஏதாவது உடம்புக்கு வந்திருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஆமாம், அப்பா! கமலிக்கு உடம்பிலேதான் வந்திருக்கிறதாம்!'' என்று கூறிவிட்டுச் சிவகாமி இடி இடியென்று சிரித்தாள்.

அதைப் பார்த்த ஆயனர் விபரீதமாக ஒன்றுமிராது என்று தீர்மானித்துக் கொண்டு, ''பின்னே என்ன, சிவகாமி? ஒருவேளை இங்கே வருகிறதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறானோ?'' என்றார்.

''இல்லை, அப்பா, இல்லை'' என்று சொல்லிக் கொண்டே சிவகாமி ஆயனரின் காதினருகில் நெருங்கி, ''கமலி வயிற்றில் சின்னக் கண்ணன் வந்

திருக்கிறானாம்!'' என்றாள்.

ஆயனர் சற்று நிதானித்து விஷயம் இன்னதென்று தெரிந்துகொண்டார். முன்னைவிட அருமையுடன் சிவகாமியை அணைத்துத் தழுவிக்கொண்டு, "சந்தோஷம் அம்மா! சிவகாமியின் கல்யாணத்தின்போதே நான் ஆசிர்வாதம் பண்ணினேன்...'' என்றார்.

"அப்பா! உங்கள் செல்வக் குமாரிக்கு எப்போது கல்யாணம் ஆயிற்று?'' என்றாள் சிவகாமி.

தாம் வாய் தவறிச் 'சிவகாமி' என்று சொல்லிவிட்டது ஆயனருக்குச் சட்டென்று புலப்பட்டது. அவர் ஓர் அசட்டுப் புன்னகை செய்துவிட்டு, "என்ன அம்மா சொன்னேன்? சிவகாமியின் கல்யாணத்தின்போது என்று சொல்லிவிட்டேனா? அதனால் என்ன? உனக்கும் ஒரு நாள் கல்யாணம் நடக்கத்தான் போகிறது. நான் சொல்ல வந்தது என்னவென்றால், கமலியின் கல்யாணத்தின்போது நான் அவளுக்கு ஆசிர்வாதம் செய்தேன்; 'சீக்கிரத்தில் உனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும். அவன் என்னிடத்தில் சிற்பக்கலை கற்றுக் கொள்ள வர வேண்டும்' என்று...'' என்றார்.

இவ்விதம் கூறிய ஆயனர் பேச்சை நிறுத்திவிட்டு மௌனத்தில் ஆழ்ந்தார். அவருடைய உள்ளமானது சிவகாமியின் விவாகத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. பரஞ்சோதிக்கு அவளை மணம் செய்விக்கலாம் என்று தாம் முன்னம் எண்ணியது நினைவு வந்தது. அவனோ இப்போது பெரிய போர் வீரனாகவும் கோட்டைத் தளபதியாகவும் ஆகியிருக்கிறான். கேவலம் ஒரு சிற்பியின் மகளை அவன் மணந்து கொள்ள இணங்குவானா?

"அப்பா! என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று சிவகாமி கேட்கவும் "ஒன்றுமில்லை, அம்மா! பரஞ்சோதியுடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது நீ திடீரென்று எங்கே போய்விட்டாய்? அவனிடம் சக்கரவர்த்தி ஒரு முக்கியமான சமாசாரம் சொல்லியனுப்பியிருக்கிறார். அதைப்பற்றி உன் அபிப்பிராயத்தைக் கேட்கலாமென்று பார்த்தால், உன்னைக் காணோம். வா வீட்டுக்குப் போய்ச் சாவகாசமாகப் பேசலாம். உன் அத்தை நாம் இரண்டு பேரும் சாப்பிடாமல் எங்கே தொலைந்து போய்விட்டோம் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருப்பாள்!'' என்றார்.

இருவரும் ஒற்றையடிப் பாதையில் மௌனமாக நடந்தார்கள். ஆயனரின் உள்ளம் சிவகாமியின் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. சிவகாமியின் உள்ளமோ, தேன் மலரை மொய்க்கும் வண்டைப் போல் மகிழ மரப்பொந்தில் இருந்த மாமல்லரின் ஓலையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பத்தாம் அத்தியாயம்

ஆனந்த நடனம்

"அப்பா! நான் நடனம் ஆடி வெகு காலம் ஆகிவிட்டதே. இன்றைக்கு ஆடட்டுமா?'' என்று சிவகாமி கேட்டாள்.

இருவரும் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மரத்தடியில் கிடந்த கல்லின் மீது உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்து மரத்தடியிலே வர்ணம் அரைக்கும் கல்லுவங்களும், வர்ணம் காய்ச்சும்



அடுப்புகளும், சட்டி பானைகளும் கிடந்தன.

ஆயனர் சிறிது அதிசயத்துடன் சிவகாமியை உற்று நோக்கினார்.

"இன்றைக்கு என்ன குழந்தாய், உன் முகம் இவ்வளவு களையாயிருக்கிறது?'' என்று வினவினார்.

உடனே மறுமொழி சொல்ல முடியாமல் சிவகாமி சிறிது திகைத்துவிட்டு, பிறகு "கமலியைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து எனக்கு உற்சாகமாயிருக்கிறது. அப்பா! காஞ்சிக்குப் போய் கமலியைப் பார்த்து விட்டு வரலாமா?'' என்றாள். உடனே, தான் பிழை செய்து விட்டதை உணர்ந்து நாவைப் பற்களினால் கடித்துக்கொண்டு, "ஆமாம், அப்பா! சக்கரவர்த்தி ஏதோ நமக்குச் செய்தி அனுப்பியதாகச் சொன்னீர்களே, அது என்ன?'' என்று கேட்டாள்.

"எதிரி சைனியம் வட பெண்ணை ஆற்றைக் கடந்து விட்டதாம். காஞ்சியை நெருங்கி வந்துகொண்டிருக்கிறதாம். காஞ்சியை முற்றுகை போட்டாலும் போடுமாம். ஆகையால், 'ஒன்று நீங்கள் காஞ்சி நகருக்குப் போய் விடுங்கள்; அல்லது சோழ தேசத்துக்குப் போங்கள்' என்று சக்கரவர்த்தி சொல்லி அனுப்பினாராம். நீ என்ன சொல்கிறாய், அம்மா?''

"நான் என்ன சொல்ல, அப்பா! எனக்கு என்ன தெரியும்? தங்கள் இஷ்டம் எதுவோ, அதுதான் எனக்கு இஷ்டம்...''

"என் இஷ்டம் இங்கேயே இருக்க வேண்டுமென்பதுதான். இந்தக் காட்டை விட்டு வேறு எங்கே போனாலும் எனக்கு மன நிம்மதியிராது'' என்றார் ஆயனர்.

"எனக்கும் அப்படித்தான், அப்பா! இங்கேயே நாம் இருந்து விடலாமே?'' என்றாள் சிவகாமி.

மாமல்லரின் ஓலையில், தாம் அவளைச் சந்திக்கும் வரையில் ஒன்றும் முடிவு செய்ய வேண்டாம் என்று எழுதியிருந்ததை நினைத்துக் கொண்டுதான் மேற்கண்ட விதம் சிவகாமி சொன்னாள்.

காஞ்சிக்குப் போய்க் கமலியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஒரு பக்கத்தில் அவளுக்கு அளவில்லாமல் இருந்தது. ஆனால், எட்டு மாதத்துக்கு முன்பு திருநாவுக்கரசரைப் பார்ப்பதற்காகக் காஞ்சிக்குப் போய்த் திரும்பியதும், முதன்முதலாக மாமல்லர் தனக்கு எழுதிய ஓலையை நினைவு படுத்திக் கொண்டாள். "அரண்மனை நிலா மாடத்தில், முத்துப் பதித்த பட்டு விதானத்தின் கீழே, தங்கக் கட்டிலின் மேல் விரித்த முல்லை மலர்ப்படுக்கையில் படுத்துறங்க வேண்டிய நீ, என்னுடைய ரதசாரதியின் வீட்டில் தரையிலே விரித்து கோரைப்பாயில் படுத்துறங்கினாய் என்பதை எண்ணி எண்ணி என் மனம் புண்ணாகிறது!'' என்று பல்லவகுமாரர் எழுதியிருந்தார். இதிலே, அவர் சிவகாமியிடம் கொண்டிருந்த காதலின் மேன்மையும் வெளியாயிற்று; கண்ணபிரான் வீட்டிலே வந்து சிவகாமி தங்குவதை அவர் அவ்வளவாக விரும்பவில்லையென்பதும் புலனாயிற்று.

இதைப் பற்றிச் சிவகாமியின் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்தது. கமலியிடம் அவளுக்கிருந்த நட்புணர்ச்சியும் பல்லவ குமாரரிடம் அவள் கொண்டிருந்த காதல் வெறியும் போராடின. முடிவிலே, காதல்தான் வெற்றி பெற்றது.

"ஆகா! எத்தகைய பேதை நாம்! மகிதலம் போற்றும் மண்டலாதிபதியின் குமாரரிடம் காதல் கொள்ளத் துணிந்து விட்டு, அவருடைய கௌரவத்துக்குப் பங்கம் விளையக்கூடிய காரியத்தைச் செய்தோமே!'' என்று வருந்தி, இனிமேல்

பல்லவ குமாரரின் விருப்பம் தெரியாமல் காஞ்சிக்கே போவதில்லையென்று தீர்மானித்திருந்தாள். ஆகையினாலேதான் மேற்கண்டவாறு சொன்னாள்.

அதற்கு மறுமொழியாக ஆயனர் கவலை தொனித்த குரலில் கூறினார்: "என்ன இருந்தாலும் மகேந்திர பல்லவர் தீர்க்கமான அறிவு படைத்தவர். அவருடைய கட்டளைக்கு மாறாக நடந்தால் ஏதாவது விபரீதம் வருமோ, என்னவோ? யாரிடமாவது யோசனை கேட்கலாமென்றால், அதற்கும் ஒருவரும் இல்லை. நாகநந்தியடிகளாவது வரக்கூடாதோ? எட்டு மாதத்துக்கு முன்பு போனவர் இன்னும் வரவில்லை. பிக்ஷுவுக்கு என்ன நேர்ந்துவிட்டதோ, என்னவோ?"

ஆயனரின் மனச்சோர்வைக் கவனித்த சிவகாமி அவரை உற்சாகப்படுத்தும் பொருட்டு, மறுபடியும், "அப்பா! நான் நடனம் ஆடி வெகு காலமாயிற்றே! இன்றைக்கு ஆடுகிறேன்; பார்க்கிறீர்களா?" என்றாள்.

"சிவகாமியின் நாட்டியத்தை நானும் பார்க்கலாமா?" என்று ஒரு குரல் கேட்டது.

இரண்டு பேரும் ஏக காலத்தில் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்தில் நாகநந்தி அடிகள் நின்று கொண்டிருந்தார்.

"புத்தம் சரணம் கச்சாமி"

"தர்மம் சரணம் கச்சாமி"

"சங்கம் சரணம் கச்சாமி"

என்று நாகநந்தி கோஷித்து முடித்ததும் ஆயனர், "அடிகளே! வரவேணும்! வரவேணும்! நினைத்த இடத்தில் நினைத்த போது வந்து அருள் செய்கிறவர் கடவுள்தான் என்று பெரியோர் சொல்லுவார்கள். தாங்களும் கடவுள் மாதிரி வந்திருக்கிறீர்கள். உங்களைப் பற்றி இப்போதுதான் பேசிக் கொண்டிருந்தோம்" என்றார்.

"அப்படியா? இந்தக் காவி வஸ்திர தாரியைப் பற்றி நினைவு வைத்துக் கொண்டிருந்தீர்களா? சிவகாமியின் திருநாவினால்கூட நாகநந்தியின் பெயர் உச்சரிக்கப்பட்டதா? அவ்விதமானால் என்னுடைய பாக்கியந்தான்... ஆயனரே, உங்கள் குமாரியின் புகழ் தேசமெல்லாம் பரவியிருக்கும் அதிசயத்தை நான் என்னவென்று சொல்வேன்? திருவதிகைக்கும் தில்லைக்கும் போனேன்! உறையூருக்குப் போனேன்; வஞ்சிக்குப் போனேன்; நாகைக்கும் போயிருந்தேன்; இன்னும் தெற்கே மதுரையம்பதிக்கும் கொற்கைத் துறைமுகத்துக்கும் சென்றிருந்தேன். எங்கே போனாலும், எனக்கு முன்னால் சிவகாமியின் புகழ் போயிருக்கக் கண்டேன். காஞ்சியிலிருந்து நான் வந்ததாகத் தெரிந்ததும் எல்லாரும் சிவகாமியின் பரத நாட்டியக் கலையைப் பற்றியே .கேட்டார்கள். புத்த பிக்ஷுக்களும் ஜைன முனிவர்களும் கேட்டார்கள். சைவப் பெரியார்களும் வைஷ்ணவ பக்தர்களும் கேட்டார்கள். உறையூரில் சோழ மன்னர் கேட்டார். நாகப்பட்டினத்திலே சீன தேசத்திலிருந்து வந்திருக்கும் சித்திரக்காரர்கள் கேட்டார்கள். ஆயனரே! இப்பேர்ப்பட்ட கலைச்செல்வியைப் புதல்வியாகப் பெற நீர் எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்..."

இவ்வாறு, புத்த பிக்ஷு, சொன்மாரி பொழிந்து வருகையில் ஆயனரும் சிவகாமியும் இடையில் பேசச் சக்தியற்றவர்களாகப் பிரமித்து நின்றார்கள். கடைசியில் நாகநந்தி, "ஓ மகா சிற்பியே! சென்ற எட்டு மாதத்திற்குள் சிவகாமியின் நடனத் திறமை இன்னும் எவ்வளவோ வளர்ந்திருக்க வேண்டுமே? தென்னாடெல்லாம் புகழும் நடனராணியின் நாட்டியத்தைப் பார்க்கும் பாக்கியம் இன்று எனக்குக் கிட்டுமா?" என்றார்.

நாகநந்தியின் விஷயத்தில் சிவகாமியின் மனப்பாங்குகூட அவருடைய புகழுரைகளினால் ஓரளவு மாறிவிட்டது. எனவே ஆயனர், "ஆடுகிறாயா, அம்மா?" என்று கேட்டதும், உடனே, "ஆகட்டும் அப்பா!" என்றாள் சிவகாமி.





இருவரும் வீட்டுக்குச் சென்றதும், சிவகாமி ஒரு நொடியில் நடன உடை தரித்துக் கொண்டு நாட்டியத்துக்கு ஆயத்தமாக வந்து நின்றாள். அவளுடைய முகத்திலும் மேனி முழுவதிலுமே ஒரு புதிய ஆனந்தக் கிளர்ச்சி காணப்பட்டது. மாமல்லரின் காதல் கனிந்த மொழிகளும், அவளுடைய கலைச் சிறப்பைக் குறித்து நாகநந்தி கூறிய புகழுரைகளும் அத்தகைய கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன.

ஆயனர் போட்ட தாளத்துக் கிசையச் சிவகாமி நிருத்தம் ஆட ஆரம்பித்தாள். அதில் பாட்டு இல்லை. பொருள் இல்லை. உள்ளக் கருத்தை வெளியிடும் அபிநயம் ஒன்றும் இல்லை.

ஒரே ஆனந்தமயமான ஆட்டந்தான்.

சிவகாமியின் ஒவ்வோர் அங்கத்திலும் ஒவ்வோர் அங்கத்தின் அசைவிலும் அந்த ஆனந்தம் பொங்கி வழிந்தது.

ஆஹா! அந்த ஆனந்த நடனத்திலே எத்தனை விதவிதமான நடைகள்? மத்த கஜத்தின் மகோன்னதமான நடை, பஞ்ச கல்யாணிக் குதிரையின் சிருங்கார நடை, துள்ளி விளையாடும் மான் குட்டியின் நெஞ்சையள்ளும் நடை, வனம் வாழ்மயிலின் மனமோகன நடை, அன்னப் பட்சியின் அற்புத அழகு வாய்ந்த நடை! இவ்வளவு நடைகளையும் சிவகாமியின் ஆட்டத்திலே காணக்கூடியதாயிருந்தது.

ஆட்டம் ஆரம்பித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் சிவகாமி நடனம் ஆடுவதாகவே தோன்றவில்லை. தன் செயல் என்பதையே இழந்து அவள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவே தோன்றியது. ஆயனரும் தம்மை மறந்த, கால எல்லையையெல்லாம் கடந்த காலாதீதமான மனநிலைக்குப் போய்விட்டார்.

(தொடரும்)

கல்லூரி வைரம்

எவரெஸ்ட் சிகரத்தில் கால்பதித்த முதல் இந்தியன் டென்சிங், வி.சி.குகநாதன், வாழப்பாடி ராமமூர்த்தி உட்பட பல பிரபலங்கள் படித்த காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் வைரங்களைத் தேடி, வளாகத்துக்குள் நுழைந்தோம். வாசலில் விழித்துக் கொண்டிருந்த நம்மை வரவேற்றார் வணிகவியல் மூன்றாமாண்டு மாணவர் வெ. முருகன்.

காஞ்சி கேபிள் தொலைக்காட்சியில், நிகழ்ச்சி தொகுப்பாளர். இதனால் கல்லூரியில் மட்டுமல்ல, தெருக்களில் நடந்தாலும், 'ஹாய் முருகன்' என்று கூப்பிடும் அளவுக்கு ஹீரோ. கல்லூரி தந்திருக்கும் 'கவிச்சுடர்' பட்டத்தைக் காப்பாற்றும் விதமாக, தலைப்புக்கொடுத்தால் நொடிக்கொரு கவிதை சொல்லும் ஆற்றல் பெற்றவர். நாம் கொடுத்த தலைப்பு 'உயிர்ப்பிணம்'.

"எதிர்ப்படும் சவ ஊர்வலம்
நினைவூட்டுகிறது
எனக்குள்ளும் ஒரு பிணமிருப்பதை"
இது முருகன் சொன்ன நொடிக் கவிதை!

வேதியியல் இறுதியாண்டு படிக்கும் ஏ. ராஜசேகரன், காஞ்சியில் ஒளிபரப்பாகும் இன்னொரு கேபிள் சேனலான 'உதயம்' தொலைக்காட்சியில் தோன்றும் ஊரறிந்த முகம்!


இருநூறு கவியரங்க மேடைகளைக் கண்ட கவிதைப் புயல். காஞ்சியில் வெளிவரும் ராம்பாரதி மாத பத்திரிகை நிருபர், இவர் தரும் சூடான செய்தி:
வெ. இறையன்பு போன பிறகு காஞ்சியில்
பழையபடி பாலாற்று மணல்
கொள்ளை தூள் பரக்கிறது,
அதுவும் ஆளும் கட்சிப் பிரமுகர்களின் ஆசியோடு!



• கமன்



• உமா மகேஷ் • பிரசாத்



• முருகன்

கே. கமன் இறுதியாண்டு வேதியியல் மாணவர். இவரது சொந்த கிராமமான ஏகனாபுரம், கிராமிய கூத்துகளுக்குப் பெயர் பெற்றது. அதுவும் ஏகனாபுரம் பாணி கூத்து

என்று சொல்லும் அளவுக்கு. இவர் கல்லூரியில் படித்தாலும் கூத்துக் கலைஞர். திரௌபதை, குறவஞ்சி, கர்ணனின் மனைவி பொன்னுருவி என்று ஒரு டஜன் பெண் பாத்திரங்களை ஏற்று நடித்து எட்டுக் கட்டையில் பாடும் அசாத்திய திறமையாளர்.

"அழிந்து வரும் கிராமியக் கூத்தைக் காக்க, கூத்துபற்றி பி.எச்.டி. ஆராய்ச்சி செய்யப் போகிறேன்... கூத்துக்காக வாழ்வேன்" என்கிறார்.



• ராஜு சேகர்

இறுதியாண்டு கணிதம் படிக்கும் கு. உமா மகேஷ், கல்லூரி நாடகங்களில் பெண் வேடம் போடும் பிரபலம். சமூக நாடகக் குழுக்களிலும் தம்மை இணைத்துக் கொண்டிருக்கும் இவருக்கு ஒரு கவலை... பெண் வேடத்திற்காக அடிக்கடி மீசையைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறதாம்! இதே துறையில் படிக்கும் பிரசாத் ஆங்கில நாடகங்களில் அதிகம் நடிப்பவர். தனி நடிப்பிலும் மௌன நாடகம் போடுவதிலும் கலக்கத் தொடங்கி, படிக்க வந்த முதலாமாண்டே எல்லோர் கவனத்தையும் ஈர்த்திருக்கும் திறமையாளர். 'உங்களுக்கு யாரு மௌனம் பிடிக்கும்?' என்றால், 'பன்னீர் செல்வம்' என்று சொல்லிவிட்டு அவரைப் போலவே நடித்துக் காட்டி நம்மை அசத்தினார்!

அறிந்த முகங்கள்!



• தனசேகர் • பிஜேஷ்குமார்

அகில இந்திய அளவிலான கைப்பந்து போட்டிகளில், தமிழக அணி சார்பில் விளையாடி வெற்றியைச் சாதித்து வந்திருக்கும் பி. பிஜேஷ்குமாரும் தனசேகரனும் "வாலிபால் என்றால் பச்சையப்பன் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி என்றால் வாலிபால்" என்கிறார்கள் பெருமிதத்தோடு.

— ஜெயந்தன்

படங்கள் : ராஜன்

கொடி பறக்குது!



'இந்தியக் குடிமக்கள் அனைவரும் மூவண்ணக் கொடியை, தங்கள் வீடுகளிலும், அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும் பட்டொளி வீசிப் பறக்க விடலாம்' என்று சமீபத்தில் இந்திய அரசு அறிவித்தது. இத்தகைய முடிவை அரசாங்கம் எடுக்க மூல காரணமாக இருந்தவர் இரும்பு எஃகு தொழிலதிபரான முப்பத்தொரு வயது நவீன் ஜிண்டல்.

"நான் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த சமயம், என்னுடன் பயின்ற சக அமெரிக்க மாணவர்களின் டீஷர்ட், ஜீன்ஸ், தொப்பி என்று எல்லாவற்றிலும் அந்நாட்டு தேசியக் கொடி இடம் பெற்றிருக்கும். அவ்வளவு ஏன், இளம் பெண்கள் அணியும் நீச்சல் உடையில்கூட தேசியக் கொடி டிசைன் இருக்கும். இதையெல்லாம் அவர்கள் 'நான் அமெரிக்க பிரஜை என்பதற்குப் பெருமைப்படுகிறேன். ஐ லவ் அமெரிக்கா' என்று தங்கள் தேசப் பற்றை வெளிக்காட்டவே செய்கிறார்களே தவிர, தேசியக் கொடியை அவமதிக்கும் நோக்கத்தில் இல்லை. அமெரிக்காவில் படிப்பை முடித்துவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பியவுடன் எங்கள் வீட்டின் முகப்பிலும், தொழிற்சாலையின் நுழைவாயில் பகுதியிலும், நம் நாட்டு மூவண்ணக் கொடியைப் பறக்க விட்டேன்.


"கொடியை ஏற்றக்கூடாது' என்று எனக்கு அரசு தரப்பிலிருந்து அறிவுறுத்தல் வந்தது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் உட்பட எவருக்கும் வீடுகளிலோ, அலுவலகத்திலோ சில குறிப்பிட்ட தேசிய நாட்கள் தவிர, மற்ற நாட்களில் தேசியக் கொடியைப் பறக்கவிட அனுமதி கிடையாது என்று காரணம் கூறப்பட்டது.

"டெல்லி உயர்நீதி மன்றத்தில் இதை எதிர்த்து ஒரு வழக்கு தொடர்ந்தேன். 1995ல் நீதிபதிகள் டி.பி. வாத்வா, எம்.கே. சர்மா இருவரும் அரசியல் சட்டத்தின் 19(1)(ஏ) பிரிவின்படி, இது குடிமகனின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று கூறி, எனக்குச் சாதகமாக தீர்ப்பு கூறினார்கள். 1996ல் சுப்ரீம் கோர்ட், டெல்லி உயர்நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்புக்குத் தடை விதித்தது.

இப்போது விசாரணை முடிந்து என் போன்ற இந்தியர்களின் மன உணர்வுக்கும், தேசப்பற்றுக்கும் மதிப்பளித்து, இப்படி ஒரு தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. உடனே, நண்பர்களுக்கும், ஊழியர்களுக்கும் தேசியக் கொடியைப் பரிசளித்து, எனது சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டேன்" என்கிறார் நவீன் ஜிண்டல்.

- கௌதம்

நன்றி : சன்டே டைம்ஸ்



திருமதி. என்.செல்லம்மாள்

தோற்றம்	மறைவு
1.6.1906	23.1.2002 (புனே)

கணவர் : லேட் N. நாராயணன், மதுரை சுதந்திரப் போராட்டத் தியாகி, தொண்டர்படைத் தலைவர் - வைக்கம் சத்தியாக்கிரகம், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் தொடக்க உறுப்பினர், காரியதரிசி AISA (தமிழ்நாடு).

புதல்வர்கள் : என்.மோஹன், என்.ராஜகோபாலன்

புதல்விகள் : மாயாதேவி கிருஷ்ணன், லக்ஷ்மி சர்மா, சாரதா நீலகண்டன், மங்களம் ராஜகோபாலன்

மற்றும் மாப்பிள்ளைகள், மருமகள்கள், பேரன், பேத்தி, கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேத்திகள் பெரிய கோட்டை வம்ச உறுப்பினர்கள், பூசம் வக்கீல் பரிவார உறுப்பினர்கள்.

Mrs. Rajeswari Krishnamoorthy,
D-4, 'Praveen's Vetrivela', III Floor, 1, Devanathan Colony,
West Mambalam, Chennai - 600 033. Ph : 4850453




காதலுக்கு

ஏ வி.எம். ஸ்டூடியோவுக்குள் நுழைந்த நம்மை, குளிர்ச்சியாக வரவேற்று வசீகரித்தது, திடீரென்று அங்கே தோன்றியிருந்த வடக்கத்திய மார்வாடி பாணி வீடு. இருக்காதா பின்னே! வீட்டுக்குள் எங்கும் எதிலும் உறைபனி மயம். அங்கே ஒய்யாரமாக ஒரு தேவதை, சைக்கிள் ஓட்டிக் கொண்டே பாடிக் கொண்டிருந்ததைக் கண்ட நமக்கோ காஷ்மீரில் இருப்பது போன்ற பரவசம்.

"தீவானா தீவானா நெற்றி நனைத்தவர் நீதானா!

தீவானா தீவானா என் நெஞ்சைப் பிளந்தவன் நீதானா"



ீலன் இல்லை!

வைரமுத்துவின் குறும்பு கொப்பளிக்கும் வரிகளுக்கு பரத்வாஜின் இசை தவழ்ந்துவர நளினமாய் வாயசைத்துக் கொண்டிருந்தார் அந்த வடக்கத்திப் பெண் கிரண் (சொந்த ஊர் ஜெய்ப்பூராம்) ஏவி.எம். நிறுவனத்துக்காக சரண் இயக்கும் ஜெமினியின் பாடல் காட்சி படப்பிடிப்பு.

இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும் ஏவி.எம். ஸ்டுடியோவுக்குள் நுழைகிறோம். இந்த முறை அதே மார்வாடி வீட்டில் மழை பெய்து கொண்டிருக்க, அதே பாடலுக்கு

கிரண் ஆடிக் கொண்டிருக்க... என்ன திடீரென்று மழைக்கு மாறிட்டாங்க?

இன்னும் இரண்டு நாள் கழித்து ஸ்டுடியோவுக்குள் நுழைந்தபோது அனிச்சையாக நம் கண்கள் மார்வாடி வீட்டுப் பக்கம் திரும்பின. ஆச்சர்யம்! வீடே பசுஞ்சோலையாக மாறி விட்டிருந்தது. கிரண் 'தீவானா தீவானா' என்று ஆரஞ்சு நிற உடையில் ஓர் ஆரஞ்சுப் பழம் மாதிரி ஆடிக் கொண்டிருந்தார். இந்த முறை இயக்குனர் சரண் நம்மிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

"ஒரே பாடலுக்கு, ஒரே வீட்டை வெவ்வேறு சூழ்நிலைகளில் படம் பிடித்துக் கொண்டிருக்கிறீர்களே. ஏதாவது சினிமா புரட்சியா?" என்றால், பக்கத்தில் வந்து காதோரம் கிசுகிசுத்தார். "ஒரு பெண் காதல் வயப்பட்டுவிட்டால் அவளது உலகில் எல்லா வித தட்ப-வெப்ப நிலைகளும் வந்து போகும். இதையே ஒரு பாடலுக்கு, தீமாக வைத்தால் என்ன என்று தோன்றவே வைத்துவிட்டேன். பனி, மழை, பசுஞ்சோலை என்று அவளது வீடு மாறுகிறது. வீட்டில் உள்ள உறுப்பினர்கள் எல்லோரும் ஏன் மாறுகிறது என்று கேள்வி கேட்காமல் இந்தச் சூழ்நிலைகளின் சுகத்தை அனுபவிக்கிறார்கள். அதைத் தான் படம் பிடித்துக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

"மார்வாடி ஸ்டைல் வீடு வேண்டும் என்றதும் முப்பது லட்சம் செலவில் இரவு பகலாக உழைத்து, இருபத்தைந்து நாட்களில் இந்த வீட்டை உருவாக்கிக் கொடுத்து விட்டார் தோட்டா தரணி. ஏழு நாட்களில் இந்தப் பாடலை எடுத்து முடித்திருக்கிறோம். இங்கிருந்து போய் பாலிவுட்டை கலக்கிக் கொண்டிருக்கும் பிருந்தாதான் கோரியோகிராபர்" என்றார்.

"தொடக்க விழா அன்றே ஏப்ரல் பதினான்காம் தேதி இன்னின்ன தியேட்டர்களில் படம் ரிலீஸ் என்று ஏவி.எம். சரவணன் துணிச்சலாக அறிவித்தாரே. நம்பலாமா?" என்றால், "அதில் மட்டும் ஒரு சின்ன மாற்றம். ஏப்ரல் பன்னிரண்டாம் தேதியே ரிலீஸ்" என்று அடக்கமாய்ச் சிரிக்கிறார் சரண்!

- சக்கரத்தாழ்வார்

காதில் விழுந்தவை


● தமிழக அமைச்சர்கள் பெரும்பாலோர் உதறலில் இருக்கிறார்கள். பதற்றத்துக்குக் காரணம், அம்மா மீண்டும் முதல்வர் பதவி ஏற்கும்போது, 'அமைச்சரவையை முழுவதுமாக மாற்ற இருக்கிறார்' என்ற தகவல்தான். அமைச்சர்களின் செயல்பாடு குறித்து ஒரு பெரிய அறிக்கையைத் தயாரித்திருக்கிறது மாநில உளவுத்துறை. பொன்னையன், தம்பித்துரை ஆகியோர் இலாகாக்களில்கூட கணக்கம் இருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஏற்கெனவே அமைச்சர் பொறுப்பில் அனுபவம் வாய்ந்த காளிமுத்து போன்றவர்களை அமைச்சரவைக்குள் கொண்டு வரும் ஐடியாவும் அம்மாவுக்கு இருக்கிறது. "எங்களை எங்கு செயல்பட அனுமதித்தார்கள்? அதிகாரிகள் ராஜ்யம் அல்லவா நடந்தது. அமைச்சர்கள் ஏதாவது விளக்கம் கேட்டால்கூட, 'முதல்வரின் செயலரிடம் நாங்கள் பேசிக்கொள்கிறோம்' என்று அதிகாரிகள் மழுப்புவார்களே தவிர முறையாக பதில் சொல்ல மாட்டார்கள். ஏதோ வீடு, கார் என்று அனுபவிக்கிறார்களே தவிர வேறு எந்த சுதந்தரமும் கிடையாது" என்று வெறுத்துப் போய்ச் சொன்னார் ஒரு ஜூனியர் அமைச்சரின் உதவியாளர். கடந்த ஆறு மாத காலமாக நிர்வாகமே ஸ்தம்பித்துப் போன நிலையில், சில மூத்த அதிகாரிகளும் பந்தாடப் படுவார்கள் என்கிறது கோட்டை வட்டாரம்.

● பதினெட்டு எம்.எல்.ஏக்கள் உள்ள பா.ம.க.வில் ஆறு பேர் கட்சித் தாவினால் கட்சித் தாவல் தடைச் சட்டத்தில் மாட்ட மாட்டார்கள். ஏற்கெனவே தாராபுரம் எம்.எல்.ஏ சிவகாமி வின்சென்ட்



• தம்பிதுரை

நடுக்கத்தில் அமைச்சர்கள்!



• பொன்னையன்

விலகி நிற்க, மற்ற ஐந்து எம்.எல்.ஏக்களை வலை வீசிப் பிடிக்க ஆளும் கட்சியும், அதிருப்தி பா.ம.க பிரமுகர்களும் கூடவே உளவுத்துறை போலீஸும் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றனர். அம்மா முதல்வர் பொறுப்பில் இருக்க, பட்ஜெட் கூட்டத் தொடர் துவங்கும்போது பா.ம.க உடைபட்டிருக்க வேண்டும் என்பது அம்மாவின் விருப்பமாம். அம்மாவுக்கு பா.ம.க மீது ஏன் இந்த கோபம்?

"ஆண்டிபட்டியில் ஜெயலலிதாவை எதிர்த்துப் பொது வேட்பாளர் போட வேண்டும்" என்று டாக்டர் ராமதாஸ் பேசியதுதான் காரணமாம். செங்கோட்டையன் பின்னணி வேலைகளைச் செய்து கொண்டிருக்க, தோழியின் கணவரும் தம் பங்குக்கு உடைக்கும் வேலையில் உதவுகிறாராம். இதற்கிடையில் சிவகாமி வின்சென்ட் மீண்டும் பா.ம.க.வுக்கு வர விரும்புவதாகவும் ஆனால் போலீஸில் அவரை மிரட்டி வைத்திருப்பதாகவும் பா.ம.க பிரமுகர்கள் சொல்கிறார்கள்.

● வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்துவிட்டதாக அந்த மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி மீது வழக்கு. ஆனால் அந்த வழக்கில் ஜெயித்து மீண்டும் போஸ்டிங் வாங்கினார். வறட்சியான புது போஸ்டிங்கிலும் கருட்டிவிட்டார் அவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் இன்பம் ஒன்றையே குறிக்கோளாக வைத்துச் செயல்படும் அவருக்கு வருமான வரித்துறையின் அப்பீலைப் பற்றியும் கவலையில்லையாம்.

— சஞ்சயன்

படங்கள்: சௌரா



அந்த மாளிகையின் பெரிய கதவைச் சீருடை தரித்த பட்லர் திறக்கவும் காலம் பின்னோக்கி ஓடியது. வெளியில் உள்ள சுதந்தர ஜனநாயகம் மறந்துபோய், பிரிட்டிஷ் காலனீய காலத்துள் காலெடுத்து வைப்பது போல் உணர்வு. ஒரு கணம்தான்.

''ஹல்ல்ல்லோ, டாக்டர் ரஞ்சி! வெல்கம் டு சென்னை. உங்களை எதிர்பார்த்திருந்தேன்.'' உற்சாக வரவேற்பாளராய் அனில் வர்மா. அவர்கள் நிறுவனத்தின் இந்தியத் தலைமை.

''நமஸ்தே, மிஸ்டர் வர்மா.'' மாளிகையின் மூன்று மாடி உயர நுழைவுப் பகுதியைப் பார்வையிட்டுக் கொண்டே சொன்னாள் ரஞ்சி. புகுந்த நாட்டைப் போல் வெறுமே பெயர் சொல்லி இவரை அழைக்க முடியாது. வர்மாவின் வயதுக்கான மரியாதை. அவரும் அவளைப் பெயர் சொல்லி அழைக்க மாட்டார். அவள் பதவிக்கான மரியாதை.

''மிஸ்டர் வர்மா, இந்த விருந்துக்கு அழைத்ததற்கு நன்றி. என்னைச் சந்திப்பதற்காக மும்பையிலிருந்து நீங்கள் சென்னை வந்ததற்கும்.''

''ஓ, இந்த விருந்தும் உங்கள் சந்திப்பும் சேர்ந்து நடப்பதற்கு நான்தான் நன்றி சொல்ல வேண்டும்.''

இந்தப் பரஸ்பர நன்றி நவிலுதல் நீண்டு கொண்டே போகுமோ. இந்த நுழைவுப் பகுதியிலேயே அவளை நிறுத்தி விடுவாரோ மனிதர். மெல்ல நகர்ந்தாள் ரஞ்சி. வர்மாவும் அவளுடன் நடந்தார்.

''மிஸ்டர் வர்மா, என்ன கம்பீரமான மாளிகை இது!'' வழுவழுவென்றிருந்த கருங்கற்கள் பாவிய நுழைவுப் பகுதியின் மறுமுனையில், பெரிய கடைந்த தேக்கு வாசலும் படிக்கட்டும், படிகளின் உச்சியில் பெரும் வாசல் வடிவிலான ஐம்பொன் விளக்குச் சரம். இரு புறமும் வளைந்து வரவேற்கும் உயரமான யானைத் தந்தங்கள்.

படிகளில் ஏறும்போது, மாளிகை பற்றி வர்மா கொஞ்சம் சொன்னார். சுமார் எழுபது வருடங்களுக்கு முன்னால் ஓர் ஐரோப்பியரால் கட்டப்பட்டது. ஐம்பது அறைகள். இப்போது ஓர் இந்தியருக்குச் சொந்தம்.

முதல் தளத்து ட்ரோஃபி அறையில், வெள்ளிப் பரிசுக் கேடயங்களும் கோப்பைகளும் கண்ணாடி அலமாரிகளினுள் மின்னின. பழங்காலத்திய போலோ பந்தயங்கள், குதிரைப் பந்தயங்களின் படங்கள் சுவர்களை நிறைத்தன.

''பிரிட்டிஷ் ராஜின் சுவடுகள் இங்கே இன்னும் உறைந்திருக்கின்றன, மிஸ்டர் வர்மா!'' ரஞ்சி சுற்றிலும் பார்த்து வியந்து கொண்டே நடந்தாள்.

மெல்லிய சிரிப்புகளும் தாழ்ந்த குரல்

21

காஞ்சனா தாமோதரன்

இக்கரையில்



உரையாடல்களும் நிறைந்த விசாலமான அரைவட்ட அறைக்குள் இருவரும் நுழைந்தார்கள். வர்மா ஒவ்வொருத்தராய் அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிலரைச் சந்தித்திருக்கிறாள். சிலரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள். சிலர் புதிது.

பட்லர் ஏந்தி வந்த தாம்பாளத்திலிருந்து ஒரு 'ஷேம்பெய்ன் க்ளாஸை' எடுத்துக் கொண்டார் வர்மா. "குளிர்ந்த தண்ணீர்ப் பாட்டில், ப்ளீஸ். ஐஸ் வேண்டாம்," என்ற ரஞ்சியை ஆச்சரியக் கேள்வியுடன் பார்த்தார்.

ரஞ்சி தனக்குள் சிரித்துக்கொண்டாள். இருபத்து இரண்டு வருட அமெரிக்க வாழ்க்கை, அமெரிக்கப் படிப்பு, அமெரிக்கக் கணவன், பன்னாட்டு நிறுவன நிர்வாகி, மது வகைகளை மறுப்பவள், தென்னிந்திய மதராஸி. பெண், கட்டுப்பெட்டி என்று பல மேலோட்டமான முரண்களுக்குள் அவர் சிக்கித் திணறுவது புரிந்தது. பாவம்!

தண்ணீருக்குள் எலுமிச்சை வில்லையைப் போட்டவாறே, "தனி மனிதச் சுதந்தரம், அவ்வளவுதான், மிஸ்டர் வர்மா" சிரித்தாள்.

"அஃப்கோர்ஸ், அஃப்கோர்ஸ்" வர்மாவும் சிரித்துக் கொண்டார்.

விருந்தினர்களுடன் உரையாடிக் கொண்டே அறையைச் சுற்றி வந்தாள். யு.எஸ். பொருளாதாரம், இந்தியப் பொருளாதாரம். உலகப் பொருளாதாரம். உலக அரசியல். இந்திய அரசியல், சம்பிரதாயக் கேள்விகள். மிக மிகச் சம்பிரதாயப் பதில்கள். ஆழமான கேள்விகளும், உண்மையான பதில்களும் பரிமாறிக் கொள்ள இது சரியான இடமில்லை என்று

எல்லாருக்குமே தெரியும்.

'டமாஸ்க்' உறைகள் போட்ட சோஃபாவில் ஆசுவாசமாய்ச் சாய்ந்துகொண்டான். தேக்கு விட்டத்தின் நுணுக்கமான கடைசல்களும், பளிங்குத் தரை மேல் பளிங்கினால் செதுக்கிய கோலங்களும் ஒத்திருப்பதை ரசித்தான்.

''டாக்டர் ரஞ்சி, நீங்கள் கட்டாயம் சந்தித்தே ஆக வேண்டியவர் இவர்'' என்ற வர்மாவின் குரல்.

அவன் புன்சிரிப்புடன் நிமிர்ந்தான். கண்கள் விரிந்தன. இவரா? அவன் பெரிதும் மதிக்கும் ஒரு முக்கிய இந்தியத் தொழி லதிபர். இதுவரை சந்தித்ததில்லை.

வர்மா அறிமுகச் சடங்குகளைச் செய்து வைத்தார். அறையின் எதிர்ப்பக்கத்தில் தெரிந்த இன்னொரு தொழிலதிபருடன் பேச விரைந்தார்.

"உங்கள் சேர்மன் ஏ.ஜே.யும் நானும் ஒரு மாதத்துக்கு முன் ப்ரேஸிலில் சந்தித்தோம். ரஞ்சி. உங்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார் -- சக இந்தியர் என்ற முறையில் மகிழ்ச்சி."

''நன்றி. உங்கள் பேட்டி ஒன்றைச் சமீபத்தில் யு.எஸ். நாளிதழில் படித்தேன். சில கருத்துகள் வித்தியாசமானவை. முக்கியமானவை."

எதிர் சோஃபாவில் அவர் சாய்ந்து கொண்டார்.

"எதைச் சொல்கிறீர்கள்?"

"ஒரு பெரிய வணிக நிறுவனத்துக்கும் அது புழங்கும் சமூகத்துக்கும் இருக்க வேண்டிய உறவு பற்றி. தொழில்முறை நேர்மை பற்றி. இன்னும் நிறைய..."

"சரியென்று தெரிவதைச் செய்வது முக்கியம், இல்லையா?"

"நிச்சயமாக. நம் நாட்டின் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

''இன்னும் அதிகமான வளத்துடன் இருக்கும் என்பது என் நம்பிக்கையும் ஆசையும்."

கொஞ்ச நேரம் யோசித்தார்.

''ரஞ்சி வெளியே டெரேஸில் உட்கார்ந்து பேசலாமா? இன்னும் அரை மணி நேரத்தில் நான் கிளம்ப வேண்டும். அதற்குள் கொஞ்சம் பேசலாம்."

தேக்குக் கதவுகளுக்கு வெளியே செங்கல் பாவிய மொட்டை மாடி விரிந்து கிடந்தது. கீழே அடையாறு சுருங்கி ஓடியது. எதிர்க்கரை மரங்களின் நடுவே, இன்னொரு மாளிகையின் சன்னல் கண்ணாடிகள் மாலை வெயிலில் மின்னித் தெரிந்தன. ஆற்றில் முங்கிக் குளித்த காற்று வெக்கையைத் தணித்துக் கொண்டிருந்தது.

"உங்களுக்கு இந்த வெப்பம் தாங்குமா, ரஞ்சி? அல்லது உள்ளே போவோமா?"

"நான் எந்த நாட்டில் பிறந்தவன் என்று நினைக்கிறீர்கள்?" ஒரு மிடறு தண்ணீர் விழுங்கிவிட்டு ரஞ்சி சிரித்தான்.

"அதில்லை. எல்லாம் பழக்கம்தானே! இதுவே வசதி என்றால் சரி."

பூப்போட்ட பெரிய குடையின் கீழுள்ள வட்ட மேஜையைச் சுற்றிய நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள். பலவகை சாண்ட்விச்சுகள், பஃப்ஸ், உலர்ந்த பழங்கள், பருப்புகள், குளிர்ந்த தண்ணீர் என்று அவர்கள் முன் வைத்துப் போன பட்லருக்கு நன்றி சொன்னான் ரஞ்சி. பேச்சைத் தொடர்ந்தான்.

"எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்..."


''முதலில் உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள், ரஞ்சி."

மிகச் சுருக்கமாகச் சொன்னான்.

"தொழில் விஷயமாக இப்போது தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, தெற்காசியா என்று சூறாவளிச் சுற்று. நம் நாடுதான் அதன் இறுதிப்புள்ளி."

அவர் சிறிது நேரம் பேசாமலிருந்தார். 'ஹ்ம்ம்ம்... மூன்றாம் உலக நாட்டுப் பயணமா? ஏதாவது முக்கிய காரணம் இருக்கும்."

''குறிப்பிட்ட காரணம் ஒன்றுமில்லை. எங்கள் நிறுவனத்தின் அந்தந்த நாட்டுத்



பட்ஜெட் பீட

எட்டு பட்ஜெட்களை வெளிக்கொணர்ந்த பெருமை மொரார்ஜி தேசாய்க்கு உண்டு. 1959-64 வருடங்களில் ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோது ஐந்து முறையும், 1967-70ல் இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது மூன்று முறையும் நிதியமைச்சராக விளங்கியவர் மொரார்ஜி தேசாய்.

தலைமைகளை நேரில் சந்தித்துச் சில விஷயங்கள் பேசுவதற்கு."

"நல்லதுதான், ரஞ்சி." கொஞ்ச நேர மௌனம். தம் எண்ணங்கள் பற்றி விரிவாகப் பேசினார். எவ்வளவு தொலை நோக்கும் நம்பிக்கையும் உறுதியும் சமூகப் பிரக்ஞையும். "ரஞ்சி, மொத்த மனித இனமுமே இன்னும் போக வேண்டிய தூரம் அதிகம். உலகில் நமக்கென்று ஒதுக்கப்பட்ட சிறு மூலையில் இருந்து ஆக்க பூர்வமாகச் செயல்பட்டால், அதுவே பெரிது."

அவர் இறுதியில் சொன்னது அவளுக்கு முக்கியமாய்த் தெரிந்தது. அந்த வார்த்தைகளையே மனம் சுற்றிச் சுற்றி வந்தது. இவர் சொன்னதை எல்லாம் நிதானமாய் யோசித்து, அசை போட வேண்டும்.

குளிர்ச்சியான கடல் காற்றும், முணுமுணுப்பின்றி ஓடும் அடையாறும், மெல்லிய சுருக்கலில் மாடிக் கைப்பிடிச் சுவரின் மங்கலான விளக்குகளுமாய்ச் சேர்ந்து மனத்தில் அமைதி விரவியது. ஒரு சராசரி வர்த்தக விருந்துச் சூழலில் அவள் சிறிதும் எதிர்பார்த்திராத மன அமைதி. பிறந்த நாட்டின் மாயமோ?

இதுவரை வெயிலுக்குப் பயந்து வீட்டினுள்ளிருந்த விருந்தினர் கூட்டம் மெல்ல மொட்டை மாடிக்கு வர ஆரம்பித்தது. வர்மாவும், "இங்கேயா இருக்கிறீர்கள்? வீட்டுக்குள்... மன்னிக்கவும்... மாளிகைக்குள் தேடிப் பார்த்து நான் சோர்ந்து போய் விட்டேன்!" வர்மா இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்.

"ரஞ்சி?" மற்றுமொரு பரிச்சயமான குரல்.

ரஞ்சி திரும்பிப் பார்த்தாள். "மைக்கெல்! ஹாய்..."

சுற்றிலும் உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்தாள். பிரிட்டிஷ் எழுத்தாளர், வரலாற்று ஆசிரியர். பெரிய திரை, சின்னத் திரை என்று எதையும் விட்டு வைக்காதவர். இந்தியா முழுக்கப் பரதேசி போல் அலைந்து திரிந்து விவரணப் படம் எடுத்தவர். யு.எஸ். பல்கலைக்கழகத்தில் உரையாற்ற வந்திருந்தபோது அவளுக்கு அறிமுகம்.

"ரஞ்சி - க்ரிஸ் வீட்டில் ஒரு வாரம் தங்கியிருந்தேன். விருந்தினரை உபசரிப்பதில் கணவன், மனைவி இருவரையும் ஜெயிக்க முடியாது." மைக்கெல் சிரித்தார். தம்முடன் வந்திருந்தவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

"திடீர் இந்தியப் பயணமா, மைக்கெல்?"

"மீண்டும் ஆன்மா வெறுமையாகத் தொடங்குவது போலிருந்தது. இங்கு ஓடி வந்துவிட்டேன்."


மற்றவர்கள் மரியாதையான புன்சிரிப்புகளை உதிர்த்தார்கள். "புரிகிறது, மைக்கெல்" என்றாள் ரஞ்சி.

"முந்தைய தரம் நீங்கள் வந்ததிலிருந்து இந்தியா மாறியிருக்கிறதா, மைக்கெல்?" விடைபெறுவதற்காக எழுந்த தொழிலதிபர், வர்மாவின் கேள்வியைக் கேட்டதும் மீண்டும் உட்கார்ந்தார். மைக்கெலைப் பார்த்தார்.

"நிச்சயமாக. நிறைய மாற்றங்கள்" மைக்கெல் யோசித்தார். "கடந்த காலத்தின் பெரும் பகுதிகள் அலுங்காமல் அப்படியே அருகருகே இந்தியாவில் இன்னும் இருப்பதாய் உங்கள் வரலாற்றாளர் ரோமிலா தாபர் சொல்கிறார். இந்தக் கால அடுக்கின் மேல் இன்னொரு யுகம் வந்து மோதுகிறது. யுகங்களின் மோதல் பல ரக அதிர்வுகளை உண்டாக்குவது இயல்பு..." சின்ன மௌனத்தின் பின் தொடர்ந்தார்: "என்னுடையது அந்நியனின் பார்வை. இங்கேயே இருக்கும் நீங்கள் உணராததா?"

"மேற்கில் ஐந்தாறு தலைமுறைக் காலத்தில் இயல்பாய் ஏற்பட்ட சில மாறுதல்களைப் பத்துப் பதினைந்து வருடங்

பட்ஜெட் பீட்



இன்னமும் கூட ஆயிரம் ரூபாய் நோட்டைக் கண்ணில் பார்க்காத இந்தியர்கள் உண்டு. உலகிலேயே மிக அதிகமான தொகைக்கு அச்சிடப்பட்ட நோட்டு எந்த நாட்டுடையது தெரியுமா? அமெரிக்காவுடையதுதான் அந்தப் பெருமை. பத்தாயிரம் டாலர் நோட்டுகள் 1808லிருந்து 1873 வரை அச்சிடப் பட்டன. 1969ல் அமெரிக்க அரசு கரு வூலம் ஒரு முடிவு எடுத்தது. அதன்படி அதிகபட்சமாக 100 டாலர் நோட்டு மட்டுமே அச்சிடப்படுகிறது.

பெற்ற தாய் பட்டினி கிடக்க...

ஒரு சிறந்த பேச்சாளர் இனிய பாடகராகவும் இருந்து விட்டால் எத்தனை நேரமானாலும் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்பதற்கு பேராசிரியை சாரதா நம்பி ஆரூரான் ஒரு வாழும் உதாரணம்! ஞானபாரதி அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு விருது வழங்கும் விழா (இந்த முறை அமரர் சாவியின் பெயரால் விருது, பொற்கிழி) நாரத



கான சபா மினி ஹாலில் நடந்தது. ஏவிஎம் சரவணன் தலைமை தாங்கி விருதுகளை வழங்க, 'இயல், இசை, நாடகம், அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் ஒரு மணி நேரம் சிறப்புரை நிகழ்த்திய ஆரூரான் வெளுத்து வாங்கிவிட்டார்.

''கர்நாடக கச்சேரிகளில் தெலுங்கில் பாடட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்காக தமிழிசையைத் துக்கடாவாகப் பாடுவது இன்றும் அப்படியேதான் நீடிக்கிறது. பெற்ற தாய் பட்டினி கிடக்க, பக்கத்து விட்டு அம்மாவுக்கு மட்டும் வயிறு முட்ட சாப்பாடு போடுவது அநியாயம்'' என்று கொதித்தவர் தாலாட்டு, சங்கப் பாட்டு, பாரதி என்று இனிமையாகப் பாடி அசத்திவிட்டார். விழா குழுவினரும் ஆரூரான் முழு நேரக் கச்சேரியே செய்யலாம். முழுமையான பயிற்சியோடு வந்தால் அடுத்த சீசனில் வாய்ப்புத் தருவதாகச் சொல்ல, கரவொலி காதைப் பிளந்தது.

எழுத்துக்காக கலைமாமணி விக்ரமனுக்கும் இசைக்காக நாதபிரம்மம் டி.வி. கோபால கிருஷ்ணனுக்கும் ஓவியத்துக்காக மணியம்செல்வனுக்கும் விருது வழங்கப்பட்டதில் தேர்வுக்குழுவின் முதிர்ச்சியை உணர முடிந்தது.

- ஜீன்ஸ் பாய்

களில் இந்தியா தாங்க வேண்டிய நிலைமை...''

''எந்த மாறுதலையும் தனக்கேற்றபடி இந்தத் தேசம் மாற்றிக் கொள்ளும். தானும் மாறிக் கொள்ளும்.''

பேச்சு தொடர்ந்தது. ரஞ்சியின் கண்கள் தன்னையறியாமல் மூடத் துவகின. மூன்று கண்டங்களில் பத்து நாட்கள் கழித்ததால், தூக்க நேரம் குழம்பிப் போன உடல் களைப்பு, சுவையான பேச்சை இருந்து கேட்க முடியவில்லையே. வருத்தம் தெரிவித்து விடை பெற்றுக்கொண்டாள்.

வாசல் வரை வந்து வழியனுப்பிய வர்மா அவளை நன்றாக ஓய்வெடுக்கச் சொன்னார். ''நாளை மதியம், பார்க் ஷெரட்டன்'' என்று நினைவுபடுத்திக் கார்க் கதவை மூடினார். நல்ல மனிதர்.

பின்புறக் கார் சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள் ரஞ்சி. தானே கார் ஓட்டிப் பழகியவளுக்கு இப்படி 'ஓட்டப்படுவது' வினோதமாய்த் தெரிந்தது. திறந்த கார்ச் சன்னல்கள் வழியே காற்று சிலுசிலுப்பதுமே வித்தியாசம்தான். கோழித் தூக்கம் கலைந்து நல்ல விழிப்பு.

கார்ச் சன்னலின் வெளியே பார்த்தாள். இரவுச் சென்னை வித்தியாசமாய் இருந்தது. கடைகள் மூடி, வெறிச்சோடிக் கிடந்த சாலைகள் சோடியம் விளக்கொளியில் விரிந்து வெளிறித் தெரிந்தன. காட்சி மாறிக் கொண்டேயிருக்கும் 'எலெக்ட்ரானிக் பில் போர்டு'களுடன், 'பளீர்' சாயமும் ஜிகினாவும் பூசிய பழைய பாணி 'போர்'டுகள் நம்பிக்கையுடன் போட்டி போட்டன. இந்தப் பளபளப்புகளின் பின்னால் கட்டடங்களின் இருண்ட நிழல் வடிவங்கள். 'சர்ரியல் சென்னை.'

தங்கையின் வீடு போய்ச் சேர்ந்ததும், க்ரிஸ்ஸையும் அனுகாவையும் தொலைபேசியில் கூப்பிட வேண்டும் - அங்கு இன்னும் நடுப்பகல்தான். பிறகு, தங்கையுடன் வெகு நேரம் கதையளக்கலாம்.

மூன்று கண்டங்களிலும் பார்த்தவை, கேட்டவை. இன்று சந்தித்த தொழிலதிபரின் பேச்சு. மற்ற பேச்சுகள். அவள் எண்ணங்கள், மனம் எல்லாவற்றையும் அலசித் தெளிந்திருந்தது. நிறுவனத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சம்மதம் என்று ஏ.ஜே.யிடம் நாளை தெரிவித்தால் போதும்.

(தொடரும்)

ஒரு மின்னஞ்சல்! ஒரு மரம்!



வர்த்தகக் கண்காட்சிக்குப் புகழ் பெற்ற தீவுத் திடலில், அதுவும் பட்டப் பகல் பத்து மணிக்கு 'ஆழ்வார்ப்பேட்டை ஆண்டவர் வாழ்க!' என்று கோஷம் எழுந்தது! உள்ளே நுழைந்த கமல்ஹாசன் மரக் கன்று நட்டுக் கொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து இந்திய ராணுவத்தின் மேஜர் ஜெனரல் ஏ.எஸ்.ஜாம்வால் மரக்கன்று நட, போலீஸ்காவலை மீறி கமலின் ரசிகர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து ஊடுருவிட்டார்கள். ஆனால் விழாவுக்கு வந்திருந்த அனைவரது பாராட்டையும் அள்ளிக் கொண்டது மரம் நடும் விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த சத்தியம் இன்ஃபோவே லிமிடெட் நிறுவனம்தான்.

"மரம் நடும் விழாவில் என்னய்யா புதுமை? ஊருக்கு ஊர் பந்தாவுக்காக நடப்பதுதானே! மரத்தை நடவு செய்துவிட்டு அதோடு போய்விடுவார்கள். அதை அடுத்த நாளே ஆடோ மாடோ கடித்து, கபளீகரம் செய்துவிடும்! அல்லது தண்ணீர் ஊற்ற ஆளில்லாமல் பட்டுப் போய்விடும்." இதுதானே உங்கள் அங்கலாய்ப்பு! ஆனால் இவர்கள் மரம் நட்டிருக்கும் பின்னணியே வேறு.

"சத்தியம் இன்ஃபோவே நிறுவனம் தமது சிஃபி டாட் காம் தலைவாசல் இணைய தளத்தில் 'க்ரீன் மெயில்' (பசுமை அஞ்சல்) என்ற புதிய மின்னஞ்சல் சேவையைத் தொடங்கியிருக்கிறது. இதன் மூலம் அனுப்பப்படும் ஒவ்வொரு மின்னஞ்சலுக்கும் ஒரு மரத்தை நட்டு பராமரிக்க முன் வந்திருக்கிறது சத்யம். கடிதங்களுக்காக செலவு செய்யப்படும் காகிதங்களைக் குறைக்கவும் காகிதங்களுக்காக அழிக்கப்படும் காடுகளைக் காக்கவும் உதவும் விதமாக தொடங்கப்பட்டிருக்கும் இந்த சிஃபி கிரீன் மெயில் பசுமைப் புரட்சியைத்தான், கமல்ஹாசனும், மேஜர் ஜெனரல் ஜாம்வாலும் தீவுத்திடலில் தொடங்கி வைத்தார்கள். தீவுத் திடலில் மட்டும் ஆயிரத்து ஐந்நூறு கன்றுகள் நடப்பட்டுள்ளன.

"நடுவதோடு மட்டுமல்லாமல் மரக் கன்று நன்கு வளரும் வரை முதல் ஆறு மாத காலம் பராமரிப்புச் செலவு முழுவதையும் சத்தியம் ஏற்றுக் கொள்கிறது. தவிர சமூகக் காடுகள் வளர்ப்பதில் அனுபவம் கொண்ட பயோலிங்க் இண்டியா நிறுவனத்திடம் முழு பொறுப்பையும் ஒப்படைத்திருக்கிறோம். கன்றுகளின் வளர்ச்சியைக் கண்காணித்து எங்களுக்கு ஆய்வறிக்கை தரும் பொறுப்பை சென்னையைச் சேர்ந்த சிபி ராமஸ்வாமி சுற்றுச் சூழல் அமைப்பிடம் ஒப்படைத்திருக்கிறோம்" என்கிறார் சிஃபியின் தலைமை நிர்வாகியான ஆர்.ராமராஜ்.

- ஸ்ரீசக்கரம்

உயிர் போனால் என்ன?

'தமிழ்ப் பதிப்புலகில் ஒரு வித்தியாசமான முயற்சி' என்று க. அபிராமி எழுதியுள்ள 'செய்தியே சுவாசமாய்' புத்தகத்தைக் குறிப்பிடலாம். உலக அளவிலும், அகில இந்திய அளவிலும் முத்திரை பதித்துள்ள பத்திரிகையாளர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் பற்றி பல சுவையான தகவல்களைத் திரட்டிக் கொடுத்திருக்கிறார். சில துளிகள் :



● டெஹல்கா.காம் இணைய தளம் மூலமாக கிரிக்கெட் சூதாட்டத்தையும், ராணுவ பேர ஊழல்களையும் வெளியிட்டுப் பெரும் பரபரப்பூட்டியவர் தருண் தேஜ்பால். "உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என நீங்கள் பயப்படவில்லையா?'' என்று கேட்டபோது, "இல்லை; ஊழல்களைப் பதிவு செய்தபோதுதான் என் உயிருக்கு ஆபத்து என்றால், ஊழல்கள் வெளிப்படாமலேயே போகுமே என்றுதான் நான் ரொம்ப பயந்தேன். இப்போதுதான் எல்லாம் அம்பலமாகி விட்டதே! இனி உயிரைப் பற்றி பயமே இல்லை" என்கிறார் கூலாக.

● எந்தச் செய்தியானாலும், எப்பாடுபட்டாவது தகுந்தவரிடம் கேட்டு உறுதி செய்து கொண்ட பின்னரே எழுதும் வழக்கமுடையவர் ரஞ்சன் ஜா. இவருக்குப் பல அரசியல்வாதிகள் நண்பர்கள். ஒருநாள் மாதராவ் சிந்தியா, கான்பூரில் தாம் பேசவிருந்த கூட்டத்துக்கு ரஞ்சனை அழைத்தார். துரதிருஷ்டவசமாக அவர்கள் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகிவிட, சிந்தியாவுடன் சேர்ந்து ரஞ்சனும் மரணமடைந்தார்.

● கார்கில் போரை நேரடியாகப் பதிவு செய்ததன் மூலம் பிரபலமானவர் ஸ்டார் நியூஸ் செய்தி வாசிப்பாளரும், என்.டி.டி.வி நிருபருமான பர்கா தத். போர் முனையிலிருந்து சூடாகவும், துல்லியமாகவும் தகவல் சேகரித்து அளித்ததற்காக, நான்கு இதழியல் பரிசுகளைப் பெற்றார் தத்.

● குஜராத் பூகம்பத்தால், கட்ச் பகுதி தரை மட்டமான போது 'கட்ச் மித்ரா' நாளிதழின் மஹிம் பாண்டி செயல்பட்ட விதம் அபாரமானது. "தண்ணீர், மின்சாரம் இல்லாமல், வெளி உலகிலிருந்து கட்ச் பகுதி துண்டிக்கப்பட்ட நிலையில், பத்திரிகை அலுவலகக் கட்டடத்துக்கு வெளியில் கூடாரம் அமைத்துப் பணியாற்றினோம். பூகம்ப சேதம் பற்றி விரிவான முறையில் தகவல்கள் சேகரித்து, இரு நூறு மைல்கள் பயணம் செய்து ராஜ்கோட் நகரில் அச்சிட்டு, நாளிதழை வெளியிட்டோம். பதினைந்து நாட்கள் நாங்கள் கடுமையான சவால்களைச் சந்தித்து, பத்திரிகையை வெளிக்கொண்டு வந்த அனுபவம் மறக்க முடியாதது'' என்று நினைவுகளை அசை போடுகிறார் மஹிம் பாண்டி.

● காஷ்மீர் செய்திகளைப் பதிவு செய்து வரும் நிருபர் முசாமில் ஜலீல். "முதல் தடவையாக ஸ்ரீநகர் காவல் நிலையம் ஒன்றில் வன்முறைக்குப் பலியானச் சடலங்களை நிருபர் என்ற முறையில் பார்த்த தினத்தன்று இரவு, என்னால் உணவு உட்கொள்ள முடியவில்லை; தூங்க முடியவில்லை. ஆனால் நாளடைவில் சடலங்களை, செய்திகளாய்ப் பார்க்கக் கற்றுக் கொண்டேன். என் நெருங்கிய நண்பன் வன்முறைக்குப் பலியான போது, துக்கம் வரவில்லை. நான் மனிதத்தன்மையை இழந்து விட்டேனோ என்று எனக்கே சந்தேகம் வந்தது. இந்த யுத்த பூமியில் வேறு எதை எதிர்பார்ப்பது?'' என்கிறார் ஜலீல்.

● எழுபது வயது பரஜாமணி சிங், மணிப்பூர் நியூஸில் பணியாற்றியவர். நேருக்கு நேர் தலையில் சுடப்பட்டு இறந்தார். அவர் தமக்கு வந்த கொலை மிரட்டல்கள் குறித்து சொன்ன கருத்து நெகிழச் செய்யும் ஒன்று : "நான் இது போன்ற மிரட்டல்களை வரவேற்கிறேன். ஏனெனில், இதன் மூலம், மிரட்டல்காரனின் மனத்தில் உள்ள கோபம் சிறிது குறையக்கூடும் அல்லவா?''

தொகுப்பு : மௌலி

செய்தியே சுவாசமாய், வெளியீடு: தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-17 விலை ரூ. 60/-

'ஐயோ! இதென்ன விபரீதம்...' என பதறித் துடிக்கும்படியான கொடிய நோய் கண்டபோதும், மனோதைரியத்துடன் போராடி அதிலிருந்து மீண்ட வெங்கடேஸ்வரனின் உண்மை அனுபவம்:



• வெங்கடேஸ்வரன்

"மோதி மிதித்து

பெசன்ட் நகர் கடற்கரையில் அதிகாலை வாக்கிங் போவது எனது பல வருடப் பழக்கம்! அன்றைக்கும் பீச்சுக்குப் போய்விட்டுத் திரும்பினேன்.

வீட்டுக்கு வரும்போதே சோர்வாக இருந்தது. கால்கள் தள்ளாடின. இதயப் படபடப்பு அதிகரித்து, ஒருவித சங்கடம் இம்சை செய்தது.

"என்னடா... என்னவோ போலிருக்கியே... உடம்பு சரியில்லையா?" என்னைப் பார்த்தவுடனேயே அம்மா கேட்டுவிட்டாள். தாய் மனசுக்குள் என்னவோ ஓர் உள்ளுணர்வு.

''இல்லையம்மா... நார்மலாதானிருக்கேன்'' சமாளித்து விட்டு, அறைக்குப் போனேன். சட்டையைக் கழற்ற முயன்றேன்.

கையைத் தூக்க முடியவில்லை. சிறிது நேரத்தில் கால்களிலும் உணர்ச்சி இல்லை. என் தம்பியிடம் என் நிலைமையைக் கூறினேன். அவனுக்கு 'சம்திங் சீரியஸ்' என்று தோன்றியிருக்க வேண்டும். உடனே, ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டது.

காலிலிருந்து இந்த பாதிப்பு மேல் நோக்கி அதிகரிப்பதாக கண்டுபிடிக்கப் பட்டது. சுவாச உறுப்புகள் சரியாக இயங்கவில்லை. 'வெண்டிலேட்டர்' போட ஆலோசித்தார்கள். ஆனால் நான் ஒப்புக்கொள்ளவில்லை.

''உங்கள் தொண்டையில் ஏதேனும் அடைப்பது போன்ற உணர்வு இருந்தால், உடனே தெரிவியுங்கள்'' என்று டாக்டர் சொன்னார்.

என்னால் சரிவர மூச்சு விட முடியவில்லை. இரவு முழுக்க கொட்ட கொட்ட விழித்தபடி படுத்திருந்தேன். பொட்டு தூக்கமில்லை. உருவமில்லாத ஏதோ ஒரு துஷ்டத்தன்மை மெள்ள மெள்ள என்னை ஆக்ரமிப்பதை உணர முடிந்தது.

"முடியாது... நான் விட்டுத் தர மாட்டேன்... மனந்தளர மாட்டேன். என்னை நீ ஒன்றும் பண்ண முடியாது. என்னை நானே சரி செய்து கொள்வேன்'' எழுந்து உட்கார்ந்து, பிராணாயாமம் செய்ய ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் வெகு சிரமமாயிருந்த பயிற்சி, பிறகு இலகுவானது.

மறுநாள் காலை மார்புக் கூட்டைப்

விட்டேன்"

பரிசோதித்தார்கள். நல்ல முன்னேற்றம் தெரிந்தது. நான் பிராணாயாமம் செய்ததைச் சொன்னேன். டாக்டர் புன்னகைத்தார். அவர் நம்பினாரோ இல்லையோ, என்னுடைய மூச்சு சீரடைந்தது பிராணாயாமத்தால்தான் என்று திடமாக நம்பினேன்.

டாக்டர், என்னை நிற்க வைக்க முயன்றார். நான் மடங்கி விழுந்தேன். கைகளையும் தூக்க வரவில்லை. மேலும் சில பரிசோதனைகள்... ஆலோசனைகள்... இறுதியில் 'குலியன் பாரே' என்ற நோய் தாக்கியிருப்பதாகச் சொன்னார்கள்.

குலியன் பாரே! அப்படியொரு நோய் இருப்பதே எனக்கு அன்றைக்குத்தான் தெரிந்தது. சகல வசதிகளும் உள்ள பிரபல மருத்துவமனைக்கு என்னை மாற்றினார்கள். அங்கேயும் ஏகப்பட்ட பரிசோதனைகள்.

'லம்பார் பங்க்சர்' செய்தார்கள். முதுகுத் தண்டுவடத்திலிருந்து நீரை எடுத்துப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, 'குலியன் பாரே'தான் என்று முடிவு செய்தார்கள்.

"இது நரம்புகளைத் தாக்கும் அபூர்வ நோய். இதற்கு மருந்து கிடையாது. உங்கள் ரத்தத்தில் காமா குளோபிலின் மருந்தைச் செலுத்துவோம். பாசிடிவ்வான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். எங்களுடன் ஒத்துழையுங்கள்" என்றார் டாக்டர்.

"நான் குணமாவேனா டாக்டர்?"

"லெட் அஸ் ஹோப் ஃபார் தி பெஸ்ட்."

"எவ்வளவு நாளாகும்?"

"நீங்கள் நார்மலாக இரண்டு வருடம் கூட ஆகலாம். நல்லதே நினையுங்கள்" டாகடர் ஆறுதலாகப் பேசினார்.

சிகிச்சை தொடர்ந்தது. ஓர் அறையில் தனிமையிலிருக்க பிடிக்காமல், பொதுப்பிரிவில் சேர்ந்தேன். என்னுடன் ஆஸ்பத்திரியில் யாரும் இருக்கவில்லை. மற்றவர்களை நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

காலையில் எழுந்து, 'அட்டென்டர்' உதவியுடன் குளித்துவிட்டு, நீட்டாக டிரெஸ் செய்துகொள்வேன். நர்ஸ், டாக்டர் வரும்போது ஃப்ரெஷ்ஷாக இருப்பேன். டேப்ரிகார்டரில் சுப்ரபாதம் போட்டு விடுவேன். பக்கத்து நோயாளிகளுடன் பேசி அவர்களுக்கு 'பெப்' கொடுப்பேன். சின்ன ரேடியோ வைத்திருந்தேன். அதில் பொழுதுபோய்விடும்.

ஒருநாள்கூட நான் அழுததில்லை. மனச்சோர்வு ஏற்பட்டால், உடனே ஏதாவது செய்து உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு விடுவேன். பிராணாயாமம், தியானம் இரண்டையும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தேன்.



டாக்டர் எஸ்.எஸ்.கே. அய்யர்

"என் பி.பி. லெவல் எப்படி இருக்கு? என்னை எப்போது வீட்டுக்கு அனுப்புவீர்கள்?" என்று டாக்டர்களைத் துளைத் தெடுக்காமல், ஒவ்வொரு வினாடியும் ஜாலியாக இருக்கும்படி பார்த்துக் கொண்டேன்.

சில வாரங்களில் என் உடம்பு சரியானது. ஆனாலும் என்னால் நடக்க முடியவில்லை. பிசியோதெரபி ஆரம்பித்தார்கள். காலை ஒன்றரை மணி நேரம், மாலை ஒன்றரை மணி நேரம். நான் கொஞ்சம்கூட முகம் சுணங்கவில்லை.

"நான் நடப்பேன். கட்டாயம் என்

னால் முடியும்'' என்று திடமாக நம்பினேன்.

நான் வீட்டுக்கு அனுப்பப்பட்டேன். என் வீட்டில் மற்றவர்களுக்கு நம்பிக்கை யில்லை. நான் இனிமேல் படுக்கையிலே தான் இருக்கப் போகிறேன் என்று நினைத்தேன். ''சரி... ஒரு நர்ஸை ஏற்பாடு செய்யலாம்'' என்று அவர்கள் பேசிக் கொண்டது காதில் விழுந்தது.

எனது அறுபத்தெட்டாவது வயதில் நான் மீண்டும் என் குழந்தை பிராயத் துக்குப் போனேன். ஆறு மாத குழந்தை போல தவழ ஆரம்பித்தேன். முட்டி இரண்டும் சிராய்த்து, எரிய ஆரம்பித்தால், உருண்டு உருண்டு போவேன். 'நடை வண்டி' போல ஒரு மரவண்டியை என் தம்பி செய்து கொடுத்தான். அதை வைத் துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

நான் செய்யும் இந்த அமர்க்களத்தைப் பார்த்து என் மகனுக்குக் கோபமே வந்துவிட்டது.

''ஏம்பா... ஒரு நர்ஸை உதவிக்கு வைத் துக் கொள்ளக்கூடாதா? ஏன் இப்படி கஷ்டப்பட வேண்டும்?'' என்று கோபித் துக் கொண்டான். நான் கேட்கவே யில்லை.

முயற்சி... பயிற்சி... பிடிவாதம்!

பிஸியோதெரபி பயிற்சிகள் ஒரு பக் கம் இருந்தாலும் நானும் சில பயிற்சிகளை விடாமல் செய்துகொண்டிருந்தேன். ராட் டினத்தை ஜன்னலில் கட்டிவிட்டு, கயிற் றில் மணல் மூட்டையைக் கட்டி இழுத் துப் பயிற்சி செய்வேன். மாடிப்படி ஏறி ஏறி இறங்குவேன். சைக்ளிங் செய்வேன். என்னுடைய இந்த முயற்சிகளில் எனக்குப் பக்கபலமாக இருந்தவர் என் தம்பி ரகு பதி. நடைவண்டியா, சைக்கிளா, என்ன கேட்டாலும் உடனே வாங்கிக்கொண்டு வந்து நிற்பார். இரண்டே மாதத்தில் நான் மெதுவாக நடக்க ஆரம்பித்தேன்.

''உங்களால் பஸ்ஸில் போக முடியாது'' என்பார்கள். ஏன் முடியாது...? பஸ்ஸில் பிரயாணம் செய்ய ஆரம்பித்தேன்.

''வெளியூர் பயணம் கஷ்டமாச்சே!'' என்பார்கள்.

ரயிலில் பெங்களூர் போய்விட்டு வந்தேன். நாளடைவில் 'குலியன் பாரே'வைச் சுத்தமாக மறந்து விட்டேன்.

இப்போது நான் படு நார்மலாக இருக்கிறேன். என் காரை நானே ஓட்டுகிறேன். 'மென்டார்ஸ்' சேவை அமைப்பில் சேர்ந்து தொண்டு புரிகிறேன். தினமும் பீச்சில் வாக்கிங் போகிறேன். ஐயாம் ஆல்ரைட்!

ஆனால் மனத்தில் ஒரு சின்ன நெருடல். எனக்குத் தெரிந்த இருவர் இதே 'குலியன் பாரே' நோயால், பாதிக்கப்பட்டனர். ஒருவர் சிகிச்சைக்காக வெளி நாடு சென்றார். இன்னொருவர் படுத்த படுக்கை ஆனார். இப்போது இருவருமே உயிருடன் இல்லை. அவர்கள் மரணம் என்னை மிகவும் பாதித்தது. ஏன் அவர்கள் நோய்க்குப் பணிந்தார்கள்? ஏன் துணிந்து போராடவில்லை?

ஏனென்றால் அவர்கள் மனமொடிந்து போனார்கள். நம்பிக்கை இழந்தார்கள்.

ஆகவே, ஏதேனும் பிரச்னை வந்தால், அதை எதிர்த்து நில்லுங்கள். பாஸிடிவ் எண்ணங்கள் கொண்டு நோயைத் துரத்துங்கள். நிச்சயம் வாழ்வு கிடைக்கும்!

'குலியன்பாரே... இதென்ன புதுவிதமான நோய்?" என்று நரம்பியல் நிபுணர் கர்னல் டாக்டர் எஸ்.எஸ்.கே. அய்யரிடம் கேட்டோம்.

'குலியன்' 'பாரே' என்று பெயர் கொண்ட மேலை நாட்டு மருத்துவ நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இலட்சத்தில் ஒருவருக்கு வரக் கூடியது. முதுகுத் தண்டுவடத்திலிருந்து செல்லும் நரம்புகள் பாதிக்கப்படுவதால் இந்நோய் ஏற்படுகிறது. நரம்புகளைச் சுற்றி 'மையிலின்' என்கிற காப்புறை இருக்கிறது. இதனைத் தாக்கும் வைரஸ்கள், நரம்புகளைச் செயலிழக்கச் செய்கின்றன. ஜலதோஷம், வைரஸ் போன்ற சாதாரண நோய் வந்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குப் பிறகு 'குலியன் பாரே' நோய் ஏற்படலாம்.

முதலில் கை, கால் செயலிழக்கும். மூச்சுத் திணறல் ஏற்படும். எதையும் விழுங்க முடியாது. உடனடியாக கவனிக்கப்பட்டு, சிகிச்சை தரப்பட்டால், அபாயமில்லை. நல்ல உணவு, நல்ல ஓய்வு, செவிலியர் மேற்பார்வை, பிஸியோதெரபி மூலம் குணப்படுத்தலாம்.

மிகவும் சிக்கலான கேஸ்களில் ரத்தத்திலிருக்கும் 'பிளாஸ்மா'வை மாற்றுவார்கள். இந்த வசதி பிரபல மருத்துவ மனைகளில் மட்டுமே உண்டு. 'காமா குளோபுலின்' என்கிற மருந்தை நோயாளிகளின் ரத்தத்தில் செலுத்துவதும் ஒரு வகை சிகிச்சையே! இம்முறை காஸ்ட்லியானது. பத்து கேஸ்களில், எட்டு பேர் முற்றிலும் குணமாகி விடுவார்கள்.

மனோதைரியம் உள்ள நோயாளிகள் விரைவில் பழைய நிலைக்குத் திரும்பலாம்.

- ரஜினி ராஜேஷ்


படங்கள்: யோகா

பட்ஜெட் பிட்ஸ்



மிகக் குறைவான சராசரி வருமானம் கொண்ட குடிமகன் வசிக்கும் நாடு பூட்டான் என்கிறது உலக வங்கி. ஆனால் கம்போடியா, லாவோஸ், சோமாலியா, வியட்னாம் போன்ற நாடுகள் தொடர்பான இந்தப் புள்ளி விவரம் உலக வங்கியிடம் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது அர்ஜண்டினாவின் பொருளாதார வீழ்ச்சி குறித்து பரபரப்பான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. என்றாலும் உலகின் மிக மோசமான பணவீக்கம் என்பது 1946 ஜூன் மாதத்தில் ஹங்கேரியில் உண்டானதுதானாம்.



முடிவு தெரிஞ்சாகணும்!

ப்ரணா

"**நா**ம எதுக்கு இங்கே கூடியிருக்கோம்னு உங்க எல்லாருக்கும் தெரியும்னு நினைக்கிறேன்..." ரங்கபாஷ்யம் இலேசாக இழுத்தார்.

"நம்ம சங்கத் தலைவர் என்ன சொல்ல வரார்ன்னா, நம்ம தெருவுக்குன்னு ஓர் அமைப்பா, நாம இருந்தாலும், தெருவுக்குச் செய்ய வேண்டிய அடிப்படைத் தேவைகளை நாம கவனிக்கறதே இல்லை" - தொடர்ந்தார், ஸ்ரீநகர் சங்கத்தின் உப தலைவர்.

அதாவது, ஸ்ரீநகர் மேம்பாட்டுச் சங்கம்தான் இப்பொழுது கூடியுள்ளது. மாதத்துக்கு ஒருமுறை கூட்டம் நடத்த வேண்டும் என்ற உடன்பாடு இருந்தாலும் ஆறு மாதத்துக்குள் ஒரு கூட்டம் கூடிவிடும்.

எல்லோரும், பெரிய உத்தியோகத்தில் உள்ளவர்கள். ஆகையால் அனைவரும் ஒன்றாகக் கூடுவது கடினம்.

சில கூட்டங்களில், தலைவரும், உப தலைவரும் மட்டும் வந்து அரட்டை அடித்துவிட்டுச் சென்று விடுவதுமுண்டு.

இன்று கிட்டத்தட்ட எல்லோரும் வந்திருந்தனர்.

பிரச்னை இதுதான்:

தெருவுக்கென்று குப்பைத்தொட்டிகள் சரிவர இல்லாததால், எல்லோரும் வீட்டுப் பக்கத்திலேயே குப்பையைக் கொட்டுகின்றனர். தெருவே குப்பை மேடாகக் காட்சி தருகிறது. அதற்கு ஒரு முடிவு காணவே இக்கூட்டம்.

தலைவர் தொடர்ந்தார்.

"நம்ம தெருவே குப்பையும் கூளமுமா இருக்கறது ஆரோக்கியக்கேடு."

"தலைவர் சொல்றது சரிதான்.குப்பைத் தொட்டிகள் சரியா இல்லையே" – ஓர் உறுப்பினர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

"குப்பைத் தொட்டிங்கற பேர்ல தெருவுக்கு ஒண்ணு இருக்கு. அதுக்காக, எல்லோரும் அங்கே போய் கொட்ட முடியுமா? எங்க வீட்டுலேருந்துப் பார்த்தா, அதுவே கால் மைல் இருக்கும்."

"நம்ம தொகுதிக்கு வேட்பாளரா நின்னவரு, குப்பைத் தொட்டியெல்லாம் சரிவர கட்டித் தரேன்னு சொன்னாரு. ஆனா அந்தாளு ஜெயிக்கலையே."

"தெருவுக்கு மூணு குப்பைத் தொட்டியாவது தேவை"

"அப்படியே குப்பைத் தொட்டியிருந்து, அதுலே குப்பையைக் கொட்டினாலும், அதை அள்ளறதுக்கு குப்பை லாரி வரணும். ஆனா பார வண்டிங்க வர முடியாத அளவுக்கு நம்ம தெரு பாலம் உடைஞ்சுக்கிடக்கு. அதுக்கு முதல்லே வழி செய்யணும்."

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயம் சொன்னார்கள்.

"பாலத்தைச் சரி செய்ய, முயற்சி எடுக்கலாம். ஆனா, நம்ம ஏரியா பக்கம் மினி பஸ் வரதுல, தங்களுக்குப் பாதிப்பு ஏற்படுதுனு ஆட்டோகாரங்க தான் அதை உடைச்சதாவும், ஆட்டோகாரங்க ஆளுங்கட்சி ஆளுங்கன்னும் சொல்றாங்க" தலைவர் ரங்கபாஷ்யம் எதுவும் லாயக்குப்படாது என்ற ரீதியில் பேசினார்

"சரி, போனது போகட்டும். இப்ப குப்பைத்தொட்டிக்கு ஏற்பாடு பண்ணறதை பற்றிப் பேசலாமே" பிரச்னைக்குத் தீர்வு காண முனைந்தார். ஓர் உறுப்பினர்.

இடையில், டீ, பிஸ்கெட், மிக்ஸர் பொட்டலம் வந்தது. வந்ததற்கு ஓர் உருப்படியான காரியமாவது செய்ய வேண்டாமா? சாப்பிட்டுவிட்டு, தெம்பாய், விவாதித்தனர்.

"இப்ப உடனடியா, குப்பைத் தொட்டி கட்ட ஏற்பாடு பண்ணணும். அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை!" - தலைவர்.

"நாம எல்லாரும் சேர்ந்து நன்கொடை போட்டு செய்துடலாம்" என்றார் ஒருவர்.

"ஒண்ணு, ரெண்டுன்னா சரி, பத்து பதினைஞ்சு தேவைப்படும்போது, ஏதாவது ரோட்டரி சங்கத்தோட உதவியைக் கேட்கலாம். அவங்களுக்கும் வருட அறிக்கைக்கு ஒரு சாதனை கிடைச்ச மாதிரி இருக்கும். நமக்கும் வேலை முடிஞ்சா மாதிரி இருக்கும்" என்றார் இன்னொருவர்.

"முதல்லே பாலத்தைச் சரி பண்ணப் பாருங்க. மத்ததை அப்புறம் பார்க்கலாம்" - வேறொரு உறுப்பினர் கூறினார்.

"இந்தப் பிரச்னையைப் பற்றி பேசத் துவங்கிட வேண்டும் என்பதற்காகவே இந்தக் கூட்டம். ஆளுக்கொரு எண்ணம் வைத்திருக்கும் பட்சத்தில், இது விலாவரியாய் பேச வேண்டிய விஷயம். நேரம் ஆகிவிட்ட படியால், அடுத்தக் கூட்டத்திலும், இதைப் பற்றியே விவாதிப்போம்" என்று கூட்டத்தை முடித்து வைத்தார் தலைவர்.

அனைவரும் கலைந்து சென்றனர்.

அவரவர் உட்கார்ந்திருந்த மேஜையில் தேநீர் குடித்த பேப்பர் கப், காலி மிக்ஸர் பொட்டலம், பேப்பர் பிளேட்டுகள் அனாதையாய்க் கிடந்தன.



ஏடாகூடமாக, மெல்லிய காற்று ஒன்று வீசியதில், தாக்குப் பிடிக்க முடியாமல் அவை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறின.

அந்த இடமே குப்பைத் தொட்டியாய்க் காட்சியளித்தது.

அந்த அறையின் ஓரத்தில், மினுமினுப்போடும், பளபளப்போடும், சிரித்துக் கொண்டிருந்தது குப்பைக் கூடை! ○









புக் பேங்க்

ஓடும் நதியின் ஓசை - வெ. இறையன்பு

நாளிதழ் ஒன்றின் இணைப்பு மலரில் ஆசிரியர் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் கட்டுரைகளின் முதல் பகுதி இத் தொகுப்பு. ஒவ்வொரு கட்டுரையும் ஓர் உத்வேகத்தைக் கொடுக்கிறது.

"இன்று அதிகம் பயன்படுத்தும் வார்த்தை போர். அதற்கு இணையான தமிழ்ச்சொல் எது?" என்று தமிழாய்ந்த ஒருவரைக் கேட்டேன். சற்று நேரத்திற்குப் பிறகு "தமிழர்களுக்குப் பழங்காலத்தில் 'போர்' அடித்ததே இல்லை. அதனால் அது குறிக்கும் சொல் தமிழில் இல்லை" என்றார்.

– இது போன்ற புதுத் தகவல்கள் புத்தகம் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. வாசிக்க வேண்டிய நூல்.

தாகம், G3/8 மாசிலாமணி தெரு, தி. நகர்.
விலை ரூ. 50

மருத்துவம் புதிது - வசந்த் செந்தில்

வளர்ந்து கொண்டிருக்கிற மருத்துவச் செய்திகளைப் புரியும் படியாகத் தந்திருக்கிறார் இந்த டாக்டர். சின்னச் சின்ன நோய்கள், அவற்றைத் தீர்க்கும் முறைகள் குறித்து எளிமையான வார்த்தைகளில் வாசிக்க முடிவது ஆசிரியரின் வெற்றி. மருத்துவக் கட்டுரைகளைக் கூட இவ்வளவு ஜாலியாகச் சொல்ல முடியுமா?

குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, சென்னை - 17
விலை ரூ. 40.

சூரியனுக்கும் கிழக்கே - ம. திலகபாமா

கவிதைகள். "தான் ஒரு வீரியமிக்க கலைஞர் என்பதை அழுத்தமாக காட்டியிருக்கிறார் ம. திலகபாமா. அவருடைய சித்திரிப்புகள், நுட்பமான ஓவியங்களாக விரிகின்றன. 21ம் நூற்றாண்டின் தமிழ் கவிதையை அலங்கரிக்கும் சிறந்தக் கவிதைகள் இத்தொகுப்பிலும் உள்ளன" என்று முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார் பொன்னீலன்.

டாக்டர். மகேந்திரசேகர். மதி மருத்துவமனை, 51/1
ஆறுமுகம் ரோடு, சிவகாசி - 626 123. விலை ரூ. 45/-

பேராற்றல் பெற்ற பேரறிஞர்கள் - மெர்வின்

சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ, ஜான்சன், தாம்சன், மில்டன், தாமஸ்கிரே போன்ற அறிஞர்களின் வரலாறைச் சொல்கிறது இந்நூல்.

சுவாமிமலை பதிப்பகம், 3. முத்து கிருஷ்ணன் தெரு,
பாண்டிபஜார், சென்னை - 17 விலை ரூ. 60.

– கார்க்கி

பதக்க கீதா!



பெங்களூரில் நடந்த உடல் ஊனமுற்றோருக்கான விளையாட்டு போட்டிகளில் அகில இந்திய அளவில் நான்கு பதக்கங்களைப் பெற்று தேசிய சாதனை புரிந்திருக்கிறார் மதுரை மாணவியான சங்கீதா.

குண்டு எறிதல், வட்டு எறிதல், நூறு மீட்டர் சக்கர நாற்காலி ஓட்டம், 75 மீட்டர் சக்கர நாற்காலி ஓட்டங்களில் இரண்டு தங்கப் பதக்கம், 1 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கம் என்று பதக்கக் கொத்தே பெற்றுள்ள சங்கீதாவுக்கு நடக்க முடியாது.

"நான் நடக்க யாராவது ஒருத்தர் துணை வேணும் அல்லது சக்கர நாற்காலி வேணும். பல சமயங்களிலே நல்லா நடந்து போறவங்களைப் பார்க்கிறபோது எனக்குள்ளே ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்தது. பெங்களூர் போட்டிகளில் என் கூட கலந்துகொண்ட உடல் ஊனமுற்றவர்களைப் பார்த்ததும் நமக்குப் பரவாயில்லே கடவுள் இந்த அளவுக்கு விட்டிருக்காரே என்று தேற்றிக் கொண்டேன் என்னை" என்கிறார் சங்கீதா.

"இன்னும் நிறைய பதக்கங்களை வாங்கியிருப்பேன். ஒருவர் நான்கு போட்டிகளுக்கு மேல் கலந்து கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடுதான் காரணம்" என்கிறார் இவர். மதுரையிலிருந்து சென்ற 18 பேர்களில் இவர் மட்டும் தான் பதக்கங்களை அள்ளிக் கொண்டு வந்துள்ளார்.

"எங்களுக்குச் சாப்பாட்டிற்கு இல்லைன்னாலும் பரவாயில்லை. பிள்ளைகளை நல்லா படிக்க வைக்கணும்ங்கறதுதான் லட்சியம். மூணு பெண்கள். ஒரு பையன். இவள் ஊனம். அதுதான் கஷ்டமாக இருந்துட்டே இருந்தது. ஆனால் இன்னைக்கு அவளால எனக்குக் கௌரவம் கிடைச்சிருக்கு." என்று மகிழ்ச்சியோடு பேசுகிறார் சங்கீதாவின் தந்தை மாரியப்பன் - தையல் தொழிலாளி.



• பதக்கம் பெறுகிறார்

மதுரை மாவட்ட உடல் ஊனமுற்றோர் சங்கத்தில் சேர்ந்து, இன்று தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ள சங்கீதாவின் திறமையை வெளிக் கொணர்ந்தது மதுரை மாவட்ட இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்தான். இவருக்கு ஏதாவது வேலை வாய்ப்பு கிடைக்க முதல்வர் வரை முயற்சி செய்து கொண்டிருக்கிறது இந்த அமைப்பு.

— கி.சிங்காரவடிவேல்

பீரோவின் அடியில் ஏரோப்ளேன் நின்றிருந்தது. பக்கத்திலேயே ஜில்லுவின் குட்டி சிவப்புப் பந்து. வாயில் புர்ரென்று சப்தமெழுப்பி குழந்தை எச்சில் ஒழுக ஓடி வருவான். கூட்டிய சணல் கயிறில் எப்பேர்ப்பட்ட ஏரோப்ளேனும் பின்னாலேயே உருண்டு வரும். புடைவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு சியாமளா போகிற இடங்களில் கூடவே ஆஜராவான். அவள் கண் பார்வை படுகிற எல்லையில் எப்போதும் இருப்பான். கிண்ணத்தில் பிசைந்த சோறுடன் சியாமளா அவனிடம் மல்லுக்கு நிற்பாள். ஒட்டிய பருக்கையுடன் உற்சாகமாய் ஓடுவான். அவள் கண்ணே பட்டது போல் சணலில் கால் தடுக்கிக் குப்புற விழுவான். சியாமளா பதைத்து ஓடி வந்து அவனைத் தூக்குவாள். இடுப்பில் சுய பரிதாபத்தில் துரைக்கு அழுகை பொங்கும். சியாமளா அவன் விழுந்த இடத்தை அடித்து மிரட்டி பாவனை செய்வாள். அவள் அபிநயத்தில் அசந்தவனாய் குழந்தை மீண்டும் சணலைத் தேடுவான்.

பாவம் சியாமளா. குழந்தை தொலைந்த இந்த நான்கு நாட்களில் அவள் வேறு புடைவை மாற்றவில்லை. வீட்டின் இருண்ட மூலையில்



ஜபல்பூர்

வெட்டிய வாழைமரம் போல் அசையாமல் கிடந்தாள். கூட்டத்தைத் தொலைத்த அந்த பேடாகாட் யானை போல அவள் கன்னத்தில் கண்ணீர் காய்ந்திருந்தது. எதிர்வீட்டு சுமன்தான் எத்தனை நல்லவள்? சியாமளாவுக்கு ஆதரவாய் கூடவே இருந்தாள். பித்தளை அன்னபூரணியை சொம்புத் தண்ணீரில் மூழ்கடித்து அவள் தீர்ன் மழையை நிறுத்தியவள். இரவு பூராவும் கண் விழித்து காணவில்லை என்று ஜில்லுவின் அரையணாக் கயிறு அங்க அடையாளங்களுடன் சுமார் இருநூறு நோட்டீஸ்கள் தயார் செய்தாள். சோகத்தில் முடங்க விடாமல் சியாமளாவை ரிக்ஷாவில் ஏற்றி ஜபல்பூர் பூராவும் நனையாத இடங்களில் ஒட்டிவிட்டு வந்தார்கள். மௌன சாட்சியாய் கூடக் கூட எல்லா இடங்களிலும் சைக்கிளில் தொடர்ந்து வந்த சிட்டாட்ட தடகள வீரன் நாராயணன் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதையே சியாமளா நிறுத்தியிருந்தாள். குழந்தையைத் தொலைத்த தேள் கொட்டிய திருடன்.

மழை நின்று கிழக்கு வெளுத்த இரண்டாம் நாள். வாசல் சாக்கடையில் நீர்வரத்து குறைந்து கொஞ்சமாய் சலசலத்தது. எல்லா நீரும் போய்ச் சேர்கிற ஜல சமுத்திரத்தில்



ம.வே. சிவகுமார்

மினி தொடர் 4

ஆட்கள் சல்லடை போட்டுத் தேடினார்கள். நல்லவேளையாய் எதுவும் அகப்படவில்லை. ஜோஸியரும் கூட தொலைந்து போன ஜில்லுவுக்கு ஆயுள் கெட்டியென்றும் அவன் மேற்குத் திசையில் பாதுகாப்பான இடமொன்றில் இருப்பதாகவும் தான் சொன்னார். எதையும் கண்ணால் பார்க்காமல் தைரியமாய் இருந்துவிட முடியுமா? சியாமளா சுமன் மீது சாய்ந்து கொண்டாள். கண்கள் திறந்திருந்தும் காட்சிகள் பதியாமல் ரிக்ஷா அலுங்கி குலுங்கி வீடு வந்தது.

நாராயணன் உள்ளே வராமல் வாசலிலேயே நின்றிருந்தான். எந்த முகத்துடன் வீட்டிற்குள் நுழைவது? வை ராஜா வை. கும்பகோண மண்ணுக்குச் சீட்டாட்டம் சொல்லியா தெரிய வேண்டும்? அதுவும் இளம் ரத்தம். இழப்பதற்கு சொத்தும் இருந்தது. அப்புறம் என்ன? அடாத மழையில் ஆட்டம் விடாமல் தொடர்ந்தது. அப்புறம் என்ன? ஆட்டினும், கிளா வருமாய் ஆட்ட மும்முரத்தில் டைமண்ட் தொலைந்து விட்டது. இனி ஜில்லுவை அவன்

தான் கண்டு பிடிக்க வேண்டும். தவறினால் சியாமளா அவனை ஜென்மத்துக்கும் மன்னிக்க மாட்டாள்.

நாராயணன் ஒரு வேகத்தில் சைக்கிளில் ஏறினான். பிள்ளைப் பாசம் என்பது பெண்களுக்கு மட்டும் தானா? ஜில்லு அவனுடைய பையன் இல்லையா? குழந்தையை எப்படியாவது இன்று கண்டுபிடித்து விட வேண்டும். ஜபல்பூர் பூராவும் உக்கிரமாய் நாராயணன் தேடினான். வழக்கம்போல் அலைச்சலிலேயே உலகம் இருட்டி விட்டது. ரயில்வே மேம்பாலத்தடியில் நாடோடிக் கும்பல் ஒன்று முகாமிட்டிருந்தது. நம்பிக்கை வறண்ட குரலில் தொலைந்த குழந்தை பற்றி நாராயணன் விசாரித்தான். ரப்பர் துண்டுகளைத் தேடி நெருப்பில் போட்டுக் கொண்டிருந்த சோட்டு, அவனை சாயிராவிடம் அழைத்துப் போனான்.

சாயிராவுக்குத் திகைப்பாய் இருந்தது. ஜபல்பூர் ஸ்டேஷனில் அவள் குழந்தையை ஒப்படைத்து நான்கு நாட்கள் ஆகின்றன. அன்று புல்லட் வண்டியில் ஸ்டேஷன் முன் இன்ஸ்பெக்டர் பியாரேலால் இறங்கிய போது படிக்கட்டில் அவள் எழுந்து நின்றாள். அவளைப் பார்த்துக் கொண்டேதான் பியாரேலால் படியேறினான். அவன் உள்ளே நுழையும் போது அவனுடைய முரட்டுக் கால்களில் மெத்தென்று மோதி குழந்தை ஒன்று திகைத்து நிமிர்ந்தது. பியாரேலால் குழந்தையைக் குனிந்து பார்த்தான். மூன்று மணி நேரத்தில் அவன் கண்ணில்பட்ட முதல் குழந்தை.

"ஹே ராம்லால். இளவரசன் வந்து விட்டான். ஓடிப்போய் என் மகனுக்கு பிஸ்கெட் வாங்கி வா."

ராம்லால் பிஸ்கெட் கடைக்கு ஓடினான்.

"சொல்லடா என் மகனே. எங்களைத் தவிக்க விட்டு இத்தனை நாளாய் நீ எங்கே இருந்தாய்?"

பியாரேலால் குழந்தையைக் குனிந்து தூக்கினான். பூட்ஸ் சப்தம் ஒலிக்க சந்தோஷமாய் தட்டாமாலை சுற்றினான். அவனுடைய முரட்டு காக்கிச் சட்டை ஜில்லுவுக்கு உறுத்தியது. பியாரேலால் குழந்தையைத் தூக்கி தன் டேபிளில் உட்கார வைத்தான்.

சாயிராவும், சோட்டுவும் இன்ஸ்பெக்டரை வணங்கி நின்றார்கள்.

"என்ன?"

"அந்தக் குழந்தை யாருதுன்னு தெரியலே எஜமான். அதுதான் குடுத்துட்டுப் போக

"உங்க மனைவி உங்களைக் குக்கராலே அடிச்சதுக்கு நாங்க நஷ்டஈடு தரணுமா...ஏன்?"

"அந்த குக்கராலே ஒரு ஆபத்தும் வராதுன்னு வாங்கும்போது சொன்னீங்களே!"

— தஞ்சை தாமு

லாம்னு வந்தோம்."

"எங்கேருந்து திருடினீங்க?"

"அய்யோ எஜமான். அழுதுகிட்டே தெருவோட போயிட்டிருந்தது. அப்பா, அம்மா யாருன்னு தெரியலே."

"உம்."

"உங்ககிட்டே குடுத்தா நீங்க கண்டு பிடிச்சு பத்திரமா குடுத்துருவீங்கன்னு என் பொஞ்சாதி சொல்லிச்சு."

"யாரு? இந்தப் பொண்ணா?"

"ஆமாம் எஜமான்."

பியாரேலால் பர்ஸைத் திறந்து முழு ஐந்நூறு ரூபாய் நோட்டு ஒன்றை சாயிராவிடம் நீட்டினான்.

"நல்ல காரியம் செய்தாய். வைத்துக் கொள்."

"வேண்டாம் சாப். நான் என் கடமையைத் தான் செய்தேன்."

"சரி. நான் குழந்தையை உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுகிறேன். தைரியமாய்ப் புறப்படுங்கள்."

மிகுந்த மனத்திருப்தியில் சாயிராவின் அருகில் சோட்டுவும் கும்பிடு போட்டான்.

இப்போது அந்த இன்ஸ்பெக்டர் குழந்தை பற்றித் தகவல் ஒன்றுமில்லை என்று சொன்னால் இதில் என்னவோ விஷயம் இருக்க வேண்டும். "ஏ சோட்டு. நீயும் வா. ஸ்டேஷனுக்கு இவருடன் போய்க் கேட்போம்."

இருட்டில் மூவரும் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள்.

நாராயணன் முகம் பேயறைந்த மாதிரியிருந்தது. கிருஷ்ண ஜெயந்தி பாதம் போல குழந்தை நடந்த தடம் தெரிந்ததேயொழிய இன்னும் கையில் கிடைத்து விடவில்லை. ஸ்டேஷனில் அவன் புகார் கொடுக்கப் போனபோது இன்ஸ்பெக்டர் பியாரேலால் பான் பராக் வாயில் அதை சுமுக்கமாய் வாங்கிக் கொண்டான். அவசியம் கண்டு பிடித்து விடுவதாய் அவன் தலையாட்டிய போதும் நம்புகிற மாதிரிதான் இருந்தது.



ஆனால் இந்த நான்கு நாட்களாய் அவன் ஸ்டேஷனுக்குப் போன போதெல்லாம் அவனுக்குச் சரியான பதில் எதுவும் இல்லை.

"கியா?"

"குழந்தையைக் காணோமென்று கம்ப்ளெயிண்ட் கொடுத்திருந்தேன்."

"ஆமாம், ஆமாம். நினைவிருக்கிறது. ஆனால் தகவல் ஒன்றுமில்லை. அஜாக்கிரதையாக இருந்தால் அப்படித்தான். நீயே சொல்லு. இடுப்பில் கறுப்புக் கயிறு கட்டியிருக்கும். இது ஒரு அடையாளமா? படித்தவன் தானே நீ? இதை வைத்துக் கொண்டு பூரா ஜபல்பூரும் தேடியாகிவிட்டது. உன் குழந்தை கிடைக்கவில்லை. அப்புறம்?"

"உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்."

"அரே. திரும்பத் திரும்ப அதையே சொல்கிறாயே. பைத்தியமா உனக்கு?"

நாராயணன் பரிதாபமாய்க் கால் மாற்றுவான்.

"போ. எதுவும் தகவல் தெரிந்தால் சொல்லி அனுப்புகிறேன். புகார் எழுதிக் கொடுத்திருக்கிறாய் அல்லவா?"

நாராயணன் பூச்சி பறக்க நிற்பான்.

"அரே. சாஹேபிடம் சொல்லி விட்டாய் அல்லவா? தைரியமாய் வீட்டுக்குப் போ. உன் குழந்தை உயிருடன் இருந்தால் தானாய் வீடு வந்து சேரும். ஜாவ் ஜாவ்."

கான்ஸ்டபிள் ராம்லால் வார்த்தையில் நெட்டித் தள்ளுவான்.

போலீஸ் ஸ்டேஷனில்தான் ஏதோ மர்மம் தெரிந்தது. நாராயணன் சைக்கிளின் பின்னால் ஓட்டமும் நடையுமாக சாயிராவும், சோட்டுவும் வந்தார்கள்.

ஸ்டேஷன் வாசலில் பியாரேலாலின் புல்லட் வண்டியைக் காணவில்லை. டேபிளில் ஒரே ஒரு கான்ஸ்டபிள் மட்டும் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். ஸ்டேஷனுக்குச் சற்று தள்ளி மண் சட்டியில் டீ விற்ற கிழவன் யாருக்கும் சொல்லக் கூடாது என்ற நிபந்தனையுடன் ஓர் உண்மையைச் சொன்னான். குழந்தை பியாரேலால் வீட்டில்தான் இருக்கிறது. போர்பந்தர் தெருவில் பதினான்காம் நம்பர் வீடு. அவன் தான் விலாசம் சொன்னான் என்று யாருக்கும் தெரிய வேண்டாம்.

போர்பந்தர் தெருவில் பியாரேலாலின் வீடு வந்து சேர்ந்த போது பொலபொலவென விடிந்திருந்தது. வாசலில் புல்லட் வண்டி வெயிலில் பளபளத்தது. தொய்ந்த கயிற்றுக் கட்டிலில் மடியில் ஜில்லுவுடன் பியாரேலால் டீ குடித்துக் கொண்டிருந்தான். சோட்டு அவனைப் பின்பக்கத்திலிருந்து தாக்குவதாக முடிவானது. படல் கதவைத் திறந்து கொண்டு சாயிராவும், நாராயணனும் நுழைந்தார்கள். மகிழ்ச்சியில் தரையில் குதித்து ஜில்லு தகப்பனிடம் ஓடி வந்தான். சப்தத்தில் பியாரேலால் நிமிர்ந்து பார்த்தான். பைஜாமா மறைவிலிருந்து துப்பாக்கி வெளியே வந்தது. சோட்டு ஒரே தாவலில் பியாரேலாலின் பின்பக்கம் கிடுக்கிப்பிடி போட்டு நின்றான். துப்பாக்கி குறி தவறி புல்லட் வண்டியின் சீட்டில் பாய்ந்தது. இப்போது சாயிராவும் ஓடிப்போய் இன்ஸ்பெக்டர் அசைந்து விடாமல் இறுக்கிப் பிடித்தான்.

"நாராயண் சாப். குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடி விடுங்கள். எங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்."

நாராயணன் ஜில்லுவைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினான். சைக்கிளில் அவன் புறப்பட்ட போது சோட்டுவும், சாயிராவும் இன்ஸ்பெக்டர் பியாரேலாலைத் தங்கள் முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

பேண்ட் நுனி பல் சக்கரத்தில் மாட்டிக் கிழிந்து விட்டது. ஒரு கையில் குரங்குக் குட்டி போல் குழந்தையை அணைத்தபடி வேகமாய் வீடு வந்தான்.

சியாமளா குழந்தைக்கு ஆயிரம் முத்தங்கள் தந்திருப்பாள். தன் பங்குக்கு எதிர்வீட்டு சுமனும் ஜில்லுவை வாங்கி அணைத்துக் கொண்டாள். மகிழ்ச்சியில் விக்கித்து மூவரும் நின்றார்கள்.

நாராயணன் பதறிக் கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் பியாரேலால் அடிபட்ட புலி. அவனிடம் புகார் மனுவில் வீட்டு விலாசம் இருக்கிறது. எந்த நிமிடமும் அவன் ஜில்லுவைத் தேடி வருவான். அதற்குள் ஜபல்பூரை விட்டு உடனே புறப்பட வேண்டும்.

சியாமளா சுமனுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"உன்னை என்னால் மறக்கவே முடியாது."

"நான் ஜில்லுவையும், உங்களையும் நினைத்துக் கொண்டே இருப்பேன்."

"சுமன்."

"சொல்லுங்கள் பெஹன்ஜி."

"இந்த மோடாக்கள் இரண்டும் புதியவை. எங்கள் நினைவாக நீ இதை எடுத்துக் கொள்."

சியாமளாவும், சுமனும் ஒரு கணம் பரஸ்பரம் அணைத்து, கண் கலங்கினார்கள்.

"சீக்கிரம். பியாரேலால் வந்து விடுவான்."

சியாமளா அவசரம் அவசரமாய் இரண்டு சூட்கேஸ்களில் முக்கியமானவற்றை எடுத்துக் கொண்டாள்.

"இரவு ரயிலுக்குப் புறப்படுகிற வரை எங்கள் வீட்டிலேயே இருங்கள். அதுதான் உங்களுக்குப் பாதுகாப்பு."

வீட்டைப் பூட்டிக் கொண்டு ஜில்லுவுடன் சுமன் வீட்டில் நுழைந்த சற்று நேரத்துக்கெல்லாம் படபடவென்று புல்லட் வண்டியின் சப்தம் கேட்டது. உள்ளறையில் சியாமளாவின் கைகளை சுமன் தைரியத்துக்கு அழுத்தினாள். வாசல் கதவு தட்டுகிற சப்தம் கேட்டது. சுமனுடைய அப்பா கதவைத் திறந்தார். "யாரு? எதிர்வீட்டு மனிதர்களா? அவர்களைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது."

கதவை மூடி சுமனுடைய அப்பா தாழ்ப்பாள் போடுகிற சப்தம். நிலவரத்தின் தீவிரம் புரிந்து ஜில்லுவும் ஆச்சரியமாய் அமைதியாய் இருந்தான். இன்ஸ்பெக்டர் வாசலில் விசாரித்த போது ஓர் எச்சரிக்கையாய் குழந்தையின் வாயை மூடி வைக்கும்படி ஆகி விட்டது.

எதிர்வீட்டு வாசலில் புல்லட் வண்டி சப்தம் நான் பூராவும் கேட்டது.

அன்று இரவு ஜபல்பூரிலிருந்து தமிழ் நாடு திரும்புகிற இரயிலில் புறப்பட்டார்கள். வண்டி நகர்ந்தபோது ஜன்னலில் சுமனுடைய விரல்கள் பிரிய மனமில்லாமல் பிரிந்தன.

"என்ன சுவாமி. நீங்க தமிழ்க்காராளா?

எதிர்சீட்டில் கர்னாடக இசை வாத்திய கோஷ்டி வாயில் வெற்றிலை குதப்பிக் கொண்டு கேட்டது.

"ஆமாம்" என்றான் நாராயணன்.

"சீட்டாடுவேளா? ஒரு கை குறையறது. வயலின்காரருக்கு நகச்சுத்தி."

நாராயணன் தலை தயங்கியது.

"சீட்டாடுவேளோன்னோ?"

நாராயணன் சியாமளாவைப் பார்த்தான். அவள் ஜில்லுவைத் தூக்கி அவனிடம் கொடுத்தான்.

தடக் தடக் என்று வண்டி போகிற சப்தம்.


"ஸாரி சார். நான் சீட்டாடறதில்லே" என்றான் நாராயணன்.

ஜன்னலின் இதமான காற்றில் சியாமளா கண்களை மூடிக் கொண்டாள். வண்டி உற்சாகமாய் விசிலடித்து விரைந்தது. ○

(முற்றும்)


காகிதச் சிற்பி

மதுரையில் ஓவிய ஆசிரியராகப் பணிபுரியும் ப. மாணிக்கம், ஜே.கே. போர்டு காகிதத்தில், ரயில் இஞ்சின், கார், போர்வீரன், யானை என பல சிற்பங்களைத் தயாரித்துள்ளார். காகித நீராவி இஞ்சினில் ஒரு விசேஷம்! உண்மையான இஞ்சின் எப்படி இயங்குமோ அது போலவே இயங்குகிறது.



இவரது அடுத்த முயற்சி, மூளை, இதயம், சிறுநீரகம் என எல்லா உறுப்புகளும் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட ஐந்து அடி மனித உடலைக் காகிதத்தில் தயாரிப்பதுதானாம்.

படங்கள், தகவல் : மது




மரம்

காசி வில்லவன்



என்றோ ஒரு நாள்
யாரோ ஒருவரின் நினைவைச் சுமந்து
யாரோ ஒருவர் நட்ட கன்றுதான்!
காற்றின் அசைவில்
கதையாய் விரியும் கைகளை நீட்டும்
இந்தக் கன்றைச்
சிதறி ஓடிய சிறுவர் கூட்டம்
சினந்து முட்டிச் சிதைத்தது உண்டு!
மருண்டு ஓடிய மந்தை மாடுகள்
மூக்கைத் தேய்க்க முனைந்தது உண்டு!
சாகப் போகும் சந்தை மாடுகள்
வாயை வைத்து வதைத்தது உண்டு!
உழவுக் குதவா ஊரார் மாடுகள்
உரசிக் கொள்ள ஒதுங்கியது உண்டு!
ஆசைப்பட்ட ஆடுகள் தழையை
ஓசைப்படாமல் ஒடித்ததும் உண்டு!
சிறுசுகள் கழித்த சிறுநீர்ப் பெருக்கால்
உலர்ந்த உப்புக் கறைகளும் உண்டு!
சிதைக்கும் விரல்கள்
வெட்டிய குழியில் வேரை ஊன்றி
நீல வானை நிமிர்ந்து பார்க்கும் மரம்!
என்றோ ஒரு நாள்
யாரோ ஒருவரின் நினைவைச் சுமந்து
யாரோ ஒருவர் நட்ட கன்றுதான்!



தமிழர் தேசிய இயக்கத்தின் சிறப்பு மாநாடு திருச்சியில் நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏவான திருச்சி கே. சௌந்தரராஜன் செய்திருந்தார்:

● முகப்பு வாயிலில் தலைவர்களின் படங்களுடன் பழ. நெடுமாறன் – பிரபாகரன் இணைந்த உருவப்படம் பிரதானமாக இருந்ததில், புலிகள் ஆதரவு மாநாடு என்ற தோற்றம் தந்தது.



● புலித் தலைவர் பிரபாகரனின் வண்ண ப்ளோ – அப் புகைப்படங்கள், நாட்காட்டிகள் முதலானவை, புத்தகக் கடைகளில் விற்பனைக்கு இருந்தன.

● மாநாட்டுப் புத்தக அரங்குகளில் தி.க வெளியீடுகளும், ம.தி.மு.க. இதழான சங்கொலியும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அதன் நடுவிலே தென்பட்ட ஒரு புத்தகம் 'பெண்கள் சிவப்பழகு பெறுவதெப்படி?!!!

● தமிழர் தேசிய இயக்கத்துடன் பெயர் குறிப்பிடப்படாத சில தமிழ் இயக்கங்களும் (வேறென்ன? எல்லாம் தீவிரவாத இயக்கங்கள்தான்!) இணைந்துள்ளதாக மாநாட்டு மேடையில் அறிவித்தனர்.

● பேச்சாளர்களின் உரையில் கடவுள் மறுப்பும், பிராமண எதிர்ப்பும் முக்கிய அங்கம் வகித்திருந்தது.

● திரைப்பட இயக்குனர் வேலு பிரபாகரன் தம்முடைய பேச்சில், வழக்கம் போல் "கடவுளைத் தூக்கி எறி" என்றார்.

● 'தமிழ் தேசியச் செம்மல்' விருது பெற்ற எட்டு பேரில், இருவர் கவனத்தை ஈர்த்தனர். அவர்களுள் ஒருவரான கோவை ஞானி, விழாவுக்கு ஏனோ வரவில்லை. அவரது சார்பில் அவர் நண்பரொருவர் விருது பெற்றுக் கொண்டார். இன்னொருவர், தமிழகத்தில் நக்சல்பாரிகள் இயக்கம் தோன்ற வித்திட்டவரான புலவர் கு. கலியபெருமாள்.

● சுப. வீரபாண்டியன் தமது உரையில், 'தமிழர் தேசிய இயக்கத்தின் எதிரிகள், மூன்று' எனச் சுட்டிக்காட்டிப் பேசினார். முதல் எதிரி இந்திய தேசியம். இரண்டாவது எதிரி உலகமயமாக்கல் _ தனியார் மயமாதல். மூன்றாவது சாதியம் எனப் பட்டியலிட்டார்.

● "ஒரு மொழிக் கொள்கைதான் தமிழர் தேசிய இயக்கத்தின் கொள்கை எனவும், இருமொழிக் கொள்கை _ மும்மொழிக் கொள்கை என்பதெல்லாம் இங்கே எடுபடாது" எனவும் மாநாட்டில் பலரும் பேசினர்.

● காலையில், மாநாட்டுக்கு வருபவர்களை, முகப்பு வாயிலுக்கு வெளியே நின்று போலீஸ் போட்டோகிராபர் வீடியோவில் படம் பிடித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவரே மாலையில், மாநாட்டு மேடைக்கருகே வந்து படம் பிடிக்க முயன்றபோது இயக்கத்

தொண்டர்களால் வலுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்!

● நிறைவு உரையில் பழ. நெடுமாறன், "இந்திய அரசியலமைப்புச் சட்டமே முற்றிலும் மாற்றி எழுதப்பட வேண்டும்" என்றார்.



இந்திய தேசியம் - இவர்கள் எதிரியாம்!

"கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தின்போது, வீரப்பனின் தமிழ் தேசிய உணர்வு மேலீடு காரணமாகவே ராஜ்குமார் விடுதலை செய்யப்பட்டார், வேறு காரணமில்லை" என்றார்.

● தமிழ் ஈழ விடுதலைக்கு எதிராக உள்ள சக்திகள் யாவும் தமிழர் தேசிய இயக்கத்துக்கு எதிரிகள் எனவும், தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவாக உள்ள சக்திகள் எல்லாமே நேச சக்திகள் எனவும் தம் உரையில் குறிப்பிட்டார் பழ. நெடுமாறன்.

● கவிஞர் அறிவுமதி தலைமையில் கவியரங்கம். அதில் பங்கேற்றவர்களில் ஒருவர் பூங்குழலி. பழ. நெடுமாறனின் மகள். பூங்குழலி கவிதை வாசித்தபோது திடீரென டாடா சுமோ ஒன்றிலிருந்து முதியவர் ஒருவர் வந்து இறங்கினார். மேடைக்குக் கீழே பத்திரிகையாளர் வரிசையில் அமர்ந்திருந்த நெடுமாறனின் துணைவியார் அருகில் வந்தமர்ந்து அவரிடம் சில நிமிடம் பேசிக் கொண்டிருந்தார். பழ. நெடுமாறன் கீழிறங்கி வந்தார். பின்னர் மாநாட்டுப் பந்தலுக்கு வெளியே சென்று ஐந்து நிமிடம் பேசிவிட்டு உடனே தாம் வந்திருந்த காரிலேயே ஏறிப் புறப்பட்டுச் சென்று விட்டார் அந்த முதியவர். அவர் வேறு யாருமல்ல. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை!

தகவல், படங்கள்: இருள் நீக்கியான்

நல்லதா ஒரு கதை

கூர்க்கா வழி மறித்தான். அனுமதி அட்டையைக் காட்டினேன். சிரித்தான்.

"என்ன கதையா?"

நக்கல். தலையசைத்தேன். வராண்டாவில் கூட்டம். இருபது பேர் இருப்பார்கள். சரிதார் குயில்கள் நான்கு. எல்லார் பார்வையிலும் கேள்வி. இன்னொரு ஆளா? இன்னும் எத்தனை பேரோ? எல்லாரும் சுத்தமாக ஆடை அணிந்திருந்தார்கள்.

குனிந்து பார்த்துக் கொண்டேன். கவனமின்றி உடுத்தியது உறுத்தியது. அதனால் என்ன? என்னிடம் விஷயம் இருக்கிறது. எல்லோரும் அப்படித்தானோ? பூந்தொட்டி அருகில் நின்றேன். எதிரிலிருந்தவன் மெலிதாய்ச் சிரித்தான்.

"ஆரம்பிச்சாச்சா?"

தலையசைத்தான்.

"உள்ளே முதல் ஆள் போயிருக்கு. நீங்க யார்கிட்ட இருக்கீங்க?"

'இருந்தீங்க. கேள்வியை மாற்றிக் கேள், என் தாடிக்கார நண்பனே'

தலையசைத்தேன். வியப்புடன் பார்த்தான்.

"நேரடி முயற்சியா?"

அவன் கண்களைப் பார்த்தேன்.

"இன்ஸ்டிடியூட்டா?"

உதடு பிதுக்கினேன். சுவாரசியம் கலைந்தான். மஞ்சள் சரிதார் பக்கம் திரும்பினான். ஆயிற்று.

நான்கு மணி நேரங்கள். இன்னும் நான்கு பேர்தான். பசி வயிற்றைக் கிள்ளியது. ஒற்றை டீ எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்கும். சியாமளா சாப்பிட்டிருப்பாளா? குழந்தை? மனசு தவித்தது.

அவர் வெளியே வந்தார். புன்முறுவல் செய்தபடி காரில் ஏறினார். ஒன்றும் புரியவில்லை.

ஜிப்பா இளைஞன் பக்கவாட்டுக் கதவு திறந்து வந்தான்.

"இன்னும் எத்தனை பேருப்பா?" தாடிக்காரன் சொன்னான்.

"எட்டு பேர்."

தாடி சொறிந்தான்.

"ஏன், என்னாச்சு?"

"கிளம்பிட்டார்."

படப்பிடிப்பில் ஏதோ தகராறாம். பஞ்சாயத்துக்குப் போகிறார்.

"ஒண்ணு செய்றீங்களா... ரோஸ் கார்டன்தான். நீங்க அங்க போய்டுங்க."

"பார்ப்பாரா?"

"நானும் அங்கேதான் போறேன். நீங்க அங்கே வந்துடுங்க."

உள்ளே போனான்.

தாடிக்காரன் பெயர் சொன்னான். வி.ஜே.பி. ராஜ். விழிகள் விரித்தேன். 'வத்திராயிருப்பு பொன் ராஜ்.' சிரித்தேன்.

"டிபன் சாப்பிடலாமா?"

கேட்டான்.

"டீ போதுமே."

பாக்கெட் சில்லறை எல்லை வகுத்தது. தோள் குலுக்கினான். டீக் கடையில் ஹிந்தி பாட்டு.

"அசோக்குமார் போய்ட்டாராமே!"

எல்லோரும் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

"என்ன புத்தகம்?"

என் தோள் பைக்குக் கை நீட்டினான். வாங்கிப் பிரித்தான். ஜான் ஆபிரஹாம்.

"என்ன நீங்களும் கலகக்காரரா?"

"கலகம் பண்ண பூவா இடம் கொடுக்கலை வி.ஜே.பி."

சிரித்தான்.

"எத்தனை ஸ்டோரி வைச்சிருக்கீங்க?"

"நிறைய."

"பையிலே ஒண்ணும் காணோம்."

"இங்கே..."

நெற்றியைத் தொட்டுக் காண்பித்தேன்.

மதுமிதா



ரோஸ் கார்டன். களேபரமாயிருந்தது. 'சினிமினி' திருபார்தான் செய்தி சொன்னார். நடிகருக்கும், டைரக்டருக்கும் தகராறு. வி.ஐ.பி. சிரித்தான். காத்திருந்தோம். ஜிப்பா இளைஞன் வந்தான்.

"பிரச்னை தீரலை."

"என்ன விஷயம்?"

கண் சிமிட்டினான்.

"நாயகியைத் தொட்டு தொட்டு நடிக்கிறாராம்."

வி.ஐ.பி. நக்கலாய்க் கேட்டான்.

"தொடாம நடிக்க என்ன ஆர்ட் ஃபிலிமா எடுக்கறாங்க?"

"அடப் போய்யா."

ஜிப்பா தலையில் அடித்துக் கொண்டான்.

"இயக்குனரோட ஆளு அது."

"சரி... எங்க நிலைமை என்னப்பா?"

ஜிப்பா யோசித்தான்.

"கொஞ்சம் பொறுங்க."

நிறைய பொறுத்தோம்.

" 'லகான்', ஆஸ்கார் போகுதாமே! வாங்கிட்டாங்களோ?"

"பிரமாதமான படமாச்சே!"

"மான்சூன் வெட்டிங் பாத்தீங்களா?"

"போன வாரம் என் சித்தப்பா பையன் வெட்டிங். அதான் பார்த்தேன்."

ஜோக்! சிரித்தான். ஜிப்பா வந்தான்.

"ஸாரிப்பா."

"என்ன... அவரு மூடு அவுட்."

"அப்புறம்?"

"அடுத்த வாரம்தான்."

"ஏன்?"

"நைட் சிங்கப்பூர் போறார். ஜாக்கியோட மீட்டிங்."

தயங்கினோம்.

"அடுத்த வாரம், அவர் பங்களாவுக்கு வந்துடுங்க."

வி.ஐ.பி. கேட்டான்,

"நீங்க?"

"அவரோட லெஃப்ட் ஹேண்ட்."

ஜிப்பா சொல்லி விட்டு நகர்ந்தான்.

"இவனுடையது நாறின பொழப்புதான்."

வி.ஐ.பி. சிரிக்காமல் சொன்னான்.

சியாமளா இருட்டில் உட்கார்ந்திருந்தாள். மனசு குறுகுறுத்தது.

"ஏம்மா லைட் போடலை?"

போட்டான். கண்கள் கூசின.

"அனு?"

"உங்களைக் கேட்டுட்டே இருந்தது. இப்பதான் தூங்கிச்சு."

"சாப்பிட்டியா?"

மௌனமானாள்.

"போன விஷயம் என்னாச்சு?"

"ப்ச்... முடியலை."

"கார்த்தால போனீங்க...?"

"நல்ல கூட்டம். பத்து பேர் கிட்ட கதை கேட்டாரு. அதுக்குள்ளே வெளியிலே போய்ட்டார்."

"அதுக்கு இவ்வளவு நேரமா?"

"கார்டன் வரச் சொன்னார். அங்கேயும் முடியலை."

உட்கார்ந்தேன்.

என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நல்ல கதை வேணும். வேணும்னு எல்லாரும் சொல்றாங்க. நான் நிறைய வைச்சுக்கிட்டு நாயா அலையறேன். ஒருத்தனும் காது கொடுத்துக் கேட்க மாட்டேங்குறாங்க."

என் குரல் கம்மியது. சியாமளா என் தோள் தொட்டாள். ஸ்பரிசம். ஆறுதல்தான்.

"கடவுள் இருக்கார்."

இருக்கட்டும்.

அனு தூக்கத்தில் சிரித்தது. கனவில் பூ. அல்லது வண்ணத்துப் பூச்சி. நெற்றியில் முத்தமிட்டேன். தடக்கென எழுந்து உட்கார்ந்தது.

"குட்டி, தூங்கலையா?"

என் தோளை வளைத்தது.

"அப்பா... ஒரு கதை சொல்லுப்பா."

என்னுள்ளிருந்து விம்மல் வெடித்தது.

பட்ஜெட் பிட்



பிறநாடுகளிடம் மிக அதிகமான அளவில் கடன் வாங்கிய பெருமை பிரேசிலுக்குத்தான் உண்டு. ஒரு கால கட்டத்தில் 69 பில்லியன் டாலர் அளவுக்குக் கடன்பட்டு கலங்கிக் கொண்டிருந்தது பிரேசில்.

தொகுப்பு : குல்லு

"மானேஜர் சொன்ன ஜோக்குக்கு நான் சிரிக்கலைனு மற்ற எல்லா ஸ்டாஃபும் என்னை நல்லா திட்டிட்டாங்க."

"ஏன் அப்படி?"

"நான் சிரிக்காததாலதான் அவர் இன்னொரு ஜோக் சொன்னாராம்...!"

- வி. ரேவதி



"வாழ்க்கை பூரா கஷ்டப்பட்ட நம்ம முனுசாமிக்கு விருது கிடைச்சிருக்காமே! என்ன விருது?"

"வாழ்நாள் சோதனையாளர் விருது!"

- உ. ராஜாஜி



"நம்ம பையனை மெகா சீரியல்கள் ரொம்பவே பாதிச்சிருக்குங்க."

"எதை வைச்சு சொல்றே?"

"ஒரிஸ்ஸாவில் பாயும் நதி எதுன்னு கேட்டதுக்கு 'மெகாநதி'னு பதில் எழுதியிருக்கானே!"

- தி.சு. பாலசுப்பிரமணியன்.



"மாட்டுப் பண்ணையை வித்துட்டு நர்சரி ஸ்கூல் நடத்துறியே... ஏன்?"

"இங்கேதான் அதிகமா கறக்க முடியுது!"

– தஞ்சை தாமு



நாலு முறை சிரிங்க!





மித்ர —மை ஃப்ரெண்ட்



அமெரிக்க வாழ் இந்தியர்களின் சமகால வாழ்க்கைப் பின்னணியைப் படத்தின் கதையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் தொலைநோக்கு ரேவதி.

சொந்த பந்தங்களைப் பிரிந்து, கலிபோர்னிய கம்ப்யூட்டர் எஞ்ஜினியருக்கு வாழ்க்கைப்பட்டுப் போனவள் லட்சுமி. தாய்நாட்டுக் கலாசாரத்தில் முழு நம்பிக்கை கொண்ட ஒரு தமிழ்ப் பெண் கணவருக்காகவும், மகளுக்காகவும் வாழ்கிறாள். ஆனால் மேற்கத்திய கலாசாரத்தில் வளர்ந்த மகள் திவ்யாவும், பணம் சாம்பாதிப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டும் கணவன் ப்ருத்வியும் அவளது நம்பிக்கையைச் சுக்கல் நூறாகத் தகர்க்கிறார்கள். ஒரு கட்டத்தில் தனித்துவிடப்படும் லட்சுமி, தனக்காகவும் வாழக் கற்றுக் கொள்கிறாள். இறுதியில் ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்திருக்கும் அன்பும், நட்பும் தக்க சமயத்தில் புரிந்து கொள்ளப்பட்டதும் இணைகிறார்கள். லட்சுமி காத்து வரும் கலாசார மதிப்பீடுகளின் ஆன்மாவை அந்தக் குடும்பம் மீட்டுக் கொள்கிறது.

அமெரிக்காவில் வாழும் ஆயிரக் கணக்கான லட்சுமிகளின் உண்மைப் பிரதியாக சோபனா சோபித்திருக்கிறார். 'ஷாட்' தோழியின் லெஸ்பியன் அழைப்பில் நடுங்கிப்போய், தமது தோட்டத்துப் பூக்களிடம் புலம்புகிற போதாகட்டும், வீட்டை விட்டு மகள் வெளியேறிய பிறகு, "ஒரு தாயாக தோற்றுட்டேன்" என்று வீட்டுச் சுவரோடு பேசுகிற போதாகட்டும், ஆன்லைன் தோழன், பாலே வகுப்பு, பக்கத்து வீட்டுப் பையனுடன் தச்சுப் பயிற்சி என தன்னை மறு கண்டுபிடிப்பு செய்து கொண்டு உற்சாகமாய் வளைய வரும்போதாகட்டும் தேசிய விருது பெற்ற நடிகை என்பதை அற்புதமாய் நிறுவுகிறார்.

"நம்ம பொண்ணுக்கு பாய்ஃபிரெண்ட் இருந்தால் நம்மால் என்ன செய்ய முடியும்" என்று கேட்கும் ப்ருதிவி, அமெரிக்க வாழ்க்கை முறைக்கும், 'பிட்சா'வுக்கும் பழகிப்போன ஒரு சிலிக்கான்வேலி அப்பா. இந்தப் பாத்திரத்தை உணர்ந்து கச்சிதமாகச் செய்திருக்கிறார் நஷீர் அப்துல்லா. அவரது கம்பீரத் தோற்றம் அதற்கு உதவியிருக்கிறது.

"பதினெட்டு வருஷத்துக்கு முன்னாடி விட்டுட்டு வந்த உலகத்திலேயே நீ இன்னும் இருக்கே! இப்போ இந்திய மக்கள்கூட மாறிட்டாங்க..." என்று துடுக்குடன் பேசும் திவ்யா பாத்திரத்தில் தோன்றும் துருதுரு ப்ரீத்தி விஸ்சா, ஹைஸ்கோர் தட்டிக் கொண்டு போகிறார்.

அமெரிக்க புலம் பெயர் வாழ்வின் தினசரி வாழ்க்கையிலிருந்து காட்சிகளை உருவாக்கி, அன்றாடம் கேட்டுப் பழகிய வாக்கியங்களையே வசனமாக்கியிருப்பது, படத்துடன் ஒன்றிப்போக உதவுகிறது.

சின்னதும் பெரியதுமான திருப்பங்களோடு நூல் பிடித்த மாதிரி நம் கைபிடித்து அழைத்துப் போகிறது ப்ரியா, சுதா கூட்டு முயற்சியில் உருவாக்கியிருக்கும் திரைக்கதை.





ஒரு ஹாலிவுட் படத்துக்கு இணையான ஒளி அமைப்பு முறை, பாத்திரங்களின் மனநிலையைக் காட்சி தோறும் பிரதிபலிக்கும் விதமாக கோணங்கள் என்று வியப்பூட்டுகிறது பௌசியாவின் ஒளிப்பதிவு.

மெட்டுகளில் பவதாரிணி பதினாறு அடி பாய்ந்திருக்கிறார். பின்னணி இசையில் பியானோ, செல்லோ, ஸ்டிரிங்ஸ் இப்படி மேற்கத்திய வாத்தியங்களைப் பயன்படுத்தியிருந்தாலும் லைவ்வாக வாசித்து இசைக்கு ஸ்கோப் உள்ள படம் என்பதை புரிந்து கொண்டு இசையமைத்திருக்கிறார். இருந்தும் பல காட்சிகளில் வாத்தியங்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கலாம்.

அற்புதமாய் எடிட் செய்திருக்கும் பீனா இத்தனை நாள் எங்கே இருந்தார்?

ஒரு பெண்ணின் உணர்வுகளை ஒரு பெண்தான் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும் என்ற அனுபவக் கூற்றுக்குச் சாட்சியாக, படைப்பில் யதார்த்தம் நேர்த்தியாய் வெளிப்பட்டிருக்கிறது - பணியாற்றிய அனைத்து பெண் கலைஞர்களுக்கும் கிடைத்த வெற்றி.

அமெரிக்காவில் வாழும் இந்தியக் குடும்பங்களை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்துவிட்டுவந்த உணர்வைத் தரும் மித்ர மை ஃபிரெண்ட், ரேவதியைத் தேர்ந்த இயக்குனராக அடையாளம் காட்டியிருக்கிறது.

- விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்



● அந்த முதலமைச்சருக்கு, பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமில்லை, அவரது அலுவலக அறை, 'புல்லட் புரூஃப்' ஆக்கப்பட்டிருக்கிறது. அறையின் உட்புற சுவரில் இரும்புத் தகடு பொருத்தப்பட்டுள்ளது. ஜன்னல்களுக்கு குண்டு துளைக்க முடியாத கண்ணாடி போடப்பட்டுள்ளது. மத்திய அரசு மற்றும் மாநில காவல்துறையின் சிபாரிசின் பேரில்தான் இத்தனை ஏற்பாடுகளும். அந்த முதல்வர் சந்திரபாபு நாயுடு!



● 'சக்தி தள்' என்ற புதிய கட்சியைத் தொடங்கி, பா.ஜ.க.வுடன், கூட்டணி அமைத்து, உ.பி.யில் பதின்மூன்று தொகுதிகளில் வேட்பாளர்களைக் களமிறக்கினார். மேனகா காந்தி. கட்சியில் மேனகா தவிர, பிரசாரம் செய்யும் இன்னொரு வி.ஐ.பி. மேனகாவின் மகன் பெரோஸ் வருண்காந்தி. வருண் பேசிய இடங்களுக்கு நிறைய கூட்டம் வந்தது. நகைச்சுவை கலந்த அவரது பேச்சை மக்கள் ரசித்தார்கள். ஒரு தொகுதியில், வேட்பாளரை அறிமுகப்படுத்தி வருண் பேசியபோது, "சென்ற தேர்தலில், மூன்று பேரை நாங்கள் வெற்றி பெறச் செய்து, சட்டசபைக்கு அனுப்பினோம். அவர்கள் மூவருமே கட்சி மாறி, எங்களுக்குத் துரோகம் செய்து விட்டனர்" என்று குறிப்பிட்டபோது, மேடையில் இருந்த வேட்பாளர் கை தட்டி விட்டார். "நான் வயிறு எரிந்து சொல்கிறேன். நீங்கள் ரசித்துக் கைத்தட்டுகிறீர்களா? என்று சூடாக ஒரு போடு போட்டார் வருண்!

● அமிதாபின் 'குரோர்பதி' டி.வி நிகழ்ச்சி கடந்த கால சரித்திரமாகி விட்டது. அதற்குப் பதிலாக நீனா குப்தா நடத்தும் குவிஸ் ஷோ இப்போது ஒளிபரப்பாகிறது. ஆனால், இதற்கு எதிர்பார்த்த அளவு வரவேற்பு இல்லை என்பதால், சீக்கிரமே மூட்டை கட்டி விடுவார்கள் என்கிறது ஸ்டார்

டி.வி வட்டாரம்.







'புல்லட் புரூஃப்' முதலமைச்சர் ஆபீஸ்

● மத்தியப் பிரதேசம் குணா பாராளுமன்றத் தொகுதியிலும் இடைத் தேர்தல். காங்கிரஸ் சார்பில், மறைந்த மாதவராவ் சிந்தியாவின் மகன் ஜோதிராதித்யா நிறுத்தப்பட்டார். சிந்தியா குடும்பத்துத் தொகுதியான குணாவில், ராஜ்மாதா விஜய் ராஜே சிந்தியா, மாதவராவ் சிந்தியாவை அடுத்துப் போட்டியிடும் மூன்றாம் தலைமுறைக்காரர் ஜோதிராதித்யா. இவரை எதிர்த்துப் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர், சென்ற தடவை மாதவராவ் சிந்தியாவிடம் சுமார் இரண்டு லட்சம் வோட்டு வித்தியாசத்தில் தோற்றவர்.

● ராஷ்டிரபதி பவனிலிருந்து கசிந்த இரண்டு நியூஸ்:

✱ மத்திய அரசு, ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் கோப்புகளில் குறிப்புகள் இந்தியில்தான் இருக்கின்றன. குறிப்புகளைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்கு ஜனாதிபதிக்கு இந்தி தெரியும் என்றாலும் அவர் தமது குறிப்புகளை ஆங்கிலத்தில் எழுத, அவை இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுகின்றன. ஜனாதிபதி இந்தியில்தான் கையெழுத்துப் போடுகிறார்; ஆங்கிலத்தில் இல்லை.

✱ போட்டியின்றி, ஏகமனதாக அனைவரும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே, இரண்டாம் முறையாக ஜனாதிபதியாக இருக்கத் தயார் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் கே.ஆர். நாராயணன்.

● வை.கோ, டாக்டர் ராமதாஸ் போன்ற தமிழ்நாட்டுக் கட்சித் தலைவர்கள், வெகு காலமாக பா.ஜ.க தலைமைக்கு நெருக்கம் என்றாலும், திருநாவுக்கரசு தமது கட்சியை பா.ஜ.கவுடன் இணைத்திருப்பது, டெல்லி அரசியல் வட்டாரத்தில் புருவங்களை உயரச் செய்துள்ளது. நடிகை லதாவுக்கு ராஜ்ய சபா எம்.பி பதவி, தமக்கு மத்திய மந்திரி பதவி என்பது திருநாவுக்கரசு போட்டுள்ள 'டீலி'ன் அம்சங்களாம்.

- நியூஸ் பையன்

குருஜி ஏ.எஸ். ராகவன்

தலம்தோறும் தமிழ்க் கடவுள் - 15

தந்தை சொல் ஏற்று வந்த கந்தன்!

குடும்பம் என்றால் கோப - தாபங்கள் இல்லாதிருக்குமா..? கடவுளர் குடும்பத்தில்கூட அதற்கெல்லாம் குறைச்சல் இல்லை.

சிவபெருமான் சினம் கொண்டு நெற்றிக்கண் திறந்து காமனை தகனம் செய்ததும்; அதன் விளைவாக உலகிலே சிருஷ்டி நின்று போனதும்; பின்னர் காமாக்ஷியான அம்பிகை மன்மதனின் கரும்புவில்லையும் மலர் அம்புகளையும் ஏற்று சிவனை காமேஸ்வரனாக மாற்றியதும்; சிருஷ்டி தொடர உதவியதும் ஒரு கதை..

தந்தையின் புராணத்தை ஒத்த 'காஞ்சிபுர' கதை ஒன்று தனயனுக்கும் உண்டு:

பிரணவத்தின் பொருளை விளக்கும்படி பிரும்மாவை முருகன் கேட்க, அவன் 'தெரியாது' என்று பதில் சொல்ல, பால முருகன் பிரும்மாவைத் தலையில் குட்டி சிறையிட்டான். சிருஷ்டி தொழிலைத் தானே மேற்கொண்டான்!

இதையெல்லாம் பார்த்த சிவபெருமான், நந்திதேவரை அனுப்பி, பிரம்மாவை உடனே விடுவிக்கும்படி முருகனுக்கு ஆணையிட்டார். அப்படியும் மகன் சொன்ன பேச்சைக் கேட்பதாயில்லை. பின்னர் சிவபெருமான் தாமே வந்து முருகனிடம் பேசித்தான் காரியத்தை நடத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்த பிடிவாதக்கார பிள்ளை, பிரும்மாவை சிறையிலிட்டதோடு தந்தை சொல்லை மதியாமல் இருந்ததற்காக தண்டனை அனுபவிக்கும்படி ஆகிவிட்டது. பூவுலகம் சென்று, தம்மை வழிபட்டுப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளும்படி முருகனைப் பணித்தார் சிவபெருமான்!

அவ்வாறு பிராயச்சித்தம் செய்வதற்காக குமரக் கடவுள் தேடிவந்த தலம் தான் குமரகோட்டம்.

ஏகாம்ரேசுவரர் என்ற பெயருடன் பரமேசுவரன் ஆம்ர விருக்ஷ (மாமர) ரூபத்தில் விளங்குகிற காஞ்சிபுரத்துக்கு வந்து தான் குமரனும் தந்தையை நோக்கித் தவமிருந்தான். தேவ சேனாபதீசர் என்ற பெயரால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு, 'மாவடிக் கந்தன்' என்ற புதிய பெயரையும் பிரும்மாவைக் கொடுமைப்படுத்திய பாவத்திலிருந்து விமோசனத்தையும் பெற்றான்.


காஞ்சி மாநகரில் குமரகோட்டம் கோயிலே சோமாஸ்கந்த வடிவமைப்பு போல ஏகாம்ரேஸ்வரர் ஆலயத்துக்கும் காமாஷி கோயிலுக்கும் மத்தியில் அழகாக அமைந்திருக்கிறது!

இன்று முருகன் பெருமைகள் சொல்லும் நூல்களுள் முதன்மையானதாகக் கருதப்படும் கந்தபுராணம் அரங்கேறிய தலம் குமரகோட்டம்.

கச்சியப்ப சிவாச்சார்யார் என்பவர் எழுதியது கந்தபுராணம். குமரகோட்டத்தில் அர்ச்சகராக இருந்த காளத்தியப்ப சிவாச்சார்யாரின் மகன் இந்த கச்சியப்ப சிவாச்சார்யார்.

மிக இளமையிலேயே வேத, ஆகம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து தீக்ஷை பெற்றார் கச்சியப்பர். குமரகோட்டத்து முருகனை மெய்யன்புடன் ஆராதனை செய்து வந்தார்.

குமரனே அவர் கனவில் தோன்றி, தனது சரித்திரத்தை விரித்துப் பெருங்காவியமாகத் தமிழில் எழுதும்படி பணித்தான் என்பார்கள். 'கந்தபுராணம்' என்று அதற்குப் பெயரும் அவன் முன்கூட்டியே அறிவிக்க, கவிபாடியே அறியாத கச்சியப்பர் திகைத்துப்



போய் நின்றிருக்கிறார்.

அருணகிரிநாதருக்கு அடியெடுத்துக் கொடுத்ததைப் போலவே கச்சியப்பருக்கும் அடியெடுத்துக் கொடுத்து திகைக்க வைத்திருக்கிறான் முருகன்! அதன்படி 'திகட சக்கரச் செம்முகம் ஐந்து ளான்' என்று ஆரம்பித்துப் பாடியிருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

கந்தபுராணம் எழுதும் பணி முடிந்தது. அதை குமரகோட்டத்தில் அரங்கேற்ற முடிவு செய்து கூட்டமும் கூடிவிட்டது. முதலடியைப் படித்த சமயம் பார்த்து ஒரு மிகப் பெரிய புலவர் குறுக்கிட்டுக் கேள்வி எழுப்பினார்:

"திகட சக்கர' என்ற தொடருக்கு இலக்கண விதி என்ன?" என்பதே அக்கேள்வி!

கச்சியப்பரோ, "அந்த முதல் அடி முருகனே அமைத்துக் கொடுத்தது" என்று சொன்னாரேயொழிய அதற்கான இலக்கணத்தைக் கூறவில்லை!

கேள்வி எழுப்பிய மேதை, "முருகன் மொழியாயினும் அதற்கு இலக்கணமில்லாமல் ஒப்புக்கொள்ள முடியாது" என்று தடைகல் போட்டார். அவ்வளவுதான்! கந்த புராணம் அரங்கேற்றம் நின்றே போய்விட்டது!

கச்சியப்பர் மனமுடைந்து போனார். இறைவன் ஆக்ஞையை ஏற்றுச் செய்த ஒரு காரியம் இப்படி மனித குறுக்கீடால் நிறை வெய்தாமல் போய்விட்டதே என்று மீண்டும்



• கச்சியப்ப சிவாச்சாரியார்

முருகனிடமே போய் முறையிட்டார்.

மறுநாள் மீண்டும் சபை கூடியது. புலவர்கள் வரிசையிலிருந்து ஒரு 'புதுமுகப் புலவர்' எழுந்து வந்து, வீர சோழியம் என்ற நூலின் சந்தி படலத்தில், பதினெட்டாவது செய்யுளில் 'திகட சக்கரம்' என்னும் தொடருக்கு இலக்கண விதி இருக்கிறது' என்று கூறிவிட்டு மறைந்து போனார்!

அடியெடுத்துக் கொடுத்த கந்தன்தான் இலக்கண விளக்கமும் அளித்தான் என்று சொல்லத் தேவையில்லைதான்.

அரங்கேற்றத்துக்கு வந்திருந்த அத்தனை புலவர்களும் கச்சியப்பர் அடைந்த பாக்கியத்தைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து சிலிர்த்தனர்.

குமரகோட்டத்துடன் நெருங்கிய தொடர்புடைய மற்றொரு பெரியவர் பாம்பன் சுவாமிகள். இவரது மடம் சென்னை திருவான்மியூரில் இன்று இருக்கிறது. இப் பெரியவர் காஞ்சிபுரம் சென்று ஆலயங்களையெல்லாம் தரிசனம் செய்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாராம். அன்றைய நிலையில், இரைப் பாத்திகள் சூழ பசுமைக்கு நடுவே கருமையாய் மின்னிக் கொண்டிருந்தது குமரகோட்டம். அதைச் சென்று தரிசிக்காமல் கிளம்பிவிட்டார் பாம்பன் சுவாமிகள். அப்போது விரைந்தோடி வந்த ஒரு சிறுவன் அவரைத் தடுத்து, கந்தகோட்டத்தைச் சுட்டிக் காட்டி அங்கே சென்று 'தன்னை' தரிசிக்கும்படி கூறினானாம்! இதுவும் முருகனின் திருவிளையாடல் என்பதே நம்பிக்கை.


பாம்பன் சுவாமிகளை அழைத்தது போல் முருகன் நம்மை வந்து அழைக்கப் போவதில்லையாதலால், இன்று காஞ்சிபுரம் செல்லும் நாம் காமாக்ஷி அம்மனையும் ஏகாம்ரேசனையும் தரிசித்துத் திரும்ப யத்தனிக்கும்போது இந்தக் கதையை ஞாபகப் படுத்திக் கொண்டு குமரகோட்டத்தையும் மறவாமல் தரிசிக்க வேண்டும்.

மேற்கு நோக்கிய கோயில். அழகான ராஜகோபுரம் இருக்கிறது. மதில்கள் சூழ கம்பீரமாய் நிற்கிறது. சன்னிதி முன்னே பலிபீடம், கொடிமரம் மயில்வாகனம் என்று ஆகம சம்பிரதாய அமைப்பில் இருக்கிறது.

நுழைவாயிலை அடுத்து கந்தபுராண மண்டபம்! கச்சியப்பர் இங்கேதான் கந்த புராணத்தை அரங்கேற்றினார். இங்குதான் கந்தன் கவிஞனாகத் தோன்றி இலக்கணப் புதிரை விடுவித்திருக்கிறான்!

பதினாறுகால் மண்டபம் ஒன்றும் உள்ளது. பக்கத்தில் விநாயகர் சன்னிதி.

உள் பிராகாரத்தை வலம் வரும்போது 'சந்தானகணபதி' என்ற அழகான பெயருடன் இன்னொரு விநாயகரைத் தரிசிக்கிறோம்.





அர்த்த மண்டபத்தில் பார்த்தோமானால், முருகன் வழிபட்ட தேவசேனாபதீஸ்வரர் இருக்கிறார்! அவரைப் பார்க்க பார்க்க ஈசனையும் முருகனையும் ஒருசேர பார்க்கிற உணர்வு ஏற்படுகிறது.

இதோ, கச்சியப்ப சிவாச்சார்யாரின் விக்ரஹம். ஆறுமுகப் பெருமானாக முருகனின் உத்ஸவ மூர்த்தியும் இருக்கிறது. மிக அழகான திருமேனி.


பைரவர் சன்னிதிக்குப் பக்கத்தில் 'உருக்கமுள்ள பெருமாள்' என்ற அர்த்தம் பொதிந்த திருநாமத்துடன் ஒரு பெருமாள்! பிரும்மாவை முருகன் சிறையிலடைத்துவிட்டதைக் கண்டு உருகி, அவரை விடுவிக்கும்படி சிவபெருமானிடத்தில் இறைஞ்சியதால் இத்திருப்பெயர்! பிரும்ம தேவரின் உத்ஸவ மூர்த்தியையும் இத்தலத்தில் காண்கிறோம். அருணகிரிநாதருக்கும் ராமலிங்க வள்ளலாருக்கும் சந்நிதிகள் உள்ளன.

மூலவரான குமரக்கடவுள் ஒரு முகமும் நான்கு கரங்களுமாக தவக் கோலத்தில் இருக்கிறான். அபய வரத ஹஸ்தங்கள் போக மற்ற இரு கைகளிலும் ருத்ராட்ச மாலையும் கமண்டலமும் காணப்படுகின்றன. மான் தோலை ஆடையாகவும் தர்ப்பைப்புல்லை அரைஞாணாகவும் அணிந்து பிரும்மசார்ய கோலத்தில் காட்சி தருகிறான். பிரம்ம தேவனைச் சிறை வைத்த பிறகு சிருஷ்டி தொழிலுக்காக ஏற்ற திருக்கோலம் இது என்றும் சொல்லப்படுகிறது. நான்கடி உயரம். வடமேற்கு நோக்கிய முகம்.

தினம் தினம் தித்திக்கும் தேனபிஷேகம் இந்த முருகனுக்கு. தீபாவளிக்குத் தீபாவளி தான் எண்ணெய் முழுக்காட்டு!

வைகாசி மாதம் பிரும்மோத்ஸவம் நடைபெறும். ஷஷ்டி, கிருத்திகை விசேஷங்கள் பற்றிச் சொல்லவே வேண்டாம்!

• கந்தபுராணம் அரங்கேறிய மண்டபம்



காஞ்சிபுரத்தில் உள்ள பல கோயில்களி லும் காணப்படும் முருகன் சன்னிதிகள் குறித்து 44 திருப்புகழ் பாக்கள் பாடியுள்ளார் அருணகிரிநாதர். அவற்றுள் குமரகோட்டம் கந்தன் பற்றிய அருட்பா அவன் பெற்றோர் புராணத்தைத்தான் பரக்கக் கூறுகிறது! போனால் போகிறதென்று முருகன் குறவள்ளியை மணந்த குறிப்பும் அதில் வருகிறது! :

இறைவர்மாற் றற்ற செம்பொன்
வடிவம்வேற் றுப்பி ரிந்து
இடபமேற் கச்சி வந்த
உமையாள்தன்
இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக்
கிக்கு ழைந்த
இறைவர்கேட் கத்த குஞ்சொ
லுடையோனே
குறவர்கூட் டத்தில் வந்து கிழவனாய்ப்
புக்கு நின்று
குருவியோட் டித்தி ரிந்த
தவமானைக்
குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு
ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த
பெருமானே!''

'அறிவிலாப்பித்தர்' என்று தொடங்கும் இத்திருப்புகழில்,

திரியுமார்க் கத்து நிந்தை யதனைமாற்
றிப்ப ரிந்து தெளியமோ
க்ஷத்தையென்று அருள்வாயே

என நற்கதி அருள வேண்டுகிறார் அருணகிரிநாதர்.


மனத்தெளிவே நற்கதிக்கு முதல்படி என்று உணர்த்தும் இப் பாடலின் வீச்சையும் பொருளையும் உணர குமரகோட்டம் சென்று அந்த செங்கதிர்வேலன் சிவனருள் பாலனைக் கண்டு வருவோம்!

(அடுத்த வாரம்: **திருவிடைக்கழி**)

கல்கி

அடுத்த இதழ்

வேலூர் சிறப்பிதழாக மலருகிறது!





பிரபஞ்சன்

எழுதும்

'வாசனை'

நான்கு வார தொடர்கதை ஆரம்பம்!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

பாரத் ஓவர்ஸீஸ் பாங்க்

வ ழ ங் கு ம்

SHUBHAM

யூனிட் டெபாசிட் திட்டம்



வியப்பில்லை ! உண்மைதான்.

சுபம் யூனிட் டெபாசிட் திட்டம் அளிக்கும் நன்மையை உங்களுக்கு சொல்ல வேண்டும். உங்களுடைய பிக்சட் டெபாசிட்டிலிருந்து ஒரு தொகையை யூனிட்டுகளாக எடுத்துக் கொள்ளலாம். இந்த வகையில் அந்த பிக்சட் டெபாசிட்டில் மீதிப்பகுதிக்கு முழு வட்டியும் கிடைக்கும்.

வாடிக்கையாளர் நலனையே முக்கியமாகக் கருதும் பாரத் ஓவர்சீஸ் வங்கி, உங்கள் பணத்திற்கு மேலும் சிறந்த மதிப்பைப் பெற்றுத் தருவதில் உங்களுக்கு உதவுகிறது. உங்கள் பிக்சட் டெபாசிட்டிலிருந்து எப்போது வேண்டுமானாலும் ஒரு தொகையை எடுத்துக் கொள்ள, உங்கள் கிளைக்குச் செல்லுங்கள். முழுமையான பாதுகாப்புக்கு இங்கே உத்தரவாதம் உண்டு.

இந்த சுவையான திட்டத்தில் சுவைத்து மகிழ்வதோடு, அதே சமயம் வட்டம் பெற்று வளர்வதற்கும் வழி உண்டு ! மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள கிளையை அணுகவும்.

Chennai Branches: Chennai Main © 8110239 Adambakkam © 2452608 Anna Nagar © 6220201 George Town © 5384656Jafferkhanpet © 4894892 Kalakshetra Colony © 4918022 Nungambakkam © 8218551 Mylapore © 4983914 T.Nagar © 4331340

FORTUNE-CH

Bharat Overseas Bank Ltd.

A bank owned by 7 banks.

H.O: Habeeb Towers, 196 (Old No.756) Anna Salai , Chennai 600 002, Tel: 852 2983, 8520748. Fax:(91)-(044)- 8594615. Telex: 041-7493 BOB-IN E-mail : bobl@md3.vsnl.net.in

We'll be with you, right through

ஜி. கிருஷ்ணமூர்த்தி
தலைவர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka